வெளியீடு: 30-6-2008 Issued: 30-6-2008

1290
27-08-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 28, 2008—தொகுதி 43—எண் 2

Friday, the 28th March, 2008—Volume 43—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

**28–3–2008**

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

1. **வினாக்கள்–விடைகள்**—

உடுக்குறியிட்ட வினாக்கள் 201-237

2. **தகவல் கோரல்**—

(அ) பட்டுக்கோட்டை விரைவு நீதிமன்றம் பொன்னேரிக்கு மாற்றப்படுதல் 238-239

திரு. என்.ஆர். ரங்கராஜன் 238-239

*மாண்புமிகு திரு. துரைமுருகன் 239

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு 240

3. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2008* 240-241

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2008* 241-242

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, *2008* 341

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, *2008* 348-349

4. **வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதம்**—தொடர்ச்சி 242-335

திரு. இரா. குமரகுரு 242-253

*திரு. வ. முல்லைவேந்தன் 253-261, 263-267

திரு. போளூர் ம. வரதன் 268-277


11-29—1

| | பக்கங்கள் |
|---|---|
| **4. வரவு-செலவுத் திட்டம், 2008-2009, பொது விவாதம்**—தொடர்ச்சி | |
| திரு. கி. ஆறுமுகம் | 278-290 |
| திரு. என். நன்மாறன் | 290-295 |
| திரு. தி. இராமசாமி | 296-298, 304-305 |
| *டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி | 305-309 |
| டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் | 309-315 |
| *திரு. து. ரவிக்குமார் | 315-320 |
| *திரு. பெ.சு. விஜயகுமார் | 320-325 |
| திரு. மா. சந்திரகாசி | 324-330, 332-334 |
| **5. அறிவிப்புகள்**— | |
| (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007-2008 பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.) | 335 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 341 |
| (இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2008-2009 பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.) | 342 |
| (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 348 |
| (உ) பேரவை அலுவலில் மாற்றம் | 354 |
| **6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007-2008, வாக்கெடுப்பு**— | 335-340 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 335 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. முன்பண மானியக் கோரிக்கைகள், 2008-2009, வாக்கெடுப்பு**— | 342-348 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 342 |
| **8. அரசினர் தீர்மானம்**— | |
| விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் | 349-350 |
| **9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**— | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2008 | 350-351 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 350-351 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2008 | 352-353 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 352-353 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 354-355 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 15

## 2008 மார்ச் 28, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்"

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

11—

### நீர்மின் திட்டம்

***26635—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை மீதுள்ள ஆறுகளில் நீர்மின் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம் தொகுதி, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை மீதுள்ள ஆறுகளில் தடுப்பணை அமைத்து கொல்லிமலை நீர்மின் திட்டம் அக்டோபர் 2009-ல் நிறைவேற்றப்பட்டு, மின் உற்பத்தி செய்யப்படும்.

[2008 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை மீதுள்ள ஆறுகளின் நீர்மின் திட்டத்திலிருந்து திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், புலியூர் சோலைப் பகுதியில் நீர்மின் திட்டம் துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையிலே நீர்மின் திட்டம் தொடங்குவதற்கான திட்டம்தான் கையில் இருக்கிறது. அதற்காக இந்த அரசாங்கம் 63 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவிலே அந்தத் திட்டத்தை அமல்படுத்த இருக்கிறது. அதிலே ஒரே ஒரு பிரச்சினை, மைய அரசிலே வனப் பகுதியினுடைய 7.1 எக்டேர் நிலத்தை வாங்கி இந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டும். அதற்காக 14.2 எக்டேர் நிலத்தை அவர்கள் கேட்கிறார்கள். அதற்கான ஏற்பாட்டை மின் வாரியம் செய்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை பகுதியிலே பெரியாறு, கோவிலாறு என்று இரு ஆறுகள் வழியாக மிக அதிகமான தண்ணீர் அரபலீஸ்வரர் கோயில் நீர்வீழ்ச்சிக்கு வருகிறது. அந்த நீரைப் பயன்படுத்தி கீழ்ப்பகுதியான புலியூர் சோலையிலே நீர் மின் திட்டம் தொடங்க வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே நீர் மின் திட்டம் தொடங்குவதற்கான வாய்ப்பு இருந்து, இரண்டு மெகாவாட் அல்லது மூன்று மெகாவாட் அளவுக்குக்கூட மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் அங்கெல்லாம் மின் வாரியம் அதை அமல்படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலேயும் நீர்மின் திட்டத்தின்மூலம் [illegible] மெகாவாட் அளவிலே மின் உற்பத்தி செய்வதற்கான [illegible]டு அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

228103
சென்னை-600 008



2008 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையிலே நீர்மின் திட்டத்தைத் தொடங்க சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்த அவையில் ஏற்கெனவே உறுதி அளிக்கப்பட்டு அதற்கான திட்டங்கள் எல்லாம் அப்போது வகுக்கப்பட்டாலும்கூட, வனத் துறையினர் இன்னும் நிலம் கொடுக்காமல், அதாவது அங்கே நாம் 7 எக்டேர் எடுப்பதற்கு 14 எக்டேர் நிலம் கொடுக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக தடைபட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. இது குறித்து உடனடியாக மத்திய அரசிடம் பேசி, ஒரு இடத்திலே மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் வனத் துறையின் எல்லா இடங்களிலும் மத்திய அரசிடமிருந்து நாம் அனுமதிபெற்ற பிறகுதான் பணிகளைச் செய்ய வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எல்லாவற்றுக்கும் தடையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு பேசி, நம்முடைய எந்தெந்த திட்டங்கள் வனத் துறையினால் இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றிற்கெல்லாம் clearance வாங்கி—ரோடு போடுவதானாலும் சரி அல்லது—இந்த மின் திட்டத்தைத் தொடங்க வேண்டும். எப்போது இந்த மின் திட்டம் தொடங்கப்படும், எவ்வளவு மெகாவாட் இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதுபோல, இந்தத் திட்டம் 1995-லேயே தொடங்கப்பட்டது. ஆனால், மத்திய அரசாங்கத்தினுடைய, குறிப்பாக வன இலாகா நமக்குத் தேவையான நிலத்தைக் கொடுக்காத காரணத்தினாலே இது காலதாமதம் ஆகிக்கொண்டே வந்தது. இப்போது மத்தியிலே இருக்கக்கூடிய அமைச்சர், முன்னாள் வனத் துறை அமைச்சர் திரு. ராஜா அவர்களிடம் சொல்லி, இதற்கான அனுமதியை உடனடியாகப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவரும் அந்த இலாகா அதிகாரிகளோடு கலந்துபேசி இப்போது 14.2 எக்டேர் நிலத்தை தமிழக அரசு தருமானால், 7.1 எக்டேர் நிலத்தை வன இலாகாவிலிருந்து

[2008 மார்ச் 28

கொடுப்பதற்கு அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அதனால்தான், 2009 அக்டோபர் மாதத்திலே இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று உறுதியாகத் தெரிவித்தேன். இதனாலே நமக்கு 20 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைப் பகுதிகளிலே உள்ள ஆறுகளிலே நீர் மின்திட்டம் தொடங்குவது குறித்த கேள்வி இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. அதேபோல ஒகேனக்கல் நீர்மின் திட்டத்தைப் பற்றி இந்த அரசு என்ன கருதுகிறது? அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா? ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள் தூத்துக்குடி, மேட்டூரிலே தொடங்கப்படும் என்று சொல்லப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஏற்கெனவே ஒகேனக்கல் நீர்மின் திட்டத்தைப் பற்றி நான் பதில் தந்திருக்கிறேன். ஒகேனக்கல் நீர்மின் திட்டத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்தால் நமக்கு 150 மெகாவாட் அளவிற்கு மின்சாரம் கிடைக்கும். அதேபோல, கர்நாடகா மாநிலத்திலிருக்கக்கூடிய அணைகளிலேயும் நாம் நீர்மின் திட்டங்களை அமல்படுத்த வேண்டும். ஆனால் இரண்டு மாநிலங்களுக்கும் இன்னும் தண்ணீர் பிரச்சினை தீராமல் இருக்கிற காரணத்தால் மத்திய அரசாங்கத்தினுடைய National Hydro Power Corporation ஒரு கருத்து தெரிவித்தார்கள். இரண்டு மாநிலமும் மின்சாரத்தைத் தயாரிக்க வேண்டாம், நாங்கள் எங்களுடைய செலவிலேயே மின்சாரத்தைத் தயாரிக்கிறோம், இரண்டு மாநிலங்களும் ஒப்புதல் தாருங்கள் என்று கேட்டார்கள். அதற்கு நானும், கர்நாடகா மின் துறை அமைச்சரும் நம்முடைய மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களிடத்திலே உட்கார்ந்து பேசி இதற்கான விவாதம் நடத்தியபோது, தண்ணீர் எங்களுடையது, உற்பத்தியாகின்ற மின்சாரம் அனைத்தையும் கர்நாடகாவிற்கே கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். நான் அதற்கு ஒப்புதல் தரவில்லை.



2008 மார்ச் 28]

இரண்டு மாநிலத்திலேயும் எவ்வளவு தண்ணீர் இதற்காகப் பயன்படுத்தப்படுகிறதோ அந்த ratio-விலே நாம் மின்சாரத்தை எடுத்துக்கொள்ளலாம், நாம் 50:50 என்று எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். தேவையானால் கர்நாடகா மாநிலம் 60 பங்கு எடுத்துக்கொள்ளுங்கள், மொத்த மின்சார உற்பத்தியில் 40 பங்கு தமிழ்நாட்டிற்குக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதுகுறித்து மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்கள் ஆய்வு செய்து அந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, கர்நாடகா அரசு இப்போது இந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டாம், காவிரி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்பட்டதற்குப் பிறகுதான் இந்தத் திட்டத்தைத் தொடங்கவேண்டுமென்று இறுதியாகச் சொல்லிவிட்டார்கள். அதனாலே நாம் ஒன்றும் செய்ய இயலாதவர்களாக இருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் மு. தம்பிதுரை.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது ஒகேனக்கல் நீர்மின் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தடையாக இருப்பது காவிரி நீர்ப் பிரச்சினை என்று சொல்லியிருக்கின்றார்கள். இப்போது நீர்ப் பிரச்சினை மட்டுமல்ல, ஒகேனக்கல் எல்லைப் பிரச்சினையும் உருவாகியிருக்கிறது என்பது அவருக்குத் தெரியுமா? நேற்றுகூட நாங்கள் ஒகேனக்கல் சென்றிருக்கும்போது கர்நாடகாவினுடைய போலீசானது, நம்முடைய நபர்கள் செல்லும்போது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Main question-க்கு சம்பந்தம் இல்லாமல் கேட்காதீர்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** கேள்விக்கு சம்பந்தத்துடன் கேட்கிறேன். ஒகேனக்கல்லில் நீர்மின் திட்டம் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால் இடம் எங்கே தேர்வு செய்யப்போகிறீர்கள் என்பதுதான் பிரச்சினை. ஒகேனக்கல் நீர்மின் திட்டம் கொண்டுவரவேண்டுமென்றால், இப்போது எல்லைப் பிரச்சினையும் வந்திருக்கிறது. அந்த இடத்திலே 150 மெகாவாட் மின் திட்டம் அமைக்க முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Not relevant to the main question. Please, sit down.

[2008 மார்ச் 28

வினா எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

## தொழிற்பயிற்சி நிலையம்

**12—**

***27775—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், குன்னத்தில் புதியதாக வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், குன்னத்தில் புதியதாக வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி மாநிலத்திலேயே மிகவும் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர்கள் நிறைந்த, ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிறைந்த தொகுதியாகும். இந்தத் தொகுதியிலே வட்டத் தலைநகரமான குன்னத்திலே ஒரு வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையம் அமைந்தால் அந்தப் பகுதியில் உள்ள படித்த இளைஞர்கள் வேலைபெறுவதற்கும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழை விவசாயிகள் தங்களுடைய விவசாய உற்பத்தியை அதிகமாக செய்வதற்கும் வசதியாக இருக்கும். அந்தப் பகுதியினுடைய மக்களும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைவார்கள். இப்படிப் பல்வேறு காரணங்களை கருத்தில்கொண்டு எங்கள் தொகுதியினுடைய வட்டத் தலைநகரமான குன்னத்திலே வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென தங்கள்மூலம் வலியுறுத்துகிறேன்.



2008 மார்ச் 28]

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் கொஞ்சம் விரிவாக இருக்கும். வேளாண் தொழிற்பயிற்சி உழவர் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம், திண்டிவனம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, லால்குடி, பெரம்பலூர், கரூர், குடுமியான்மலை, சாக்கோட்டை, தேனி, திண்டுக்கல், பரமக்குடி, சிவகங்கை, விருதுநகர், பாளையங்கோட்டை, தூத்துக்குடி, நாகர்கோவில் மற்றும் ஊட்டி ஆகிய 23 உழவர் பயிற்சி நிலையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கி வரும் உழவர் பயிற்சி நிலையம் அந்தந்த மாவட்டத்திலுள்ள வட்டம் மற்றும் வட்டாரத்திலுள்ள விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் 2005-2006 ஆம் ஆண்டு முதல் ஒரு உழவர் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, விவசாயிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த உழவர் பயிற்சி நிலையத்தின் கட்டுப்பாட்டில்தான் வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், குன்னம் வட்டம் செயல்பட்டு வருகிறது. எனவே, குன்னத்திலே தனியே ஒரு உழவர் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதியில் 12 ஆம் வகுப்புக்கு மேல் படிப்பதற்கு தொழிற்பயிற்சி நிலையமோ, கலைக் கல்லூரியோ, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியோ, செவிலியர் பயிற்சிப் பள்ளியோ, எந்தக் கல்வி நிறுவனமும் இல்லாத மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். ஆகவே, அந்தத் தொகுதியில் ஒரு டிப்ளமோ படிக்கக்கூடிய வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையமோ அல்லது—எங்கள் தொகுதியினுடைய நீண்டகாலக் கோரிக்கையான செட்டிக்குளம், பாடாலூர், நாட்டார்மங்கலம், இலூர், நத்தசேலம் போன்ற இருபதிற்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்கள் அதிகமாக வெங்காயத்தைப் பயிர் செய்து வருகிறார்கள். அங்கே—

[2008 மார்ச் 28

வெங்காயத்தை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் பயன்பெறக்கூடிய வெங்காயம் குளிரூட்டும் வசதியுடன் கூடிய கொள்முதல் நிலையத்தையோ அல்லது பருத்தி ஆராய்ச்சி நிலையத்தையோ அல்லது விவசாயத்தை சார்ந்த ஏதாவது ஒரு தொழிற்சாலையையோ அல்லது ஒரு கல்வி நிறுவனத்தையோ ஆரம்பித்து எங்கள் தொகுதி. மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றுமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விப் போட்டால் விரிவாக பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் தொகுதியில் போன கூட்டத்தொடரில் வேளாண் கல்லூரி அமைத்துத் தருவதாக அமைச்சர் அவர்கள் முதல்வர் பரிந்துரைக்கு அனுப்பியுள்ளேன் என்று சொன்னார்கள். எப்போது அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு சம்பந்தம் கிடையாது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் அவர்கள் அரசு பழப் பண்ணைகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். ரொம்ப நன்றி. ஆனால், அதே சமயத்தில் அரசு பழப் பண்ணையில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு ஜனவரியிலிருந்து இன்றுவரை சம்பளம் வழங்கப்படவில்லை. உடனடியாக வழங்குவதற்கு அமைச்சர் உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. இராமசாமி, கேள்விக்குச் சம்பந்தம் இல்லை.



2008 மார்ச் 28]

வினா எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## குளங்களை ஆழப்படுத்துதல்

***28835—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதியில் புத்தன்தருவை, வைரவம்தருவை குளங்களை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியிலுள்ள புத்தன்தருவை வருவாய்த் துறைக்குச் சொந்தமான 2,000 ஏக்கர் அளவு கொண்ட நிலம். வைரவம் தருவை சுமார் 2,200 ஏக்கர் அரசு நிலம். இதுவரை குறைந்தது (ம) ஆண்டுகளாக இந்தக் குளங்கள் ஆழப்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. இதனால் இந்தக் குளங்களில் தண்ணீர் நிரம்பி வழிந்து, மறுகால் பாய்ந்து, மணப்பாடு சென்று கடலுக்குள் செல்லும் அபாயம் இருக்கிறது. இந்த வைரவம்தருவை மேற்குப் பகுதி இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே உடைந்து விட்டது. இப்போது சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக தண்ணீர் மறுகால் பாய்ந்து, அதைச் சுற்றியுள்ள வாழைத் தோட்டங்கள் அவ்வளவும் அழிந்துவிட்டன. நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் சென்று பார்வையிட்டுவிட்டு வந்தேன். இந்தத் தருவைகளில் தண்ணீர் நிரம்பி இருந்தால்தான்

குடிநீர்ப் பிரச்சினை தீரும். முக்கியமாக பெரியதாளையில் தண்ணீரில் உப்பு கலந்திருப்பதால் கிட்னி பாதிக்கப்படுகிறது என்ற பெரிய புகார் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த இரண்டு தருவைகளும் நிரம்பி இருந்தால்தான் அங்குள்ள குடிநீர்ப் பிரச்சினை தீரும். பாசன வசதிக்கும் மிகவும் உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அவற்றை ஆழப்படுத்தித் தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டு, செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் புத்தன்தருவை, பொன்தருவை, வைரவம்தருவை இவையெல்லாம் குளங்கள் அல்ல. முதலில் அவர்களே சொன்னார்கள் ரெவின்யு நிலங்கள் என்று. ஆகையால் இந்தக் கேள்வி அந்த அமைச்சரிடம் போயிருக்க வேண்டும். ஆனால் என்னிடம் வந்திருக்கிறது. இது குளங்கள் அல்ல. தருவை. தருவை என்றால் என்ன? தென் மாவட்டங்களில் இருப்பவர்களுக்குத் தெரியும். ஒரு கிண்ணம் மாதிரி தானாகத்தோன்றி தண்ணீர் தேக்கி வைத்துக்கொள்ளும். வடமாவட்டங்களில் இருப்பவர்களுக்குத் தெரியாது. குளங்கள் வேறு. தருவை வேறு. குளம், அது மனிதனால் உருவாக்கப்படுகிறது. மதகு இருக்கும். கால்வாய் இருக்கும். பாசனப் பகுதி இருக்கும். தருவைக்கு அப்படி அல்ல. இயற்கையாக கிண்ணம் போல ஒரு பள்ளம் இருக்கும். தண்ணீர் எப்படி வருகிறதோ அப்படியே தேங்கும். அதனால் உப்புத் தண்ணீர் உள்ளே வராமல் தடுப்பதற்கு உதவியாக இருக்கும். அவ்வளவுதான் தருவை. எனவே வைரவம்தருவையும், புத்தன்தருவையும் அப்படிப்பட்ட தருவைகள். இந்தத் தருவைகளுக்கு வரத்துக் கால்வாய்கள் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதற்கு வரத்துக் கால்வாயிலும் தண்ணீரை விட வேண்டும் என்பதற்கு எல்லா அரசுகளும் முயற்சி எடுத்திருக்கின்றன.

இதில் இரண்டு வகையிலே தண்ணீர் விடலாம் என்பது அவர்களுக்குத் தெரியும். உங்களுக்குத் தெரியும், மணிமுத்தாறு அணையிலிருந்து அதனுடைய மேல் மட்டம் 118 அடி. 80 அடியில் ஒரு மதகு இருக்கிறது. அங்கிருந்து 46 கிலோ மீட்டருக்கு ஒரு கால்வாய் வெட்டுகிறோம். அதை நான்கு ரீச்சாக



பண்ணியிருக்கிறோம். இந்த நான்கு ரீச்சிற்கே சரியாகத் தண்ணீர் இல்லை. Fourth Reach–ல் உன்னங்குளம் என்ற இடத்திலிருந்து கருமேனியாறு ஓடுகிறது. அது 40 குளம் தாண்டிப்போய் மணப்பாடு என்ற இடத்தில் கடலில் சேர்ந்துவிடுகிறது. கருமேனியாறில் உள்ள 16 அணைக்கட்டுகளில் 10 அணைக்கட்டுகள் Fourth Reach மணிமுத்தாறில் வருகிறது. ஆனால் தண்ணீரை நாங்கள் கொடுப்பதில்லை. ஏனென்றால் மூன்றாவது ரீச்சில் போய்விடுகிறது. நாங்கள் ஒரு தடவை இப்போது நிரப்பினோம். 1992–ல் ஒரு தடவை, அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது ஒரு தடவை நிரப்பினார்கள். மழை மிகையாக வந்தால்தான் கொடுக்கலாம். அப்படி மிகையாக வருகிற காலத்திலே மணிமுத்தாறு பிரதான கால்வாயிலிருந்து தண்ணீர் எடுத்து கருமேனியாற்றில் கொண்டு வந்து, 10-வது அணைக்கட்டில் கொண்டு வந்து, நாயினார்முண்டாள்கடியன்குளம் கொண்டு வந்து, அதற்குப் பிறகு ஏலச்சிகுளத்திற்கு கொண்டு வந்து, ஆயங்குளத்திற்குக் கொண்டு வந்து, அதற்குப் பிறகு இலங்கையாடிகுளத்திற்குக் கொண்டு வந்து, அங்கிருந்து மறுபடி தண்ணீரை இறக்கி சுவிசேஷபுரம், புதுக்குளம், கல்குளம், நந்தன்குளம், எருமைக்குளம், அவித்திகுளம் என்று குளங்கள்மூலம் திசையன்விளையில் கொண்டு வந்து விடவேண்டும். இது ஒரு வகை. இது இப்பொழுது இல்லை. ஆகையினால் கருமேனியாற்றை நவீனப்படுத்துவதற்காக உலக வங்கி நிதி உதவியுடன் அடுத்த ஆண்டு 30 கோடி ரூபாய் செலவு செய்யப் போகிறோம். அப்பொழுது வேண்டுமானால் பார்க்கலாம். ஆகையினால்தான் இது உப்புத் தண்ணீரை உள்ளே விடாமல் பாதுகாக்கிறது என்பதற்காகத்தான் கலைஞர் ஆட்சிக் காலத்தில் மணிமுத்தாறில் தண்ணீர் வருவது கஷ்டமாக இருக்கிறது என்பதற்காக தாமிரபரணியிலிருந்து தண்ணீர் எடுக்கலாம் என்று யோசித்துத்தான் தாமிரபரணியிலே மேலக்காலிலே மருதூர் அணைக்கட்டில் மேலக்காலில் தண்ணீர் எடுத்து, கால்வாய் ஏரிக்குக் கொண்டு வந்து, அங்கிருந்து அதனைகுளம் கொண்டு வந்து, செங்குளம் கொண்டு வந்து, மருதங்குளம் கொண்டு வந்து, சாத்தான்குளம் கொண்டு வந்து, அய்யன்குளம் கொண்டு வந்து எழுவரைமுக்கிகுளம் கொண்டு வந்து, சடையனேரிக்கு கொண்டு வந்து, சுப்பிராயபுரம் செக் டேமில் நிரப்பி, வைரவன் குளத்தில் விட்டு தண்ணீரை அப்படிக் கொண்டு போகிறோம். இப்போது அதுதான் நிலைமை. ஆக try பண்ணி தண்ணீர் தருகிறோமே தவிர, அது இயற்கையாகக் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2008 மார்ச் 28

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னைவிட மிக நன்றாகத் தெரியும். அவர்களுடைய சொந்தத் தொகுதி போன்றது அது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது குளம் அல்ல, தருவை என்று. குளம்தான் பராமரிக்கப்படும் என்றார்கள். எங்கள் தொகுதி தருவையையே நம்பி இருக்கும்போது, இவற்றைப் பராமரிப்பது யார்? தாங்கள்தானே?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** உங்கள் தொகுதி தருவையையே நம்பியிருக்கிற காரணத்தால்தான்—மணிமுத்தாறு தண்ணீர் கொஞ்சம் இலஞ்சிபட்டிக்கு உண்டு. அது கிடைக்கவில்லை என்பதற்காகத்தான் சடையனேரியில் கால்வாய் வெட்டி, தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இன்னொரு பிரச்சினை உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ? எனக்கு அதைவிட நன்கு தெரியும். வைரவன் குளம் தண்ணீர் அதிகமாகி நிரம்பி வழிந்தால், பக்கத்தில் கொஞ்சம் பேர் நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலம் மூழ்கிவிடுகிறது என்பதாலே, பாதி பேர் இதை ஆழப்படுத்த வேண்டும் என்கிறார்கள். But, இயற்கையாக இந்த முறை தண்ணீரைக் கொண்டு வருகிறோம். இதைவிட அதிகமாகத் தண்ணீர் வந்திருக்கிறது; எல்லா இடத்திற்கும் கொடுத்திருக்கிறோம்; உங்களுக்குத் தெரியும். மேலக் கால்வாயை வெட்டி, இங்கே வருகிற தண்ணீரை divert பண்ணிக் கொடுத்திருக்கிறோம் இந்த முறை.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரில், மிக முக்கியமான நகரின் மத்தியில் பெருமாள் குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. சுமார் 10 ஏக்கர் நிலப் பரப்பில் அந்தக் குளம் இருக்கிறது. ஒரு காலகட்டத்தில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளினுடைய நம்பிக்கையை உருவாக்கக்கூடிய அளவில் பல ஏக்கர் பயிர்களுக்கு அந்தக் குளத்திலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இப்போது அந்த வயல்கள் எல்லாம் plot-களாக மாறிவிட்டன; வயலே இல்லை; நெற்பயிர்கள் அங்கு இல்லை. எந்தப் பயிரும் இல்லை; அந்தக்



2008 மார்ச் 28]

குளத்தில் இப்போது சாக்கடை கலந்து, குளம் சீரழிந்து இருக்கிறது. பல கோடி மதிப்புள்ள இந்தக் குளம், இப்போது விவசாயத்திற்குத் தேவையில்லாத காரணத்தினால், இதுபோன்று இருக்கின்ற குளங்களை, பொதுப் பணித் துறை என்ன செய்ய இருக்கிறது? அந்தக் குளத்தைச் சுத்தப்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குளத்தை ஆழப்படுத்துவதுதான் கேள்வி; நீங்கள் குளத்தை வேறு எதற்கோ கொடுக்கச் சொல்கிறீர்களே!

**திரு. அ. ராஜன்:** ஆழப்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர பொதுப் பணித் துறை முயற்சி எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வியில் இருந்து ஒரு மகிழ்ச்சி. அந்த ஊரில் plot போடுபவன், குளத்தைச் சுற்றிப் போட்டிருக்கிறான். குளத்தில் போடாமல் விட்டிருக்கிறானே, அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா இடங்களிலும் plot போடுபவன் இதையும் சேர்த்து போட்டுவிட்டுப் போய்விடுகிறான். அப்புறம் விற்று, அதை வாங்கி வீடு கட்டி விடுகிறார்கள். அதற்குப் பிறகு எங்களை வெளியேற்றக்கூடாது என்று கொடி பிடித்துவிடுகிறார்கள்.

இப்போது சென்னையைச்சுற்றி நாங்கள் 230 குளங்களை எடுத்து ஆழப்படுத்த இருக்கிறோம். நித்தம், நித்தம் பத்திரிகையில் வருகிறது. எடுத்து நடத்தத்தான் போகிறோம். ஆனால், எல்லாவகையான எதிர்ப்புகளும் வருகின்றன. சட்டம் போட்டு வைத்திருக்கிறோம்; அப்போதும் வருகின்றன. எனவே, school கட்டுவதானாலும் சரி, விளையாட்டு மைதானம் அமைத்தாலும் சரி, பஞ்சாயத்துக்களில் வீடு கட்டுவதானாலும் சரி, plot போடுவதானாலும் சரி, எல்லாம் பொதுப் பணித் துறை. கேட்டால் பொதுப் பணி தானே, எல்லாம் பண்ணிவிடுகிறார்கள் என்கிற எண்ணம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பெருமாள் குளம்; பெருமாள் குளம் என்பதற்காக நாமம் போட மாட்டோம். அது தேவை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால், நிச்சயம் ஆழப்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

[2008 மார்ச் 28

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்தில், தென் மாவட்டங்களில் திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் போன்ற பகுதிகளில், தூத்துக்குடி மாவட்டங்களிலேயும் அங்கே தருவைப் பகுதி பற்றியும், அதைப்போல் குளத்திலே உள்ள வேறுபாடுகளைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளச் சேதத்தைப் பார்வையிடுவதற்காக நாங்கள் சென்றோம். அப்படிச் சென்ற நேரத்தில், அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள், ஊர்ப் பொது மக்கள் எல்லாம் பல ஊர்களில் என்னிடம் சொன்னார்கள்; தூத்துக்குடி மாவட்டத்தில் நிறைய குளங்கள் இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில், அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 2,500 குளங்கள் இருக்கின்றன. இந்தக் குளங்கள் எல்லாம் தூர்வாரப்படவேயில்லை; வாய்க்கால்களில்தான் தூர் எடுக்கிறார்கள். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக, இந்தக் குளங்கள் எல்லாம் தூர்வாராத காரணத்தால், இப்போது அங்கு மண்ணும், சகதியும் நிரம்பி, தண்ணீரே இல்லாமல் இருக்கிறது. சிறிதளவு மழை பெய்தால்கூட தண்ணீர் நிரம்பி வீணாக நெற்பயிர்கள், மற்ற பயிர்களையெல்லாம் சேதப்படுத்துகிறது என்ற ஆதங்கத்தை வெளியிட்டார்கள். ஆகவே, கடந்த 30 ஆண்டுகளாகத் தென் மாவட்டங்களிலே குளங்கள் தூர்வாரப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

ஸ்ரீவைகுண்டம் அணையிலே 10 அடிதான் நீர்த்தேக்கம். அதிலே சகதியும், மண்ணுமாக இருப்பது 8 அடி என்று சொல்லப்படுகிறது. 2 அடிதான் தண்ணீர் தேங்குவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் போக்குவதற்கு விரைவாக, அந்தக் குளங்களை ஆழப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுவாக குளங்களை ஆழப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தி இருக்கிறது. நம்முடைய மாநில நிதியிலே நபார்டு வங்கியின்மூலம் ஆழப்படுத்துவது மட்டுமல்லாமல், உலக வங்கியினிடத்திலே நாம் வாங்கியிருக்கிற கடனில் பெரும் பகுதி குளங்களை ஆழப்படுத்துவதற்காகவும், சற்றொப்ப 5,000-க்கு மேற்பட்ட குளங்களை ஆழப்படுத்துவதாகத்தான் திட்டம். அதிலே முதல் reach-ஆக இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் இந்த முறை நாங்கள் அந்தப் பகுதிகளில் குளங்களை ஆழப்படுத்துகிற IAMWARM, அதாவது, உலக வங்கித் திட்டம் நடைபெறுகிறது. இது 6 கட்டங்களாக நடைபெற வேண்டும். எனவே, அடுத்த ஆண்டு, அதற்கு அடுத்த ஆண்டு மற்ற தென் மாவட்டப் பகுதிகளில் உள்ள குளங்களையும் ஆழப்படுத்துகிற திட்டத்தில் சேர்க்கப்போகிறோம். பொதுவாக, உலக வங்கியின்மூலம் மட்டும் இந்த 5, 6 ஆண்டு காலத்திலே முடிக்க வேண்டிய அந்தப் பணியில் 5,500 குளங்களை ஆழப்படுத்துவதாக நாங்கள் அக்ரிமெண்ட் போட்டிருக்கிறோம்.



2008 மார்ச் 28]

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 16,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட மிகப் பெரிய ஏரியான மதுராந்தகம் ஏரி 1971 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது தூர்வாரப்பட்டது. அப்போது அதனுடைய ஆழம் 22 அடியாக இருந்தது. இப்போது அதன் ஆழம் 8 அடியாக மட்டுமே உள்ளது. கடந்த 8 மாதங்களில் மதுராந்தகம் ஏரி நிரம்பி வெள்ளமாகப் பெருக்கெடுத்தது என்ற செய்தியைப் பத்திரிகைகளில் நீங்கள் 3 முறை பார்த்திருப்பீர்கள். இதைத் தடுத்து, விவசாயிகள் பயன்பெறும் வகையில் மதுராந்தகம் ஏரியைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஏரியை ஆழப்படுத்துவது என்பது forebed-ல் இருக்கிற மண்ணை அகற்றுவது. உங்களுடைய அதிர்ஷ்டம், மதுராந்தகம் ஏரியில் எப்போதும் தண்ணீர் இருக்கிறது. வேலை செய்வதற்கே இடம் கொடுக்கமாட்டேன் என்கிறது. ஆகவே, முதலில் தண்ணீரை வற்ற வையுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட செய்தித் தாள்களிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. பல டி.எம்சி. தண்ணீர் மழைக் காலத்திலே சேமிக்கப்படாமல் கடலில் கலக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டு, மழைநீர் எல்லாம் வீணாகின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. எனவே, ஒட்டுமொத்தமாக குறுகிய காலத்திற்குள் ஒரு master plan, அதாவது check dams, தடுப்பணைகள், ஏரிகளைத் தூர்வாருதல், குளங்களைத் தூர்வாருதல் போன்றவற்றை மேற்கொள்வதற்கு—இப்போது உலக வங்கி தாராளமாக நீர் இருப்பு செய்வதற்கு வேண்டிய கடனுதவி அளிக்கின்ற சூழ்நிலையில், அதுபோன்ற—ஒரு தொலைநோக்குப் பார்வையோடு ஒரு திட்டத்தைத் தயாரித்து, அரசு உலக வங்கிக்கு அனுப்புகின்ற உத்தேசம் ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதைத்தான் தெரிவிக்கிறேன். கவர்னர் உரையிலும், பட்ஜெட்டிலேயும் சில check dam-கள் கட்டுவதைப் பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். ஆக, இந்த வருடம் எத்தனை check dam-கள் எடுத்துக் கொள்ளப்போகிறோம் என்கின்ற புள்ளி விவரங்களையும் நாங்கள் பட்ஜெட்டிலே சொல்லியிருக்கிறோம்; அதற்காக நிதியொதுக்கியிருக்கிறோம். உலக வங்கிமூலம் எத்தனை பணிகளை எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்ற புள்ளி விவரங்களையும் இப்போது நான் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு நாட்டு மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கை, குளம் குட்டைகளை நிரப்புகிற அவினாசி-அத்திக்கடவுத் திட்டம் இந்த பட்ஜெட்டிலே வருமென்று ஆவலோடு எதிர்ப்பார்த்துக் காத்திருந்தோம். அது வரவில்லை. அமைச்சருடைய கருணைப் பார்வை எப்போது கிடைக்குமென்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அவினாசி-அத்திக்கடவுத் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. காரணம், அதற்கான தண்ணீரை பில்லூருக்குப் பக்கத்தில் எடுக்கிற ஒரு திட்டம். அப்படி எடுத்தால், மின்சாரத் துறை பாதிக்கக்கூடிய நிலைமை. இரண்டாவது, கோவைக்கு குடிதண்ணீர் அங்கிருந்துதான் வருகிறது. எனவே, அதிலிருந்து கீழே எடுப்பதா, மேலே எடுப்பதா என்பதைப் பொதுப் பணித் துறையினர் ஓர் ஆய்வு நடத்தி அந்த அறிக்கை வந்த பிறகுதான் முடிவு செய்வோம். எனவே, திட்டம் இல்லையென்று முடிவு அல்ல; அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

## விரைவுப் பேருந்து

***26064—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையிலிருந்து மன்னார்புரம் விலக்கு, கோட்டை கருங்குளம், சமூகரெங்கபுரம், தெ. கள்ளிகுளம் வழியாகச் சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என் நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரைமூலம் தற்போது திசையன்விளையிலிருந்து மன்னார்புரம் விலக்கு, நான்குநேரி, திருநெல்வேலி வழியாகச் சென்னைக்கும், சென்னையிலிருந்து திசையன்விளைக்கு ஒரு பேருந்தும் ஆக தினசரி 2 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தடம் எண் 199 மூலம் இடையன்குடியிலிருந்து திசையன்விளை வழியாகச் சென்னைக்கு தினசரி 4 பேருந்துகள் 4 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன.

[2008 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் கூடங்குளம்-சென்னை, குட்டம்-சென்னை என்ற இரண்டு விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட்டன. கடந்த கால ஆட்சியில் அவை நிறுத்தப்பட்டன. மீண்டும் நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதும் நீங்கள் உடனடியாக அந்த 2 பேருந்துகளையும் இயக்கியதற்கு முதன்முதலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து திசையன்விளையிலிருந்து சென்னைக்குச் செல்கின்ற பேருந்து மதுரை கோட்டம் 3-ன்மூலம் இயக்கப்படுகிறது. அந்தப் பேருந்து மிகமிகப் பழமையானதாக இருக்கின்றது. ஆகவே, அந்த இரண்டு பேருந்துகளுக்குப் பதிலாக, புதிதாக ஒரு ultra deluxe பேருந்தை இயக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

அதேபோல, திசையன்விளையின் அருகிலே இருக்கின்ற ஆற்றங்கரை பள்ளிவாசல் முஸ்லிம் பக்தர்கள் அதிகமாக வருகின்ற பகுதி. ஆகவே, ஆற்றங்கரை பள்ளிவாசல், நவலடி, திசையன்விளை வழியாக ஒரு புதிய வழித்தடத்தை உடனடியாக நீங்கள் புதிதாக இப்போது வாங்கி வருகின்ற பேருந்துகளில் இயக்கித் தருவீர்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை வழித்தடமானது திசையன்விளையிலிருந்து மன்னார்புரம் விலக்கு வந்து இடதுபுறமாகத் திரும்பி, கோட்டை கருங்குளம், சமூகரெங்கபுரம், கள்ளிகுளம் வழியாக வள்ளியூர் வந்து நான்குநேரி வழியாகச் சென்னைக்குக் கேட்கப்படும் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். மேலும், தொலைதூரப் பயணிகள் கூடுதல் கட்டணம் செலுத்துகின்ற சூழ்நிலை ஏற்படும். மேற்படி ஊர்களைச் சேர்ந்த பயணிகள் வள்ளியூர் அல்லது நான்குநேரி வந்து சென்னைக்குப் பயணம் மேற்கொள்ளலாம். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, விரைவுப் போக்குவரத்துக் கழகம் மொத்தம் 900 பேருந்துகளோடு இயங்கிக்கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 2 வருடத்திற்கு முன்பு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தையே மூடிவிட வேண்டுமென்று



2008 மார்ச் 28]

அரசு சார்பாக எழுதப்பட்டு, மீண்டும் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஓர் ஆண்டுக்கு 200 Ultra deluxe பேருந்துகளை வாங்கி இதுவரை 400 புதிய பேருந்துகளோடு இப்போது விரைவுப் போக்குவரத்துக் கழகத்தை இயக்கிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டும் தொடர்ந்து அதற்கு உதவி செய்வதாக நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அதிலேதான் நேற்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கேட்டபோது, ஏற்கெனவே வெளியிலிருந்து வாடகைக்கு எடுக்க முடியுமா? அதுபோன்ற நிலை இருக்கிறதா என்று கேட்டார்கள். 900 பேருந்துகளை உடனடியாக மாற்றுவதற்கு வழியில்லாத காரணத்தினால்தான், அதுபோல ஒரு நிலையை அரசு எடுத்தது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பணத்திலிருந்தே அந்தப் பேருந்துகளை வாங்கித் தருவதாக உறுதியளித்த காரணத்தினால், அந்தத் திட்டம் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதிய பேருந்துகள் வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பேருந்து வந்ததும் ஆற்றங்கரை பள்ளிவாசல், நவலடி, திசையன்விளை வழியாக அந்தப் பேருந்தை இயக்கித் தருவார்கள் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை கோட்டத்தில் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் இருப்பதால் எங்களுக்குத் தொலைதூரத்தில் இருக்கின்றது. ஆகவே, திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய கோட்டம் அமைத்துத் தருவீர்களா? ஏற்கெனவே இருந்த கோட்டம் கடந்த கால ஆட்சியில் பறிக்கப்பட்டது. மீண்டும் அதை அமைத்துத் தருவீர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 20-க்கும் மேற்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் தமிழ்நாட்டில் இருந்தது. செலவைக் குறைக்க வேண்டுமென்ற

[2008 மார்ச் 28

நோக்கத்தோடு 7 போக்குவரத்துக் கழகங்களாக அவை மாற்றியமைக்கப்பட்டன. ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்த பேருந்துகளினுடைய எண்ணிக்கை ஸ்பேர் பஸ்ஸோடு சேர்த்து 17,500 ஆகும். இப்போது கிட்டத்தட்ட 20,000 பேருந்துகளை தமிழ்நாடு முழுவதும் இயக்கிக் கொண்டிருக்கிறோம். இதிலே 2,000 பேருந்துகளுக்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்ற அளவிலே வைக்கலாமா, அதனால் செலவு எவ்வளவு ஏற்படும் என்று ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். குறிப்பாக, மதுரை மண்டலம் மிகப் பெரிய மண்டலமாக இருக்கிறது. 3,900 பேருந்துகள் மதுரை மண்டலத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே, அதை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதேபோல, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தையும் இரண்டாகப் பிரிப்பதற்கு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 3,100 பேருந்துகள் சென்னையிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், தென் சென்னை, வட சென்னை என்று அதைப் பிரிக்கலாமா என்ற ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதனால் கூடுதல் செலவு எவ்வளவு வரும் என்று ஆய்வு செய்து, இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்படும். அதைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னால், மத்தியிலே கம்பெனி சட்டம் என்று இருக்கிறது; அவர்களுடைய அனுமதி கேட்டு ஒரு 8, 9 மாத காலம் ஆகும் அனுமதி வருவதற்கு. அந்த அனுமதி வந்தபிறகுதான் அதைப் பிரிக்க முடியும். அந்த வகையில் அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூரிலிருந்து சென்னை வருவதற்கு ஒரு குளிர்சாதனப் பேருந்து ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஆத்தூர் Branch Office-க்கு 3 பஸ் தேவைப்படுகின்றது. ஏனென்றால், காலையிலே 6 மணிக்கு ஒரு இடத்திலிருந்து ஒரு பஸ் புறப்படுகிறது என்று சொன்னால், பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் 6 மணிக்கே புறப்பட்டு, 9 மணிக்குப் பள்ளிக்கு வரவேண்டியதற்குப் பதிலாக, 7, 8 மணிக்கே வந்து சேர்ந்துவிடுகிறார்கள். அதனாலே சரியான நேரத்திலே அவர்களால் படிக்கவும் முடியவில்லை; சாப்பாடு



2008 மார்ச் 28]

எடுத்துக்கொண்டு வருவதற்கும் முடியவில்லை. அதனால் நாங்கள் Branch Manager-இடம் சென்று கேட்டால், எங்களுக்கு பஸ் போதவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு வழித் தடத்திலிருந்து இன்னொரு வழித் தடத்திற்கு விட்டால், அந்த ஏரியாவிலுள்ள கிராமப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளோ அல்லது அந்தப் பகுதியிலேயிருக்கிற பொது மக்களோ பாதித்துவிடுவார்கள், அதனால் டெப்போவுக்கென்று இன்னும் 3 பஸ் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர். சுந்தரம், கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** அதுபோல நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் திருப்பதிக்கு பஸ் விட வேண்டுமென்று பல நாட்களாகக் கோரிக்கை விட்டுக்கொண்டிருக்கிறேன். அது இதுவரை பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் ஆத்தூர்-திருப்பதிக்கு பஸ் இயக்கப்படாமலே இருக்கிறது. அதையும் கவனத்திலேகொண்டு ஆத்தூர்-திருப்பதிக்கும், ஆத்தூர்-சென்னைக்கும் ஒரு குளிர்சாதன வண்டி ஏற்பாடு செய்து தருமாறு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவாத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்காக 100 குளிர்சாதனம் பொருத்தப்பட்ட பேருந்துகள் வாங்கப்பட்டன. அவை படிப்படியாக இப்போதுதான் கூண்டு கட்டி வந்துகொண்டிருக்கின்றன. எனவே, விரைவிலே ஆத்தூரும் கவனிக்கப்படும். அதேநேரத்தில் சேலத்தைப் பொறுத்தவரை, இருக்கிற போக்குவரத்துக் கழகங்களிலே, சேலம் போக்குவரத்துக் கழகம் மூலம் ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகள் எல்லாம் மூன்று, நான்கு ஆண்டுகள் வயதுள்ள பேருந்துகளாக இருக்கின்றன. மற்ற எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் 6 ஆண்டுகள் 7 ஆண்டுகள் என்றும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் 300 பேருந்துகள் வாங்கிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கூடுதலாகப் பேருந்துகள் விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களது கோரிக்கை உரிய முறையிலே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும்.

[2008 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய பேருந்துகளெல்லாம் புதிய பேருந்துகளாக மாற்றப்பட்டுவருவது வரவேற்கத்தக்க ஒரு நல்ல நடவடிக்கை. அதேநேரத்தில், பல இடங்களிலே சொகுசுப் பேருந்துகள், குளிர்சாதன வசதியோடுகூடிய பேருந்துகள் புதியதாக இயக்கப்படுகிறபோது, ஏற்கெனவே சாதாரணக் கட்டணத்தில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிற ஒரு நிகழ்வு நடைபெற்று வருகிறது. அதைப்போல் சென்னை போன்ற பெருநகரங்களில்கூட L.S.S. போன்ற கூடுதல் கட்டணப் பேருந்துகளை அதிகப்படுத்தி, சாதாரணக் கட்டணப் பேருந்துகள் குறைக்கப்படுவதாகத் தொடர்ந்து செய்திகள் இருக்கின்றன. உதாரணமாக, திருப்பூரிலிருந்து சென்னைக்கு ஒரு சொகுசுப் பேருந்து, அதாவது, ஒரு குளிர்சாதனப் பேருந்து சமீபத்தில் இயக்கப்பட்டது. அது, சாதாரணக் கட்டணத்தில் இயக்கப்பட்ட ஒரு பேருந்தினை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக, சொகுசுப் பேருந்து இயக்கப்படுகிறது. ஆகவே, இந்த குளிர்சாதன வண்டியைப் பயன்படுத்துகிறவர்கள் தாராளமாகக் கூடுதல் கட்டணம் கட்டிப் பயன்படுத்துவதில் நமக்கு ஒன்றும் தடை இல்லை. ஆனால், சாதாரணக் கட்டணத்திலே, குறைந்த கட்டணத்தில் ஏற்கெனவே பயணம் செய்யக்கூடிய சாதாரண மக்களுக்கு வண்டிகள் நிறுத்தப்படுவது சில பாதிப்புகளை ஏற்படுத்தயிருக்கிறது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கும் என்று கருதுகிறேன். அதன்மீது அரசு என்ன மேல்நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு நன்றி. நான் இதை விளக்கமாகச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு எனக்குத் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, பல பத்திரிகைகளிலே தினந்தோறும் வருகிறது. கலர்கலராக பஸ்சை விட்டுவிட்டு காசை ஏற்றிவிட்டார்கள் என்று தினந்தோறும் அறிக்கை கொடுக்கிறார்கள். நாங்கள் மறுப்புச் சொன்னால்கூட, மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன்; சென்னையில் இப்போது 3,100 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. சாதாரணக் கட்டணத்தில்



2008 மார்ச் 28]

இயங்கக்கூடிய பேருந்துகள் கிட்டத்தட்ட 2,100 பேருந்துகள். கடந்த காலகட்டத்தில் இருந்ததைவிட 100 பேருந்துகள் கூடுதலாக சாதாரண கட்டணத்திலே இயக்குகிறோம். புதிய பேருந்துகளாக வருகிறபோது தாழ்தளப் பேருந்து, Vestibule Bus-தொடர் பேருந்துகள் என புதிய வழித்தடங்களை உருவாக்குகிறோம். புதிய வழித்தடங்களை உருவாக்குகின்றபோது, அந்தப் புதிய பேருந்துகளை நாம் விட்டுக்கொண்டிருக்கிறோம். இது போன்று மற்ற போக்குவரத்துக் கழகங்களிலேயும் தொடர் பேருந்து விட்டுக்கொண்டிருக்கிறோம். இதுபோன்று மற்ற போக்குவரத்துக் கழகங்களிலேயும், அரசு போக்குவரத்துக் கழகத்திலேயும் ஏற்கெனவே Super Deluxe என்ற அளவிலே இருந்த பேருந்துகளையெல்லாம் மாற்றி, Ultra Deluxe என்று கொண்டு வருகிறோம். Ultra Deluxe என்று வருகின்றபோது பழைய பேருந்துகளை. ஓட்ட முடியாது. ஓட்டுகின்ற நிலையிலே அந்தப் பேருந்துகள் இல்லை. அதனால்தான் விரைவுப் போக்குவரத்து கழகத்திலே மட்டும்தான், அந்த Ultra Deluxe புதிய பேருந்து விடப்படுகிறதே தவிர, மற்ற அத்துணை பேருந்துகளிலும் அப்படி விடப்படுகிற பேருந்துகளில்கூட, போக்குவரத்துக் கழகங்களில் இருந்து சாதாரணக் கட்டணத்திலே சென்னைக்கு உடனடியாக புதிய ஒரு வழித்தடம் உருவாக்கித் தந்திருக்கிறோம். எனவே, தமிழ்நாட்டில் எந்த இடத்திலும், சாதாரணக் கட்டணத்தில் இயக்கிக்கொண்டு இருக்கிற பேருந்துகளை நிறுத்தவும் இல்லை. ஆனால் கூடுதலாக, அதிக வசதியோடு கேட்கின்றவர்களுக்குப் புதிய பேருந்துகளை இப்போது இயக்கிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆட்சிப் பொறுப்பேற்றபோது, 17,500 பேருந்துகள் போக்குவரத்து கழகங்களிலே இருந்தன. இன்றைக்கு 19,500 பேருந்துகளை இயக்கிக்கொண்டிருக்கிறோம்; கூடுதலாக இயக்கிக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

## தொழிற்சாலை

***3760—திரு. க. இராஜேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 மார்ச் 28

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை தொடங்க தனியார் தொழில் முனைவோர் முன்வரும்பட்சத்தில், அவர்களுக்கு தொழிற்சாலைகள் தொடங்க அனைத்து ஆலோசனைகளையும் மாவட்டத் தொழில் மையம் அளிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலைத்தான் நாங்கள் எதிர்பார்த்தோம். எனது தொகுதியிலும், அதேபோல் ஆண்டிமடம் பகுதியிலும் முந்திரி விளையும் விவசாயிகளின் நிலப்பரப்பு அதிகம். அதேபோல் பல்லாயிரக்கணக்கான அரசு நிலங்களிலே முந்திரிக் காடுகள் அதிகம் உள்ளன. அதிலும் முந்திரி விளைச்சல் அதிகமாக உள்ளது. எங்கள் பகுதி மக்களுக்கு முந்திரி உடைக்கும் தொழில் குடிசைத் தொழிலாக உள்ளது. முந்திரிப் பருப்பினை எடுத்து சென்னை, கோயம்புத்தூர் மற்றும் பிற மாநிலங்களில் விற்பனை செய்கின்றனர். உள்ளூரில் தொழிற்சாலை இருந்தால் தரமான முந்திரிப் பருப்பு எடுக்கலாம்; அங்குள்ள விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம். அதனால் ஜெயங்கொண்டத்தில் முந்திரித் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டு அமைகின்றேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் சுமார் 15,000 எக்டேரில், 10,500 மெட்ரிக் டன் முந்திரி உற்பத்தி செய்யப்படுகிறது. இதிலிருந்து 2,000 மெட்ரிக் டன் முந்திரிப் பருப்பு கிடைக்கிறது. இப்பகுதியில் விளையும் முந்திரி ஏற்றுமதி செய்யும் அளவிற்குத் தாம் உயர்ந்ததாக இல்லை. எனவே, நமது மாநிலத்திலேயே பெருமளவு சந்தைப்படுத்தப்படுகிறது. ஏற்கெனவே ஜெயங்கொண்டம் தொகுதியில்,



2008 மார்ச் 28]

5 முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் நிறுவனங்கள் உள்ளன. இருப்பினும், தனியார் தொழில் முனைவோர்கள் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், அத்தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள், திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிக் கடன் உதவி, துறை சார்ந்த ஒப்புதல் பெறுதல், மானிய உதவி மற்றும் சந்தை உதவி ஆகிய தேவையான உதவிகளை அரியலூர் மாவட்டத் தொழில் மையம்மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு முந்திரித் தொழிற்சாலை இருப்பது உண்மைதான். இருந்தாலும், அது கேரள மாநிலத்தில் உள்ள முதலாளிகள்—சொல்லப்போனால், முந்திரியை 'அங்கமெல்லாம் தங்கம்' என்று சொல்வார்கள்; அந்த வகையில்—முந்திரித் தொழிலில், முந்திரி எண்ணெயைக் காய்த்து வடித்து, வெளி மாநிலங்கள், வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். அந்த வகையில் முந்திரி இலாபகரமான தொழில். அதேபோல், அங்கு விளையும் முந்திரியை பண்ருட்டி பகுதியில் இருந்து அவர்கள் வாங்கிச் சென்று, பலவகைகளில் தரம் பிரித்து விற்பனை செய்கின்றனர். அதனால், எங்கள் பகுதி மக்கள் பயன்பெறுகின்ற வகையில் ஜெயங்கொண்டத்தில்—எனக்கு முன் ஜெயங்கொண்டம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் பல கோரிக்கைகளை வைத்துள்ளனர். முந்திரித் தொழிற்சாலை கூட்டுறவு முறையில் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், சிறுதொழில் என்ற வகையில் நிறைய குடிசைத் தொழிலாக அங்கே செய்துகொண்டிருக்கின்றார்கள். அங்கே முதலாளிகள் இல்லை; அது பிற்படுத்தப்பட்ட பகுதி; முதலாளிகள் இல்லை என்பதால்தான், நான் அரசு மூலமாக தொழிற்சாலை அமைக்க வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற் கொள்கை 2008-ல், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குப் பல்வேறு மானியச் சலுகைகளை அறிவித்துள்ளார்கள். அதில் குறிப்பாக,

[2008 மார்ச் 28

மாநிலத்தில் எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படும் குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு, முதலீட்டு மானியம், மூன்று ஆண்டுகளுக்கு மின் மானியம்; முதல் ஆறு ஆண்டுகள் செலுத்தப்பட்ட மதிப்புக் கூட்டப்பட்ட வரி—VAT-க்கு ஈடான மானியம் ஆகியவற்றைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், வேளாண் தொழில்களைப் பொறுத்தவரை, மாநிலத்தில் எந்தப் பகுதியில் தொடங்கப்படும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு முதலீட்டு மானியம், மின் மானியம், வேலைவாய்ப்பு உருவாக்கும் மானியம், சிறப்பு வகை தொழில் முனைவோர் மானியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் தொழில்நுட்ப இயந்திரங்களுக்கு மானியம் என பல்வேறு மானியப் பலன்களைப் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது தவிர, தமிழக அரசு அறிவித்துள்ள 251 பின்தங்கிய வட்டாரங்களுக்கான மானியத் திட்டத்தில், ஜெயங்கொண்டம் பகுதியும் பின்தங்கிய வட்டாரமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் அனைத்து வகையான சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு மானியம் பெற பல்வேறு வாய்ப்புகள் இப்போது உள்ளன. இந்தச் சலுகைகள் மட்டுமின்றி, வேளாண் சார் தொழில் நிறுவனங்கள், மத்திய அரசின் மானியத்தைப் பெற்றாலும், மாநில அரசின் மானியத்தின் வேறுபாட்டுத் தொகையையும் பெறும் அளவிற்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, தனியார் முன்வந்தால், அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் சிறிய, பெரிய தொழிற்சாலை ஒன்றுகூட கிடையாது. நெசவுத் தொழில் நசிந்துவிட்ட காரணத்தினாலும், விவசாயம் குறைந்துவிட்ட காரணத்தினாலும், எங்கள் தொகுதியில் சிறு, குறு தொழிற்சாலைகளை அரசு தரிசு நிலங்களில் அமைத்து, எங்கள் தொகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, கஷ்டங்களைப் போக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.



2008 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்தியாவில் எங்கும் இல்லாத அளவிலே நமது தமிழக முதல்வர் அவர்கள் பெரிய தொழில்களுக்கான ஒரு புதிய தொழிற் கொள்கையும், அதேபோல சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளருவதற்கான தனியானதொரு கொள்கையும் அறிவித்துள்ளார்கள்.

அந்தக் கொள்கையிலே பல்வேறு சலுகைகள் இன்றைக்கு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, அவற்றைப் பயன்படுத்தித் தனியார்கள் முன்வந்தால், அரசு அனைத்து உதவிகளையும் தொழில் தொடங்குபவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதி இந்தியாவிலேயே தலைசிறந்த முந்திரி விளையக்கூடிய பகுதி. அங்கு முந்திரித் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்ற வேண்டுகோள் வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத் தொடரிலே முந்திரித் தொழிற்சாலை தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், தனியார் அங்கு தொழில் தொடங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். நாங்கள் வேண்டுவது மாண்புமிகு ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கேட்டதுபோல, முந்திரியிலிருந்து ஒரு பொருளைக்கூட வீணாக்காமல் முந்திரிக் கொழும்பு வார்னிஷ், பெயின்ட் தயாரிப்பதற்குப் பயன்படுகிறது. முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்வதற்கும், உணவு வகைகளுக்கும் பயன்படுகிறது.

அதேபோல் முந்திரியினுடைய பழம் ஒருவித பழச்சாறு—கோவா மாநிலத்திலே Fenny wines, தயாரிக்கிறார்கள். நாம் இங்கு பூரண மது விலக்கு கேட்டுக்கொண்டிருக்கிறோம். நான் அதைக்கூட வலியுறுத்தவில்லை. ஆனால், அதுபோல உற்பத்தி செய்து வெளி நாடுகளுக்கோ, மது எங்கு அமல்படுத்துகிறார்களோ அந்த மாநிலத்திற்கு அனுப்பி கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆதலால், தமிழக அரசு மக்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற வகையில்—வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற வகையில், முந்திரித் தொழிற்சாலைகளை அரசே முன்வந்து

[2008 மார்ச் 28

தொடங்குவதற்கு வழிவகை காணுமா? ஒரு தொழிற்சாலைகூட இந்த மண்ணில் பூர்வீகமாக இருக்கக்கூடிய மக்கள் அங்கு தொடங்கப்படவில்லை. கோளாவிலேயிருந்து வந்தவர்கள் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளைத் தொடங்கி கோடிக்கணக்கிலே சம்பாதிக்கிறார்கள். அதனால், நம்முடைய ஊரகத் தொழில் துறையும், தொழில் துறையும், வேளாண்மைத் துறையும் அந்த முந்திரித் தொழிற்சாலைகளை அரசே தொடங்கி அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கும், மூட்டைக்கு 5,000 ரூபாய் விலை வீதம் தருவதற்கும் முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா ஒரே நாடு என்று எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கின்றோம். நமது பா.ம.க. உறுப்பினர் மாண்புமிகு வேல்முருகன் அவர்கள், இங்கே Fenny என்ற சாராயத்தை உற்பத்தி செய்து அதை வேறு மாநிலங்களுக்கு விற்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவருடைய கட்சியின் கொள்கையிலிருந்து அது மாறுபாடாகத் தெரிகிறது என்பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய நிலையில் பல்வேறு சலுகைகளைப் பயன்படுத்தி தனியார்களை தொழில் செய்ய ஊக்குவிப்பதுதான் நடைமுறையாக இந்தியாவிலே இருக்கிறது. அரசாங்கம் தொழிற்சாலைகளை இப்பொழுது ஆரம்பிப்பதில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி பற்றிய சமீபத்திய ஆராய்ச்சி, ஒரு நாளைக்கு 10 முந்திரி சாப்பிட்டால் HDL என்று சொல்லக்கூடிய நல்ல cholesterol உடம்பிலே உருவாகும். ஆனால், LDL என்கின்ற கெட்ட cholesterol குறையும் என்கின்ற ஒரு ஆராய்ச்சியை விஞ்ஞானிகள் இங்கே உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். அது ஒருபுறம் இருக்க, இன்னொரு பலன் பொதுவாகவே உலகம் முழுவதும் ஒரு சர்வே செய்ததில் முந்திரி சாப்பிடுகின்ற பகுதிகளில் எல்லாம் மலட்டுத் தன்மை ஏற்படுவதில்லை என்கின்ற ஒரு ஆராய்ச்சியையும்



2008 மார்ச் 28]

கண்டுபிடித்திருக்கின்றார்கள். எனவே, நம்முடைய வேல்முருகன் தொகுதியிலே மட்டும் அந்த முந்திரியைச் சாப்பிட்டு வீரியத்தோடும், மலட்டுத்தன்மை இல்லாத ஒரு நிலைமையை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துத் தொகுதிகளிலும் முந்திரியைப் பயிரிட்டு, நல்ல cholesterol ஏறுவதற்கும், அதேநேரத்திலே மலட்டுத்தன்மை இல்லாத அளவிற்கு வீரியம் உடையவர்களாக உருவாக்குவதற்கும் அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகின்றேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து முந்திரிப் பருப்பைச் சாப்பிட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) முந்திரிப் பருப்பு சாப்பிட்டால் நிச்சயமாக cholesterol ஏற்படும், cholesterol ஏற்பட்டால் அறுவை சிகிச்சைக்குப் போக வேண்டியிருக்கும். அதற்குப் பிறகு இலட்சக்கணக்கான ரூபாய் செலவிட வேண்டியிருக்கும். அதைத் தவிர்ப்பது மொத்தமாக எல்லா உறுப்பினர்களுக்கும் நல்லது, தயவுசெய்து முந்திரிப் பருப்பை சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) No, No, உட்காருங்கள். No discussion, உட்காருங்கள்.

வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**16—**

## வரைபடத்தில் பதிவு

***25081—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறச் சாலைகளை வருவாய்த் துறையின் வரைபடத்தில் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் 1863 ஆம் ஆண்டுடன் முடிவுற்ற ஆரம்ப நில அளவைப் பணியின்பொழுதும் அதன் தொடர்ச்சியான மறு நில அளவையின்பொழுதும், 1979 ஆம் ஆண்டு தொடங்கி 1987 ஆம் ஆண்டு முடிய நடைபெற்ற நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின்போதும் கிராமப்புறச் சாலைகள் வருவாய்த் துறை வரைபடங்களில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

முற்பகல் 10-20

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்ற மண் சாலைகள் மற்றும் ஜல்லி சாலைகள் 1987 ஆம் ஆண்டுக்குப் பின்பாகப் போடப்பட்ட சாலைகளெல்லாம் வருவாய்த் துறையினுடைய நில வரைபடத்தில் பதிவு செய்யப்படாமல் உள்ளன. ஆகவே, 1987-க்குப் பின்பு புதிதாக அமைக்கப்பட்ட அந்தச் சாலைகளின் விவரங்களெல்லாம் கிராம நில வருவாய் வரைபடத்திலே பதிவு செய்யப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல, புதிய சாலைகள் அமைக்கின்றபோது, அவை வருவாய்த் துறை பதிவேட்டிலே தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 10 மீட்டருக்கு மேலே உள்ள சாலைகள் வண்டிப் பாதையாக இருந்தாலும், சாலையாக இருந்தாலும் தனிப் புலமாக பதிவு செய்யப்படுகின்றன. அதே சமயத்திலே 4 மீட்டரிலிருந்து 10 மீட்டர் வரை இருக்கின்ற சாலைகள் உட்பிரிவுச் சாலைகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. 4 மீட்டருக்குக் குறைவாக இருக்கக்கூடிய சாலைகள் எல்லாம், விலக்கிகளாக வருவாய்த் துறைப்





பதிவேட்டிலே பதிவு செய்யப்பட்டு வருகின்றன. தற்சமயம் நம்முடைய தலைவர் கலைஞர் அரசு புதிய நவீனத் தொழில்நுட்பத்தை, குறிப்பாக Global Positioning System என்று செயற்கைக்கோளின்மூலமாக சமிக்ஞைகளைப் பெற்று, அவற்றை, Total Station என்ற கருவியின்மூலமாக, துல்லியமாக ஆய்வு செய்து, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. இன்னும் அதற்கு ஒரு படி மேலாக, இன்றைக்கு நம்முடைய புவியியல் தடயங்களை வைத்து, புவியியல் இருப்பிடப் புள்ளிகளை வைத்து, geographical co-relates என்று சொல்வார்கள், அதை வைத்து, துல்லியமாக Total Station மூலமாக புதிதாக அளவை முறைகள் மாற்றப்பட்டு நடைபெற்று வருகின்றன. தமிழகத்திலே கடந்த ஆண்டு நம்முடைய அரசு ஆணையிட்டு, தொடர்ந்து சென்னை மாவட்டத்திலே மட்டும், ஆலந்தூர், அம்பத்தூர், மாம்பலம், வெங்கடாபுரம் மற்றும் அயனாவரம் ஆகிய இந்தப் பகுதிகளிலே துல்லியமாக, Total Station மூலமாக நவீனமுறையிலே அளவை முறைகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. புதிதாக திருப்பூர் நகராட்சியிலேயும் இன்னும் பல இடங்களிலே, தேனி மாவட்டத்திலே கம்பம் போன்ற நகராட்சிகளிலேயும் இந்தப் புதிய அளவை முறைகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி. இப்படி கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்ற மண் சாலைகள் மற்றும் ஜல்லிச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கு அல்லது செப்பனிடுகிற அந்தப் பணிகளைச் செய்யச் செல்லும்போது, அங்கேயுள்ள நிலச்சுவான்தாரர்கள் அவ்வாறு சாலையை மாற்றி அமைக்கும்போது, அங்கு பிரச்சினையை உண்டு பண்ணுகின்றார்கள். அதற்காகத்தான், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். 1987 ஆம் ஆண்டிற்குப் பிறகு அமைக்கப்பட்ட அந்தச் சாலைகளை எல்லாம் அந்த வரைபடத்திலே பதிவு செய்தால், புதிதாக தார்ச் சாலைகள் அமைக்கும்போதும், நல்ல முறையிலே அந்தச் சாலைகளைச் செப்பனிட ஏதுவாகவும், பிரச்சினை இல்லாமலும் இருக்கும் என்பதையும் தெரிவித்து, ஆவன செய்ய தங்கள்வாயிலாக வேண்டுகோள் வைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.

[2008 மார்ச் 28

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். சாலைகள் அமைப்பதற்கு முன்னால் அங்கேயிருக்கின்றவர்கள், தனி நிலச்சுவான்தாரர்கள் மறுப்புத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சாலைகள் அமைக்கப்பட்ட பின்னால், அவற்றை கிராமப்புறச் சாலைத் திட்டத்திலே நாம் எடுக்கின்றபோதே, வரைபடத்தில் சேர்க்கப்பட்ட பின்னால், சாலைகள் முழுமையாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஒருவேளை அப்படிப் புதிதாக உருவாகின்ற சாலைகள், அங்கே யாராவது தனியார், பட்டா நிலங்களிலே உள்ளவரால் மறுக்கப்பட்டால் அவற்றை வாங்கி, நம்முடைய அரசே அவர்களுக்கு முழு உதவிகளைச் செய்து, அவற்றைச் சரிபார்த்து அந்தச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, சாலைகள் அமைக்கப்பட்டவுடனே கண்டிப்பாக வருவாய்த் துறை வரைபடத்திலே ஏற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய time ஆகிவிட்டது. 10-24 ஆகிவிட்டது. (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

முற்பகல் 10-25

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான கேள்வி. கிராமப்புறச் சாலைகளைப் பதிவு செய்வதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழக்கமான விளக்கம் அளித்திருக்கிறார்கள். இதிலே நான் அறிந்துகொள்ள விரும்புவது, பதிவு செய்வது என்பது வருவாய்த் துறையினுடைய பணியாகத் தொடர்ந்து இருக்கிறது. ஆனால் பதிவு செய்யப்பட்ட அந்தச் சாலைகள் அல்லது அரசு புறம்போக்கு குளங்களாக இருந்தாலும் சரி, ஏரிகளாக இருந்தாலும் சரி, புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும் சரி, பதிவேட்டில் இருக்கிறது; ஆனால் பயன்பாடு வேறுவிதமாக இருக்கிறது. இப்படி பயன்பாடு வருகிற அளவிற்கு அந்த வாய்ப்புகளை அளிப்பது என்பது வருவாய்த் துறைதான். இது இப்போதா, நேற்றா, அதற்கு முந்தைய ஆட்சியா என்பதல்ல. தொடர்ந்து இந்த நிலை நீடித்துக்கொண்டே இருக்கிறது. ஆகவே, வருவாய்த் துறையின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட இந்த இடங்களைப் பாதுகாப்பது என்பதை ஒரு தொடர் நிகழ்ச்சியாக அரசு அல்லது வருவாய்த் துறை கவனத்தில்கொண்டு, அதைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்குமானால்,—



2008 மார்ச் 28]

இப்போது பட்டா வழங்குவதிலிருந்து பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்து நீடித்துக்கொண்டே வருகின்றன. இவற்றைப் போக்குவதற்குரிய தொடர்ந்த ஒரு நடவடிக்கையும் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய ஒரு திட்டத்தையும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். அதைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பொதுவாக இப்போது நெடுஞ்சாலைத் துறை சாலை சென்று கொண்டிருக்கிறது. பிரச்சினைகள் இல்லை. என்னுடைய சொந்த கிராமத்திலேயே செல்கிறது. ஆனால் கூட்டுப் பட்டா என்ற அடிப்படையிலேதான் அந்த இடம் இன்னமும் இருக்கிறது. அது சமுதாயம் என்ற பெயராலும் கூட்டுப் பட்டா என்ற பெயராலும் நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமான சாலைகள் சென்று கொண்டிருக்கின்றன. எனக்கே, கூட்டுப் பட்டாவிலே, ஒரு பகுதி இருக்கிறது. ஆனால் அது பயன்பாட்டில் இருக்கிறது. ஆனால் அந்தக் கூட்டுப் பட்டா என்ற அடிப்படையிலே அதை ஆக்கிரமிப்புச் செய்வதற்குரிய வாய்ப்புகள்கூட இருக்கின்றன. இன்னும் அப்படிப்பட்ட பதிவுகள் செய்யப்படாமல் இருப்பதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா? அதையும் பதிவு செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா? நான் ஏற்கெனவே சொன்ன அடிப்படையிலே அதைப் பாதுகாப்பதற்கான முயற்சி, அதைத் தொடர் நடவடிக்கையாக செய்வதற்குரிய ஒரு தொலைநோக்குப் பார்வையோடுகூடிய ஒரு திட்டம் இந்த அரசிடம் செயல்படுத்துவதற்கான முயற்சி இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே இரண்டு விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, சாலைகள் கூட்டுப் பட்டாவாக இருக்கிறது. அது சாலைகளாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் Highways ஆகக் கூட மாறிவிட்டது என்று சொல்லியிருக்கிறார். அது சாலைகள் அமைப்பதற்காக அரசு பல்வேறு துறைகள், நெடுஞ்சாலை மற்றும் வருவாய்த் துறை, மற்ற எல்லாத் துறைகளும் சேர்ந்து எடுக்கக்கூடிய கூட்டு நடவடிக்கை. ஒரு சாலை அமைப்பதற்கு, அவசியமான சாலைகள் அமைப்பதற்கு, நம்முடைய நெடுஞ்சாலைக்குத் தேவைப்படுகின்றபோது, அரசு, நம்முடைய வருவாய்த் துறை, அவற்றை அவர்கள் தர மறுத்துவிட்டால்,

[2008 மார்ச் 28

நிலச்சுவான்தார்கள் தனிப்பட்ட சொந்த உரிமையாளர்கள் தர மறுத்துவிட்டால், அரசாங்கமே கையகப்படுத்துகிற முறை ஒன்று இருக்கிறது, land acquisition. அதை கையகப்படுத்தும்போது அவர்கள் ஒருவேளை பணம் வாங்குவதற்கு மறுத்து, வழக்குக்குகூட நீதிமன்றம் போகலாம். அதற்காக அந்தச் சாலை அமைக்கின்ற பணி தடைபடுவதில்லை. உங்களுக்கே தெரியும், இப்போது National Highways, தேசிய நெடுஞ்சாலை 4 வழிச் சாலை இருக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலையெல்லாம் அமைக்கின்றபோது, யாராவது அதற்கு நீதிமன்றத்திற்குப் போனாலும் அதற்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையை நம் அரசாங்கம் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறோமே தவிர, நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருந்தாலும், சாலைகள் அமைக்கின்ற பணிக்கென்று அதற்குத் தனியாக சட்டம் போட்டிருக்கிறார்கள். ஏனென்றால் நாம் compulsory acquisition எடுத்துக்கொள்ளலாம். அதை யாரும் தடுக்க முடியாது. நீதிமன்றம்கூட தலையிட முடியாது, Number one.

இரண்டாவது, நீங்கள் சொன்னீர்கள். ஏற்கெனவே எடுத்து நிர்மாணிக்கப்பட்ட சாலைகளிலே அதைப் பாதுகாப்பது எப்படி என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அதற்குத்தான் இப்போது நவீன முறையிலே தொழில்நுட்பத்தைக்கொண்ட Global Positioning System என்று நாம் satellite-லே பதிவு செய்து, satellite உதவி கொண்டு Total Station என்ற அந்தக் கருவிமூலமாக எல்லாமே வந்துவிடும். அதிலே ஒரு புள்ளிகூட வந்துவிடும். எங்கே ஒரு இடம் இருந்தாலும், ஒரு சர்ச் இருந்தாலும் சரி, ஒரு mosque இருந்தாலும் சரி, அல்லது ஒரு கோயில் இருந்தாலும் சரி, சுடுகாடாக இருந்தாலும் சரி, எல்லா சமிக்ஞைகளும் அதிலே வந்துவிடும். முழுமையாக Total Station என்ற கருவிமூலமாக நவீன முறையிலே இப்போது பதிவு முறைகள் நடைபெற்று வருகின்றன. இந்த முறையிலே நீங்கள் சிட்டா அடங்கலோ அல்லது உங்களுடைய பட்டாவோ வாங்குவதற்கு நீங்கள் இன்றைக்குப் போய் வருவாய்த் துறை அலுவலகத்திலே கணினியை, தொடுதிரை கணினியிலே போய் நீங்கள் பணம் கட்டி உடனே switch on பண்ணினால் உங்களுக்கு, அந்த 20 ரூபாய் கட்டினால், அது கிடைத்து விடுகிறது. உங்களுக்குரிய பட்டாவினுடைய விளக்கங்கள், வரைபடங்களினுடைய விளக்கங்கள், புலப்படங்களினுடைய விளக்கங்கள் எல்லாம் கிடைத்து விடுகின்றன. இப்போது புதிய நவீன முறையை, தொழில்நுட்பத்தைக் கையாண்டு தமிழகம் முழுக்க அளவைகள் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட



2008 மார்ச் 28]

பின்னால், நீங்கள் எந்த நேரத்திலும் அதைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். Display பண்ணலாம். நீங்கள் எந்த நேரத்திலேயும், எந்த ரோடாக இருந்தாலும், தமிழ்நாடு முழுவதுமிருந்து பதிவு செய்யப்பட்டு வருவாய்த் துறை அலுவலகங்களிலே, வட்ட அலுவலகங்களிலே இவை பதிவு செய்யப்பட்டு, computerise செய்யப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். கணினிமயம்; மத்திய அரசினுடைய உதவியின்மூலமாக, தமிழக வருவாய்த் துறை, முழுக்க எல்லாப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணியின்மூலமாக இவை எல்லாம் எதிர்காலத்திலே பதிவு செய்யப்பட இருக்கின்றன. இது ஒரு தொடர் நடவடிக்கை.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**17—**

**வாகனப் பாதை**

***9995—திரு. அ. சின்னசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, வாணியம்பாடி வட்டம், கைலாசகிரி மலை மீதுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வாகனப் பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கைலாசகிரி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் துறைசார்ந்த திருக்கோயிலாகும். இது பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்தில் இருந்து வருகின்ற கோயிலாகும். இத்திருக்கோயிலினுடைய ஆண்டு வருமானம்

[2008 மார்ச் 28

3 இலட்சம் ரூபாய். இத்திருக்கோயிலுக்கு மலைமீது சென்றுவர, 2,405 மீட்டர் தூரத்திற்கு வாகனப் பாதை அமைக்கவேண்டிய நிலையில், 1998 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின்கீழ், 1,805 மீட்டர் தூரம்வரை ரூ.59.00 இலட்சம் மதிப்பீட்டில் மலைப் பாதை அமைக்கப்பட்டது. எஞ்சிய 600 மீட்டர் தூரம்வரை பாதை அமைக்கவேண்டும். இப்பணிக்கான நிதியாதாரத்தினைப் பொது மக்களிடமிருந்து வசூலிக்க இயலாத நிலையுள்ளது. திருக்கோயிலிலும் போதிய நிதி வசதி இல்லை. எனவே, நெடுஞ்சாலைத் துறையினரைத் தொடர்புகொண்டு, இப்பணிக்கான மதிப்பீட்டினைத் தயாரித்து, நிதியாதாரத்தை அரசு நிதியாகப் பெற்றுத்தர மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

**திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், கைலாசகிரி ஊராட்சியிலுள்ள சுப்பிரமணிய சுவாமி மலைக் கோயிலுக்கு வாகனப் பாதை அமைக்கவேண்டுமென்று பொதுமக்களும், அங்குள்ள பரம்பரை அறங்காவலர் குழு உறுப்பினர்களும் எங்களை அதிகமாக வற்புறுத்தி வருகின்றார்கள். கடந்த காலங்களிலே, இதற்கு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் தலைவர் கலைஞர் ஆட்சியிலே, இரண்டரை கிலோ மீட்டர் தூரமுள்ள அந்த வாகனப் பாதையிலே, 1,800 மீட்டருக்கு மண் பாதை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த 600 மீட்டருக்குண்டான மண் பாதையில், வாகனப் பாதை அமைக்கவேண்டும். இதைக் கடந்த காலங்களிலே நாங்கள் நம்முடைய அமைச்சர் அவர்களிடமும் கேட்டு வருகின்றோம். இதுநாள் வரையில் இது அமைக்கப்படாமல் உள்ளது. ஆடிக் கிருத்திகை நாட்களிலே இலட்சக்கணக்கான மக்கள் அங்கே சென்று வருகின்றார்கள். கார்த்திகை தீபம் மற்றும் விழாக் காலங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு செல்கின்றார்கள். பொதுமக்கள் நீண்டநாட்களாக அங்கே அந்த மலைப் பாதையில் வாகனப் பாதையை அமைக்கவேண்டுமென்று எங்களை அதிகமாக வற்புறுத்தி வருகின்றார்கள். ஆகவே, உடனடியாக, எங்களுடைய, மக்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த வாகனப் பாதையை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.



2008 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு இட்டிருக்கக்கூடிய கட்டளை என்னவென்றால், திருக்கோயிலுக்கு வந்து செல்லக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டுமென்றுதான் உத்தரவிட்டிருக்கின்றார்கள். 2,405 மீட்டர் தூரமுள்ள அந்த மலைப் பாதைகூட, கடந்த 1998 ஆம் ஆண்டு கழக ஆட்சி நடைபெற்றபொழுதுதான், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேதான், அந்தப் பணியும் முடிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும்கூட, அந்த முயற்சியிலே எஞ்சியிருக்கக்கூடிய 600 மீட்டர் தூரத்தையும் போட இயலாது என்று சொல்லவில்லை. போடுவதற்கான முயற்சிகளை, நிதியாதாரங்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். அவரும் சட்டமன்ற உறுப்பினரின் நிதியைக் கொண்டோ அல்லது நெடுஞ்சாலைத் துறையை அணுகியோ இந்த முயற்சியிலே வெற்றி பெற ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். இந்த வாகனப் பாதையை அமைக்கின்ற முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். தாங்கள் இதற்கு நிதியாதாரத்தைக் கொடுத்து, இந்தப் பணியை விரைவில் முடிப்பதற்கு ஆவன செய்திடவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

(முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, வினா வரிசை எண் 19 மற்றும் வினா வரிசை எண் 20 ஆகியவை திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2008 மார்ச் 28

## 2. தகவல் கோரல்

### (அ) பட்டுக்கோட்டை விரைவு நீதிமன்றம் பொன்னேரிக்கு மாற்றப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பொது விவாதம். 13 உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன், என்ன?*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பட்டுக்கோட்டை (குறுக்கீடு) ஒரு நிமிடம். பட்டுக்கோட்டை பகுதியில் இருக்கக்கூடிய (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவரைக் கூப்பிட்டிருக்கிறேன் இல்லையா. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்தான் உங்களைக் கூப்பிடுகிறேன் என்று சொல்கிறேன் இல்லையா. உட்காருங்கள்.*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பட்டுக்கோட்டையில் இருக்கக்கூடிய (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்தான் கூப்பிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன் இல்லையா. உட்காருங்கள்.*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *விரைவு நீதிமன்றம் பொன்னேரிக்கு மாற்றப்படுவது என்ற காரணத்தினால் அது மக்களிடையே (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் கூப்பிடுகிறேன் என்று சொன்னபிறகும், உங்கள் இஷ்டப்படி எடுக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *பட்டுக்கோட்டையிலே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து. . .*



2008 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்னைக் கட்டாயப்படுத்த முடியாது.*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *இன்றைக்கு கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. வர்த்தகச் சங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. பேரணிகள் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, அந்த விரைவு நீதிமன்றத்தை மீண்டும் பட்டுக்கோட்டையிலே கொண்டுவருவதற்கு அரசு எதுவும் முயற்சி எடுக்குமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர். (குறுக்கீடு)*

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *முதலிலேயே தெரிவித்திருக்க வேண்டாமா? சரி, பரவாயில்லை. உட்காருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த ஊரில் நீதிமன்றங்கள் ஆரம்பிப்பது என்பது உயர் நீதிமன்றத்தினுடைய பணி. காரணம், எந்த இடத்திலே* work *load அதிகமாக இருக்கின்றது. வழக்குகள் அதிகமாக இருக்கின்றன. எந்த இடத்திலிருந்து பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் முழுக்க முழுக்க உயர் நீதிமன்றம்தான் செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் என்னிடத்திலே பார்த்துச் சொன்னார்கள். ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். நான் அந்தக் கடிதத்தை உயர் நீதிமன்றத்தினுடைய* Registrar*–க்கு அனுப்பி, அதுகுறித்து* Home Secretary*–க்கு அனுப்பி கேள்வி கேட்கச் சொல்லியிருக்கிறேன். எனவே, மீண்டும் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் இருக்கிற நிலமையை அவர் இந்த மாமன்றத்திலே பிரதிபலித்திருக்கிறார். அதனால் அது மாற்றப்படுவதும், மாற்றப்படாததும் மாற்றுகிற உரிமையில் முழுக்க முழுக்க நாங்கள் தலையிடவே முடியாது,* Constitution *பிரகாரம். அதெல்லாம் அவர்களுடைய சமாச்சாரம். இருந்தாலும், மக்களுடைய கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டியிருக்கிற காரணத்தால் நான் மீண்டும் உயர் நீதிமன்றத்தில் அவர்களுடைய கவனத்திற்கு இதைக்கொண்டு போகிறேன்.*

*(செல்ஃபோன் மணி ஒலித்தது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *செல்ஃபோன் யார் வைத்திருக்கிறீர்கள்? அவைக்குள் வரும்போது அதை* off *செய்துவிட்டு வாருங்கள். சரி. ரங்கராஜன், முடிந்ததல்லவா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

[2008 மார்ச் 28

## (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 56-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து விவாதிக்க பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்ற தீர்மான அறிவிப்பினை அறிவித்து ** (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அது ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) திரு. செங்கோட்டையன், அது ஆய்வில் இருக்கிறது. (கூச்சல்-குழப்பம்) நீங்கள் இன்று காலையில் என்முன்னால் வந்து அமர்ந்திருந்தீர்கள். அப்படி இருக்கும்போதே நீங்கள் எடுக்கிறீர்களா என்று என்னிடம் கேட்டிருக்கலாம். பிரச்சினையைப் பெரிதாக்க வேண்டுமென்றுதான் நீங்கள் இப்போது இதைக் கேட்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன் சொல்லிய வார்த்தைகள் அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள், திரு. ஞானசேகரன். (குறுக்கீடு) No, no. உட்காருங்கள்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

# 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

## (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 மார்ச் 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10-40

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், அனுமதியளித்த பிறகுதான் பேச வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை பொது விவாதம். பேசுவோர் பட்டியலில் மொத்தம் 13 பேர் பேச இருக்கிறார்கள். அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) எங்கே இருக்கிறார்? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் பேச அனுமதி அளித்த மங்காப் புகழ் கொண்ட மாசற்ற தலைவி, உலகம் போற்றும் உன்னதத் தலைவி, உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த ஒப்பற்ற தலைவி, மாற்றம் படைக்கத் துடிக்கும் மகாசக்தி, அதிசயத்தின் ஆணி வேர், தமிழகத்தின் அட்சய பாத்திரம், எங்கள் அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் பணிவான வணக்கங்களைச் சமர்ப்பித்து, அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விலைவாசி விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்துவிட்டது. கட்டுமானப் பொருட்களின் விலைகள் தற்போது ராக்கெட் வேகத்திலே உயர்ந்துகொண்டே போகின்றன. கம்பி விலை 1 டன்னுக்கு ஒரு மாதத்திற்குள்ளாக 20,000 ரூபாய் உயர்ந்திருக்கிறது. இதனால் ஏழையெளிய நடுத்தர மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். சாதாரணமான ஏழையெளிய நடுத்தர மக்கள் வீடு கட்ட வேண்டுமென்றால் கனவுதான் காண முடியுமே தவிர, வீடு கட்ட முடியாத சூழ்நிலைதான் இந்த ஆட்சியில் நிலவுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை ஏதும் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அத்தியாவசியப் பொருட்களின்மீதான வரியைக் குறைத்து விலைவாசியைக் கட்டுப்படுத்துவது குறித்து இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெறவில்லை. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே தமிழகத்தில் நிதிநிலை மோசமாக இருந்தபோதும், இரண்டு ஆண்டுகளாக கடுமையான வறட்சி, சுனாமி பேரலை, கடுமையான வெள்ளம், மத்திய அரசு நான்கு முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியது இத்தனை இடர்பாடுகளுக்கு இடையேயும், மாண்புமிகு அம்மா அவர்களின் சிறந்த நிர்வாகத்தின் காரணமாக ஏழையெளிய மக்கள் நலனில் அக்கறை கொண்டு விலைவாசி உயர்வைக் கட்டுக்குள் வைத்திருந்த ஒரே தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்கியது. நடுராத்திரியில்கூட பெண்கள் எந்தவித அச்சமுமின்றி சாலையில் நடந்து செல்லக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால் இந்த தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் கெட்டுவிட்டது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்ற நிலையில்தான் தமிழகம் இருந்து வருகிறது.

இந்த ஆட்சியிலே சட்டம் ஒழுங்கு எந்த அளவுக்குச் சந்தி சிரிக்கிறது என்பதற்கு சில சம்பவங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உங்கள் தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள் தேவர் ஜெயந்தி விழாவிற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஆதாரத்தோடு பேச வேண்டும். ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். *(குறுக்கீடுகள்)*

**திரு. இரா. குமரகுரு:** கிருஷ்ணசாமி அவர்கள் தேவர் ஜெயந்தி விழாவிற்குச் செல்லும்போது அவரை வேல் கம்பால் குத்திக் கொலை செய்ய முயற்சி நடந்தது. மதுரை தினகரன் அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டதில் 3 பேர் உயிரோடு எரிக்கப்பட்டனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான் வேதம் ஓதுவதுபோல சட்டம் ஒழுங்கைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இவர்களுடைய ஆட்சியில் இவர்கள் கட்சியைச் சேர்ந்த மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சொக்கலிங்கம், தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரமேஷ் ஆகியோரை, இவர்களே ஆள் வைத்து அடித்த கதையெல்லாம், யாரும் மறந்துவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமரகுரு பேசுங்கள்.

*முற்பகல் 10-45*

**திரு. இரா. குமரகுரு:** சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் ரிமோட் கண்ட்ரோல்மூலமாகக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். திருவாரூர் தி.மு.க. மாவட்டச் செயலாளர் பூண்டி . . .

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் உயிரோடு இருக்கிறார். இறந்துவிட்டார் என்று உறுப்பினர் சொல்கிறார்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்மன்றத் தலைவர் முருகன் அவர்கள், கடந்த மாதம் எழும்பூர் நீதிமன்றத்திலே, ரஜினி என்ற வழக்கறிஞர் பட்டப்பகலில் ரௌடிகளால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கின்றார். விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்திலே, ஏ. பண்டலம் கிராமத்தில், கடந்த 27-3-2008 அன்று இரவு சண்முகம்,



த/பெ. பாவாடை என்பவரைக் கொலை கும்பல் அவரது வீட்டிற்குச் சென்று அடித்துக் கொலை செய்து, நடுரோட்டில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். குற்றவாளியை இதுவரை கண்டுபிடிக்கவில்லை. மேலும் குறிப்பாக, சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினரின் சொந்த ஊரில் இந்தக் கொலைச் சம்பவம் நடந்துள்ளது. செண்டூரில் குண்டுவெடிப்பு நடந்திருக்கிறது. மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றால், வலையில் மீன் சிக்குகிறதோ இல்லையோ, அங்கே ராக்கெட் குண்டுதான் மீன் வலையிலே சிக்குகிற நிலைமை இப்போது இந்த நாட்டில் நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்த ஆட்சி ரௌடிகளுக்குத்தான் பாதுகாப்பாக இருக்கிறதே தவிர, ஏழையெளிய மக்களுக்குப் பாதுகாப்பாக இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எளையூர் கிராமத்திலே, கடந்த 9-3-2008 அன்று கிருத்துவர்களின் இரு பிரிவினருக்கிடையே ஏற்பட்ட மோதலில், காவல் துறை கலவரத்தை அடக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடியடி, கண்ணீர்ப் புகை போன்றவற்றை நடத்தாமல் மக்கள் எதிர்பாராத நேரத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தியதால், இரண்டு பேர் கொல்லப்பட்டனர். இப்படியொரு துப்பாக்கிச்சூடு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் எப்போதும் நடந்தது கிடையாது. எளையூர் கிராமத்தில் ஒரு வார காலமாக நடந்து கொண்டிருக்கிற இந்த இரு இனப் பிரிவினருக்கிடையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையில் காவல் துறையும், வருவாய்த் துறையும், சரியான நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்காது. அங்கே வீடுகளுக்கும், பொருட்களுக்கும் சேதம் ஏற்பட்டிருக்காது. இதற்கெல்லாம் இந்த அரசின் மெத்தனப் போக்குதான் காரணம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தி.மு.க. அரசு, ஆண்டுக்குப் பல மெகா அறிவிப்புகளை நிதிநிலை அறிக்கையில் வழங்கத் தவறுவதில்லை. அறிவிப்புகள்தான் வருமே தவிர, திட்டங்கள் நிறைவேற்றப்பட்டனவா என்றால் இல்லை. உதாரணத்திற்கு, விழுப்புரம் மாவட்டத்திலே 2006-2007 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று சொன்னீர்கள். பிரம்மாண்டமாக அடிக்கல் நாட்டு விழா நடத்தினீர்கள். ஆனால், இன்னமும் தொடங்கப்படவில்லை. தொடங்க வேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால், பிரச்சினை இல்லாத இடமாகத் தேர்வு செய்திருப்பீர்கள். மக்களின் எதிர்ப்பை மீறி இடத்தைத் தேர்வு

[திரு. இரா. குமரகுரு] [2008 மார்ச் 28

செய்தது ஏன்? மருத்துவக் கல்லூரி விழுப்புரத்தில் தொடங்கப்படுமா அல்லது அறிவிப்போடு திட்டம் முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு, வருவாய்த் துறையின்மூலமாக இடம் வழங்கப்பட்டுவிட்டது. கண்டிப்பாக மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. குமரகுரு, பேசுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியை எந்த இடத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏரிப் பகுதியிலா, அல்லது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எந்த இடத்தைக் குறிப்பிட்டுக் கேட்டார்களோ, உயர் நீதிமன்றத்தில் இருக்கிற தடையாணையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருவாய்த் துறையும் நிலத்தை வழங்கிவிட்டது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயிர் காக்கும் மருந்துகள், அதாவது vaccine தயாரிக்கக்கூடிய மூன்று நிலையங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. சென்னையில் BCG Vaccine Laboratory, Pasteur Institute, Coonoor, உத்திரப்பிரதேசத்தில் உள்ள Central Research Institute ஆகிய உயிர் காக்கும் மருந்துகள் தயாரிக்கக்கூடிய நிலையங்களை மூடிவிடப்போவதாக மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். செங்கல்பட்டில் 150 கோடி ரூபாய்



2008 மார்ச் 28] [திரு. இரா. குமரகுரு]

முதலீட்டில் புதிய மருந்து தயாரிப்பு நிறுவனம் அமைக்கப்படும் என்றும், அதுவரை தனியாரிடம் மருந்துகளை வாங்கவேண்டியதுதான் என்றும் கூறியுள்ளார்கள். இந்த அறிவிப்பு வெளிவந்ததிலிருந்து இதுவரையில் மாநில அரசாங்கம் வாய்மூடி மௌனமாக உள்ளது. இப்போதே எந்த அரசு மருத்துவமனையிலும் உயிர் காக்கும் மருந்துகள் இல்லை. நாயோ, பாம்போ பங்களாவில் உள்ளவர்களையோ, அல்லது ஏ.சி. காரில் பயணம் செய்பவர்களையோ கடிப்பது கிடையாது. ஏழையெளிய மக்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசு மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறாரா? எந்த மருத்துவமனையில் உயிர் காக்கும் மருந்துகள் இல்லையென்பதைக் குறிப்பிட்டுப் பேசவேண்டும். பொத்தாம்பொதுவாகப் பேசக்கூடாது. உயிர் காக்கும் மருந்துகள் எல்லா மருத்துவமனைகளிலும் இருக்கின்றன. ஆகவேதான், ஒவ்வொரு மருத்துவமனையிலும் இப்போது வெளிநோயாளிகள் அதிகமாக வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-50*

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் நடுவண் அரசினுடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் உயிர் காக்கும் மருந்து தயாரிக்கிற தொழிற்சாலைகளை மூடுவதாக அறிவித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்கே சொன்னார்கள்? அப்படி எதையும் சொல்லவில்லை. உயிர் காக்கின்ற மருந்து அவசியம் தேவை. மருந்துகள் தயாரிக்கின்ற நிலையங்களை மூட வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. தவறாக, அவதூறாக அவையில் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே, உயிர் காக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் டாக்டரா? ஒரு குத்துமதிப்பாகப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) அனுபவரீதியாகவா?

**திரு. இரா. குமரகுரு:** மூடிவிடப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். உயிர் காக்கும் மருந்து தயாரிக்கும் நிலையங்களை மூடினால், தனியாருக்கு இந்த மருந்துகள் தயாரிப்பதை ஒப்படைத்தால், மருந்துகளின் விலை உயருமே தவிர, இதனால் மக்களுக்குப் பயன் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, பத்தி 115-ல் மீனவர் நலன் பற்றிக் கூறியிருக்கின்றீர்கள். மீனவ மக்களுக்கு சுனாமி வந்தவுடன் நிவாரணப் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்தி முடித்து நிவாரண உதவிகளை உடனுக்குடன் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள். கட்டுமரம் வாங்குவதற்கு 32,000 ரூபாயும், fibre boat வாங்குவதற்கு 75,000 ரூபாயும், விசைப் படகு வாங்குவதற்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கி மீனவ மாணவ மாணவியரின் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்று நடத்தும் என்றும் அம்மா அவர்கள் ஆணை வழங்கினார்கள். ஆனால், இன்று கல்விக் கட்டணத்தை அரசு ஏற்று நடத்தும் என்று அறிவித்தார்களே தவிர இதுவரையிலும் வழங்கப்படவில்லை.

அதேபோன்று இடைக்கால நிவாரண உதவிகள். . .

***மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு மீனவ மக்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்தப்படவில்லையென்று இங்கே அவைக்கு ஒரு தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கின்றார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகுதான்—2004 ஆம் ஆண்டு சுனாமி பேரழிவு ஏற்பட்டது. அன்றைக்கு ஆட்சியிலே யார் இருந்தார்கள் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். 2006 ஆம் ஆண்டில் ஏற்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்—தலைவர் கலைஞருடைய அரசுதான் மீனவ மக்களுக்கு, சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரை மக்களுக்கு ஒன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவ மாணவியருக்கு மாதம் ரூ.300 வீதம் ஆண்டுக்கு 3,000 ரூபாயை



வழங்கியது என்பதை இந்த அவைக்கு நான் ஆதாரத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே மொத்தம் கட்டணமாக நம்முடைய மீனவ மக்களுக்கு திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரை மொத்தம் ரூ. 26 கோடியே 92 இலட்சத்து 53 ஆயிரத்தை 2006 ஆம் ஆண்டு மற்றும் 2007 ஆம் ஆண்டிற்கும் (குறுக்கீடுகள்) வழங்கியிருக்கிறோம் என்பதனை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டுமானம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்களின் 14 வாரியங்களை தொழிலாளர் நலத் துறையிடமிருந்து பிரித்து வருவாய்த் துறையிடம் ஒப்படைத்து இந்த அரசு உத்தரவு போட்டுள்ளது. இதனைக் கண்டித்து மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து 14 வாரியங்களும் தொழிலாளர் நலத் துறையின்கீழ்தான் செயல்பட வேண்டுமென்று அறிக்கை அளித்திருக்கிறார்கள். நேற்று முன்தினம்கூட சென்னை உயர் நீதிமன்றம் மேற்படி அரசு உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. ஏற்கெனவே வருவாய்த் துறையில் உள்ள வேலையையே அவர்களால் பார்க்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, மேற்படி உத்தரவை தொழிலாளர்களுடைய எண்ணத்தின் அடிப்படையில் இரத்து செய்து மீண்டும் அந்த வாரியங்களை தொழிலாளர் நலத் துறையிடம் ஒப்படைப்பதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாரியங்களை வருவாய்த் துறையிலே இணைத்ததைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். எல்லா வாரியங்களும் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சரின்கீழ்தான் செயல்படுகின்றன. ஆனால், அவர்கள் உதவி பெறுகின்ற நேரத்திலே, தொழிலாளர் நலத் துறைக்கு தமிழ்நாடு முழுவதும் அதிகாரிகள் கிடையாது. ஒரு வாரியத்திலே இருக்கிற உறுப்பினர் மூன்று வாரியங்களிலே உறுப்பினராகி, சில தவறுகள் செய்ய நேரிட்டால், அவற்றைச் சரிபார்ப்பதற்கு அந்தத் துறைக்கு எந்தவிதமான, ஆட்களும் இல்லை. ஆகவேதான், பணம்

விநியோகிக்கும்போது மட்டும், வருவாய்த் துறைமூலமாக அந்தப் பணம் விநியோகிக்கப்படும் என்பதற்காக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அதை நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த நீதிமன்றத்திற்கு சரியான தகவலைச் சொல்லி, உடனடியாக அவர்கள் கொடுத்திருக்கிற தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்படும்.

*முற்பகல் 10-55*

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தொழிலாளர்கள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும், இரண்டு-மூன்று இடங்களில் நிவாரணத்தைப் பெறுவது குறித்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை அவர்கள் வாங்கும்போது, அவர்களின் அடையாள அட்டையிலே, அதை வாங்கியதற்கான குறிப்பைப் பதிவு செய்துவிட்டால், மீண்டும் அவர்கள் வாங்குவதற்குத் தடையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்து, தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகள் நலனில் அக்கறை காட்டுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு உரம் தட்டுப்பாடு நீக்குவதற்கு எந்த நடவடிக்கையும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. விதைத் தட்டுப்பாட்டிற்கு எந்த ஒரு விமோசனமும் இல்லை. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க உத்தரவாதமும் இல்லை. கோதுமைக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும்போது, நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்க எந்தவித நடவடிக்கையும் இல்லை.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விற்பனைக்கு வைக்கும்போது வியாபாரிகள் காலையில் ஒரு விலையை நிர்ணயித்துவிட்டு, மாலையில் பணம் பட்டுவாடா செய்யும்போது, விலை குறைத்துக் கொடுத்ததனால் ஆத்திரம் அடைந்த விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டபோது போலீசார் தடியடி நடத்தி விவசாயிகளை அவதிக்குள்ளாக்கினார்கள். இந்தச் சம்பவம், திண்டிவனம், செஞ்சி போன்ற இடங்களில் நடைபெற்றது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் இரண்டு புதிய பஸ் ரூட்கள் இயக்கப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், நான் விழுப்புரம் மேலாண்மை இயக்குநர் அவர்களிடம் எனது தொகுதிக்காக குறிப்பிட்ட சில புதிய வழித் தடங்களைக் கோரியும், வழித் தடம் நீட்டிப்பு கோரியும் கடிதம் அளித்தேன். நான் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால், என்னுடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. ஒரு கோரிக்கைகூட நிறைவேற்றப்படவில்லை. எனது தொகுதியில் புதிய வழித்தட பஸ் இயக்குவது குறித்து எனக்குத் தெரியப்படுத்தாமல், எனது தொகுதியில் ஒரு மந்திரியை அழைத்துவந்து, பஸ் போக்குவரத்து தொடங்கினால் ஒன்றும் இல்லை. ஆனால், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நான் இருக்கின்றபோது, அதிகார துஷ்பிரயோகமாக பக்கத்து தொகுதி, சட்டமன்ற உறுப்பினரை அழைத்து, எனது தொகுதியில் பஸ் போக்குவரத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதை நான் வன்மையாக இந்த மாமன்றத்தில் கண்டிக்கின்றேன். இதில் என்னுடைய உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே சட்டமன்ற உறுப்பினர் பேசும் போது தனது தொகுதியில் ஒரு பஸ்கூட எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தினால், இயக்கவில்லை என்று சொன்னார். அடுத்த வரியிலேயே சொல்கிறார், பக்கத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரைக் கூட்டிவந்து தனது தொகுதியிலே பேருந்தை இயக்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். எங்களுக்கு ஆளுங் கட்சி உறுப்பினர் தொகுதி, எதிர்கட்சி உறுப்பினர் தொகுதி என்ற கட்சி வித்தியாசம் இல்லை. தயவு செய்து, நீங்கள் எந்த இடத்திற்குப் பேருந்து கேட்டாலும், கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, வேண்டுமென்றே இட்டுக்கட்டி எதையும் சொல்லத் தேவையில்லை.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதி உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி உறுப்பினருடைய சொந்த ஊர். அதற்கு அவர்கள் முறையிட்டு அந்தப் பகுதியிலே எனக்குத் தெரியாமலேயே பேருந்துகளை இயக்கியிருக்கிறார்கள். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். நான் எனது தொகுதிக்குட்பட்ட பகுதி மக்களைச் சந்தித்து குறைகளைக்

கேட்டபோது பல வழித்தடங்களைக் கேட்டிருக்கிறார்கள். வழித்தடங்களை நீட்டித்துத் தருவதற்கும் அவர்கள் என்னிடம் முறையிட்டார்கள். அதையெல்லாம் அங்கே மேலாண்மை இயக்குநரிடம் சென்று 65 கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். அவற்றில் ஒரு கோரிக்கைகூட நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் மெத்தப் பணிவோடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நான் கொடுத்திருக்கின்ற அந்த விண்ணப்பத்தைப் பார்த்து எனது தொகுதி மக்களுக்கு அவர்கள் கேட்ட வழித்தடங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவர் பஸ் கொடுக்கிற மூடில்தான் இருக்கிறார்.

**திரு. இரா. குமரகுரு:** கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் இந்த நடவுப் பருவம் தொடங்கி ஆறு மாத காலமாகியும் இதுவரை ஆலைகள்மூலம் வழங்கப்படும் உரங்கள் வழங்கப்படவில்லை. இப்பேர்ப்பட்ட ஒரு அவல நிலையை தமிழக கரும்பு விவசாயிகள் ஒருபோதும் சந்தித்ததே கிடையாது. இந்த அரசு தமிழக கரும்பு விவசாயிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை.

இந்த ஆண்டு இதுவரை எதிர்பார்த்த அளவுக்கு கரும்பு விவசாயிகள் கரும்பு நடவு செய்யவில்லை. காரணம், கரும்பு நடவு செய்யும்போதே ஊழல் ஆரம்பமாகி விடுகிறது. உரம் மற்றும் பூச்சி மருந்து வாங்க கடன் வழங்குவதில் முறைகேடு. வெட்டு உத்தரவு வழங்குவதில் முறைகேடு. வெட்டிய கரும்பை ஆலைக்கு எடுத்துச் செல்ல வாகனம் ஒதுக்குவதில் முறைகேடு. *(மணியடிக்கப்பெற்றது)* ஆலைகளில் பதிவு செய்யாத கரும்பை. . .

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** ஆலைகளில் பதிவு செய்த கரும்பை வெட்டாமல், பதிவு செய்யாத கரும்பை போலியாக, பதிவு செய்ததாகக் கையூட்டு பெற்றுக்கொண்டு பதிவு செய்யாத கரும்பை வெட்டியதால், ஒவ்வொரு ஆலையிலும் பதிவு செய்த கரும்புகள் 15 மாத காலம்,



18 மாத காலம் ஆகியும் வெட்டப்படாமல் உள்ளன. சில விவசாயிகள் கரும்பை வெட்டாமல் தீயிட்டுக் கொளுத்துகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கம் கரும்பு விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்குத் தேவையான நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன். 20 நிமிடங்கள் உங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அவர், பட்ஜெட்டைப் பாராட்டி நன்றி சொல்கிறாரா? நன்றி சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. முல்லைவேந்தன், அரை நிமிடம் இருங்கள். நன்றி சொல்லிவிடட்டும்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையிலே மையமாக 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு வாகன விபத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே, உளுந்தூர்பேட்டை, திருநாவலூர், எலவனாகர்கோட்டை, திருவெண்ணெய்நல்லூர் போன்ற காவல் நிலையங்கள் இருக்கின்றன. அங்கே சுமார் 1,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே ஒரு சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று தற்போது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. முல்லைவேந்தன்.

***திரு. வ. முல்லைவேந்தன்:** இந்தியத் துணைக் கண்டத்தினுடைய இருள் அகற்ற வந்த ஓய்வறியா சூரியனாம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்கு அளித்த இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், வருங்கால தமிழகத்தினுடைய வரலாற்று நாயகராய் நெருப்பாற்றில் நீந்தி வந்த புடம்போட்ட தங்கமாய், எதிரிகளுடைய சிம்மசொப்பனமாய் விளங்குகிற தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை குறித்து என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கான வாய்ப்பை வழங்கியதற்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை குறித்து அரசியல் கட்சித் தலைவர்களும், சான்றோர் பெருமக்களும், பத்திரிகையாளர்களும், நாடாளுகிற நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கிறவர்களும், மத்தியிலே இருப்பவர்களும் மனம் திறந்து பாராட்டி இருக்கிறார்கள். அறிவு ஜீவிகளாலே பாராட்டப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை குறித்து ஓரிரண்டு பேர் மாத்திரம் தங்களுடைய மாற்றுக் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அது அவர்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்துகிறது என்பதை நான் உணர்வேன். இந்த நிதிநிலை அறிக்கை 90 பக்கங்களை உள்ளடக்கியதாகவும், இது வெறும் பூஜ்ஜியம்தான் என்றும் சொன்னார்கள். இராஜ்ஜியத்தை இழந்தவர்களுக்கு பூஜ்ஜியமாகத்தான் தெரியும். இந்த 90 பக்க அறிக்கையிலே இருக்கிற, நிதிநிலை அறிக்கையிலே இருக்கிற சிறப்பு வாய்ந்த திட்டங்கள் எல்லாம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிடுமானால் தனக்கு பூஜ்ஜியம்தான் கிடைக்கும் அடுத்த தேர்தலில் என்பதை உணர்ந்திருக்கிற காரணத்தாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்கள் இப்படிப் பேசுகிற நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதோடு, இந்த நிதிநிலை அறிக்கையால் தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள் இராஜ்ஜியத்தைப் பெறுவதும், இதை விமர்சிப்பவர்கள் பூஜ்ஜியத்தைப் பெறுவதும் உறுதி என்பதை நான் முதலில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், 'ஒய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம், அதிலே உள்ளே இருப்பது ஈறும், பேனுமாம்' என்று குறிப்பிட்டார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புவது எல்லாம், இங்கே 'ஒய்யாரக் கொண்டையும் போட முடியாது, அதிலே தாழம்பூவும் சொருக முடியாது, அதனுள்ளே ஈறும் பேனும் குடியேறுவதற்கான வாய்ப்பும் இல்லை. அங்கே ஒய்யாரக் கொண்டையும் போடலாம், தாழம்பூவும் சொருகலாம், ஈறும் பேனும் குடியிருக்கலாம் என்பதை அவருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே ஒன்றும் இல்லை என்று சொன்னவர்களுக்கு ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அண்ணாவின் பெயரால் இயக்கத்தை வைத்திருக்கிறீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப் போகிறோம், ஓராண்டு காலம்



என்று நிதிநிலை அறிக்கையில் நம்முடைய இனமான பேராசிரியர் அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் சார்பாக அறிவித்திருக்கிறார்கள். அண்ணா யார் என்றே அடையாளம் தெரியாதவர்களுக்கு அண்ணாவைத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்குத்தான் நூற்றாண்டு விழா என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் முதலில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1949 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் சென்னை ராபிட்சன் பூங்காவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கி, இரு வண்ணக் கொடியை கொட்டுகிற மழையில் ஏற்றி வைத்தபோது, உடனிருந்தவர்தான் கலைஞர். அந்தத் தலைவர் கலைஞர்தான் கண்ணை இமை காப்பதுபோல, இன்றைக்கு அந்தக் கொடியையும் காத்து, நாட்டு மக்களையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த அண்ணனுக்கு, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா எடுப்பதுதான் பெருமைக்குரிய ஒன்றாகும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

அன்பிற்குரிய நண்பர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு விழா எடுக்கிற நம்முடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நாடு விடுதலை பெற்றபோது, வெள்ளையன் வெளியேற்றப்பட்டபோது வெள்ளி விழா கொண்டாடிய தலைவர் கலைஞர். . .

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முல்லைவேந்தன், ஒரு நிமிடம் இருங்கள். திரு. கலைராஜன், சொல்லுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயருக்கும், புகழுக்கும், யார் பெருமை சேர்த்தார்கள் என்று சொல்கிறபோது, அண்ணாவின் பெயரால் கட்சியை வைத்திருக்கின்வர்கள் எங்களைப் பற்றித் தவறாக இங்கே குறிப்பிட்டார். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய குடும்பத்திற்கு உதவுகின்ற விதத்திலே, அவர் எழுதிய புத்தகங்களையெல்லாம் நாட்டுடைமையாக்கி, 75 இலட்சம் ரூபாயை வழங்கிய வள்ளல்தான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. முல்லைவேந்தன், பேசுங்கள்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** அண்ணாவைத் தொடர்ந்து, தமிழ் எழுத்தாளர்களுக்கு, சான்றோர் பெருமக்களுக்கெல்லாம் பரிவுத் தொகை வழங்கப்படும், அவர்களுடைய புத்தகங்கள் நாட்டுடைமையாக்கப்படும் என்கின்றபோது, இதிலே பூஜ்ஜியம் என்று சொல்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். அதேநேரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றார்கள். அவர் எப்படிப்பட்ட தலைவர் என்று சொன்னால், இந்திய நாட்டிலே இருக்கின்ற அரசியல் தலைவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னங்களை எழுப்பியவர்; பகத்சிங்குக்கு நூற்றாண்டு விழா கொண்டாடவேண்டுமென்று, நாடு, மொழி, இனம் கடந்து, தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருப்பவர்; கட்சி வேறுபாடு இல்லாமல் செய்யக்கூடிய ஆற்றல் உடையவர்; பெருந்தலைவர் காமராசராக இருந்தாலும், மூதறிஞர் இராஜாஜியாக இருந்தாலும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தாக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் நினைவு மண்டபங்களை உருவாக்கித் தந்தவர்; அதுமாத்திரமல்லாமல், அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபத்தைக் கட்டித் தந்தவர்; நெற்கட்டும்செவலில் வீரன் பூலித்தேவனுக்கு சிலை அமைத்துத் தந்தவர்; மண்டபம் கட்டியவர்; விஸ்வநாததாஸுக்கு நினைவு மண்டபம் உருவாக்கித் தந்தவர்; வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கியவர்; பூம்புகாரை உருவாக்கியவர்; வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவிடத்திற்குப் பெருமை சேர்த்தவர்; பாரதியார் நினைவு இல்லத்தைப் பெருமைப்படுத்தியவர்; தேவர் இல்லத்தை உருவாக்கித் தந்தவர்; இப்படிச் சொன்னால் வரலாறுகள் நீண்டுகொண்டே போகும்.

அதுமாத்திரமல்லாமல், எல்லாவற்றுக்கும் மேலாக, குமரி முனையில் முக்கடலும் சங்கமிக்கின்ற இடத்தில் 133 அடி உயரத்தில் வானுயர வள்ளுவனுக்கு சிலை அமைத்தார். சுனாமி வந்தபோது, கடலோரம் இருந்த மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், ஏன், ஆண்டவன் குடியிருக்கின்ற ஆலயங்கள்கூட காணாமல் போனதுண்டு. இலட்சக்கணக்கான பேர், இருக்கின்ற இடம் தெரியாமல் மறைந்துபோன வரலாறுகூட உண்டு. ஆனால், சுனாமி 133 அடி உயரமுள்ள வள்ளுவன் சிலை வரையில் வந்து, தொட்டுத்



தழுவி நீராடிவிட்டுச் சென்றதே தவிர, அந்தச் சிலையைத் தொட்டுப் பார்ப்பதற்கு, ஆட்டி, அசைத்துப் பார்ப்பதற்குக்கூட முடியவில்லை. தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்படுகின்ற எதுவாக இருந்தாலும், அதை எந்தக் காலத்திலும், எந்தக் கொம்பனாலும் வீழ்த்த முடியாது என்பதற்கு இவையெல்லாம் சாட்சிகளாக அமைந்திருக்கின்றன. அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்கள்தான், வெள்ளையன் இங்கிருந்து வெளியேறிய பிறகு, இந்த நாடு வெள்ளி விழாவைக் கொண்டாடிய நேரத்தில், முதலமைச்சராக இருந்து விழா எடுத்தார்கள்; பொன் விழா கொண்டாடியபோது இதே மாமன்றத்தில் முதலமைச்சராக இருந்து பொன் விழா எடுத்தார்கள்; தான் ஏற்றிருக்கின்ற கழகத்தின் தலைமைக்கு உரியவராக இருக்கின்றவர், கழகத்தின் வெள்ளி விழா, பொன் விழா அவர்களால்தான் எடுக்கப்பட்டது. திரைப்படப் பவள விழாவையும் அவர்கள்தான் நடத்திக் காட்டியிருக்கின்றார்கள். சட்டப் பேரவையின் வைர விழாவை நடத்தியவர் அந்த மாமேதைதான். சட்டமன்றப் பேரவையின் பொன் விழா நாயகராகவும் திகழ்பவரும் அவர்தான். அவர்தான் பெரியாருக்கு நூற்றாண்டு விழா எடுத்து பெருமை சேர்த்தவர். அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களால் அண்ணாவுக்கு நூற்றாண்டு விழா எடுப்பது பெருமைக்குரிய ஒன்றாகும் என்பதை நினைவுபடுத்தும் இந்த நேரத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கு தகுதி படைத்த தலைவராக, பேரறிஞர் அண்ணா அவர்கள் இருப்பதற்குக் காரணம், உலகம் உள்ளவரை அந்தத் தலைவனை யாரும் மறந்துவிட முடியாது, வரலாற்றிலிருந்து அகற்றிவிடவும் முடியாது. ஏனென்று சொன்னால், இந்த நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். இருமொழிக் கொள்கைதான் சட்டப்படி செல்லுபடியாகும் என்று சொல்லி, இந்த மாமன்றத்திலே சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியவர். தந்தை பெரியாருடைய எண்ணங்களை நினைவுபடுத்துகின்ற வகையில், சுயமரியாதைத் திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக்க வேண்டுமென்பதற்காக சட்டவடிவத்தைத் தந்தவர் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். அதனாலேதான் அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதில் நாம் பெருமைப்படுகின்றோம்.

அதேநேரத்தில் நான் இன்னொன்றையும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 'தமிழ்நாடு' என்று

பெயர் சூட்டினார்கள். வார்த்தை ஜாலங்கள் என்று சொன்னார்களே. அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். 'தமிழ்நாடு' என்று அண்ணா பெயர் சூட்டினார். தலைவர் கலைஞர் 'தமிழ்நாடு' என்று சொல்கின்றபோது சொல்வார், தமிழை நாடு, தமிழ்ப் பண்பை நாடு, தமிழ்க் கலாச்சாரத்தை நாடு, தமிழ் இலக்கியத்தை நாடு, தமிழ் உணர்வை நாடு, தமிழர் மேன்மையை நாடு, தமிழை நாடு, தமிழை நாடு என்று அதற்கு விளக்கங்கள் சொல்கின்றாரே, அது வேண்டுமானால் உங்களுக்கு வார்த்தை ஜாலங்களாகப் படலாம். ஆனால் அது உணர்வுகளின் வெளிப்பாடு என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். அதனாலேதான் அண்ணாவினுடைய பெயரால் மறுமலர்ச்சித் திட்டங்கள் இன்றைக்கு நாடு பூராவும், கிராமங்கள்தோறும், பேரூராட்சிகள்தோறும் வளம்பெறுவதற்கான வாய்ப்பை, அனைத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்கின்ற பெயரால், நம்முடைய தளபதி அவர்கள் தலைமையில் சிறப்பான முறையில் செயலாற்றுவது, இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு 2,000 கோடி ரூபாயில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். இது அண்ணாவுக்கு பெருமை சேர்க்கின்ற திட்டமாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அதுமாத்திரமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ் செம்மொழி ஆக்கப்படவேண்டுமென்று ராஜ்ய சபாவிலே ஒரு காலத்திலே பேசினார்கள். ஆனால் அதே மாமன்றத்தில் தமிழ்த்தாய் என்று சொல்கின்றவர்கள், இந்தியிலே பேசிய வரலாறும் இந்த நாட்டு மக்களால் மறக்கப்படுகின்ற ஒன்றல்ல என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி வந்த தலைவர் கலைஞர் அவர்கள் பள்ளிகளில் கட்டாயம் தமிழ்ப் பாடம் படிக்கவேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். உச்ச நீதிமன்றத்திலே நமக்கு சாதகமான தீர்ப்பைப் பெற்றிருக்கின்றோம்.

*முற்பகல் 11-10*

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குத்தாலம் க. அன்பழகன் தலைமை)*

மத்தியிலே ஆட்சிமொழியாக தமிழ் மொழி இருந்திடவேண்டுமென்ற உணர்வை தலைவர் கலைஞர் அவர்கள் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, உயர் நீதிமன்ற வழக்கு மொழியாக தமிழ் மொழி இருந்திட



வேண்டுமென்பதையும் உணர்த்தியிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழ் மொழியை செம்மொழியாக்கிட வேண்டுமென்று அன்றைய பி.ஜே.பி. அரசிடம், பிரதமர் வாஜ்பாய் இடத்திலே கோரிக்கை வைத்த நேரத்திலே அதை நிறைவேற்ற மறுத்தார். ஆனால், அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்களும், டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் இதைச் செம்மொழியாக அறிவிக்கின்ற வாய்ப்பை நமக்கு உருவாக்கித் தந்தார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் செம்மொழியானால் மாத்திரம் போதாது. அதற்கு ஆய்வு மையம் அமைக்க வேண்டுமென்பதற்காக நிதியை ஒதுக்கித் தந்து 76 கோடி ரூபாயில் சென்னையில் கலைஞர் தலைமையில் செம்மொழி ஆய்வு மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தை முதல் நாள் (குறுக்கீடுகள்) தமிழர்களுடைய பெருமை சேர்க்கின்ற நாள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அப்படிப்பட்ட தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு தொடக்க நாளாக தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் (குறுக்கீடுகள்) என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்துவதோடு, தமிழாக வாழ்கின்ற கலைஞர் அவர்கள், தமிழன் உள்ள வரையில், ஏன் உலகம் உள்ள வரையில் கடைசி தமிழன் இருக்கின்ற வரையில் அந்தத் தலைவருடைய பெயர் வரலாற்றில் நிலைபெற்றிருக்கும் என்பதை யாராலும் மறந்துவிட முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றிவிடவும் முடியாது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புவதோடு தமிழுக்காக, தமிழ் இன உணர்வுக்காக . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன், ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

***திரு. வி.பி. கலைராஜன்:** செம்மொழியைப் பெற்றுத் தந்ததாக பெருமையோடு இங்கே பேசுகின்றார். செம்மொழிக்காக எங்கள் புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் நாடாளுமன்றத்திலே, மத்திய அரசாங்கத்திலே வாதாடியிருக்கிற வரலாறு எல்லாம் இவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். சீன மொழியிலேகூட தமிழ் மொழியினுடைய சில சொற்கள் இருப்பதாகவும், மிகவும் தொன்மை வாய்ந்த மொழி இன்றைக்கு உலகத்திலே இருக்கிறது என்று சொன்னால் அது தமிழ் மொழி என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுகின்ற நேரத்திலே, செம்மொழிக்கு

எத்தனை ஆண்டுகாலம் நீங்கள் ஆயுள் வாங்கியிருக்கிறீர்கள். 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே தோன்றிய மொழி என்று குறிப்பிட்டுச் சொல்லப்படுகிற இந்தச் செம்மொழியிலே தொல்காப்பியத்திற்கு 3 ஆயிரம் ஆண்டு வயது இருக்கிறது. ஆக, நீங்கள் வாங்கியிருப்பது மத்திய அரசாங்கத்திலே, மத்திய அரசாங்கத்திலே; அங்கம் வகிக்கிறீர்கள்; 1,500 ஆண்டுகளுக்குத்தான் வாங்கியிருக்கிறீர்கள். அதனால்தான் இன்றைக்கு கன்னடம், தெலுங்கு . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழின் சிறப்பையும் தொன்மையையும் பற்றி உறுப்பினர் சொல்வதிலே எனக்கும் மகிழ்ச்சி. ஆனால் அப்படிப்பட்ட அன்னைத் தமிழ் மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட்டபோது இவர்கள்தான் ஆட்சியில் இருந்தார்கள். குறைந்தபட்சம் சட்டமன்றத்திலே, அறிவித்த மத்திய அரசாங்கத்திற்கு ஒரு நன்றி அறிவிப்புத் தீர்மானமாவது போட்டிருக்கலாம், அமைச்சரவையைக் கூட்டியாவது போட்டிருக்கலாம். எதுவுமே செய்யவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன். *(குறுக்கீடு)* திரு. கலைராஜன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி செம்மொழி என்று அறிவிக்கப்பட்டதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னென்னவெல்லாம் செய்தார்கள் என்று கேட்டார்கள். 1965 ஆம் ஆண்டு ராஜ்ய சபாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழி செம்மொழி ஆக்கப்படவேண்டுமென்று பேசினார் என்பது அவர்களுக்குத் தெரியுமா; அல்லது பரிதிமாற் கலைஞர் 150 ஆண்டுகளுக்கு முன்னாலே செம்மொழியாக்கப்படவேண்டுமென்று குரல் கொடுத்தது அவர்களுக்குத் தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளில் எல்லாம் தமிழ் செம்மொழியாக்கப்பட வேண்டுமென்று தீர்மானங்களைப் போட்டு நாடுபூராவும் பொதுக்கூட்டங்களை, விளக்கக் கூட்டங்களை கலைஞர் நடத்தச் சொன்னார் என்பதாவது தெரியுமா?



அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்குக் கடிதம் எழுதி அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார் என்பதாவது தெரியுமா? இன்றைய பிரதமராக இருக்கின்ற டாக்டர் மன்மோகன் சிங் இடத்திலே கோரிக்கை வைத்து அன்னை சோனியா காந்தி அவர்களின் பேராதரவோடு செம்மொழி ஆக்கப்பட்டதாவது தெரியுமா? குறைந்தபட்சம் அதற்கு நன்றி சொல்லவாவது தெரியுமா? *(மேசையைத் தட்டும் ஒலி)* நன்றி சொல்லத் தெரியாதவருக்கு தமிழன்னை என்று பட்டம் சூட்டுகின்றீர்களே; எந்த வகையில் நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)* குறுக்கீடுகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அதுமாத்திரமல்ல. தலைவர் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து தந்தை பெரியாருடைய பெயரால் சமத்துவபுரங்களை நாம் உருவாக்கித் தந்திருக்கிறோம். *(குறுக்கீடுகள்)* அதைப்பற்றிக் கவலையில்லை. எதற்கு? என்ன இப்போது? *(குறுக்கீடுகள்)* என்ன இப்போது? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** உறுப்பினர் பேசி முடித்ததற்குப் பிறகு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். *(குறுக்கீடுகள்)* மற்றவர்கள் உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது தமிழ் மொழிக்கு என்ன செய்தார்; என்ன செய்தார் என்று எங்களைப் பார்த்து ஏளனமாக அடுக்கிக்கொண்டே போகின்றார். ஆனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மதுரையில் 5 ஆம் உலகத் தமிழ் மாநாடு நடத்தினார். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்குப் பின்னாலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தஞ்சையில் 8 ஆம் உலகத் தமிழ் மாநாடு நடத்தினார். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், உலகத் தமிழ் மாநாடு நடத்திய வரலாறு உங்களுக்கு உண்டா என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு முதல் முதலில் நடத்தியதே தி.மு.க. அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்று தெரியாமல் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். சொல்லும்போது சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாநாடு நடத்தியதைப் பற்றி இப்போது பிரச்சினை இல்லை. தமிழ் செம்மொழி ஆக்கப்பட்டது யார் காலத்தில்? தமிழை செம்மொழி ஆக்கவேண்டுமென்று இன்று நேற்றல்ல 150 ஆண்டுகளுக்கு முன்னாலேயே சூரியநாராயண சாஸ்திரிகள் காலத்திலிருந்து கேட்டு வந்தோம். ஆனால், கலைஞர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாகத்தான் மத்தியிலே டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், அன்னை சோனியா காந்தி அவர்களும் தமிழ் மொழியை செம்மொழியாக ஆக்கி (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு நிறுத்தவில்லை, அந்தச் செம்மொழிக்கு ஒரு குழு அமைத்து தமிழக முதலமைச்சரையே அதற்குத் தலைவராக்கிய பெருமையும் மத்திய அரசாங்கத்தையே சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1996-2001 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் டெல்லி சர்வதேச பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி ஆய்வுக்காக ஓர் இருக்கை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து அரசுக்கு 50 இலட்சம் ரூபாய் கேட்டு இங்கே



கடிதம் வந்தது. அதுவும் அந்த 50 இலட்சம் ரூபாய் ஒரே தவணையில் தரப்பட வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தவர்தான் இன்றைக்கும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்றார்கள். ஆனால் அன்றைக்கு அந்தக் கோப்பில் 50 இலட்சம் ரூபாயை ஒரே தவணையில் செலுத்த முடியாது. வருடத்திற்கு 10, 10 இலட்சமாகத்தான் நாங்கள் அனுப்ப முடியும் என்று சொன்னதன் காரணமாக அங்கே அது மறுக்கப்பட்டது. மீண்டும் அதே கோப்பு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இங்கே வந்தபோது, ஒரே தவணையில் தமிழ் மொழி ஆய்வுக்காக 50 இலட்சம் ரூபாயைக் கொடுத்த ஒரே தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசலாம்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்கு என்ன செய்தோம் என்று கேட்டார்? இந்திய அரசியல் சட்டத்தின்படி அன்றையதினம் இந்தி ஆட்சி மொழி என்று அறிவிக்கப்பட்ட நேரத்தில் இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்தினார், நகலைக் கொளுத்தினார் என்பதற்காக நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களையும், 10 சட்டப் பேரவை உறுப்பினர்களையும் பதவி இறக்கிய கட்சிதான் உங்களுடைய கட்சி என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஆக, மொழிக்காகப் போராடியவர்களை சிறையிலே தள்ளுவது, சித்திரவதைப்படுத்துவது, சட்டமன்ற உறுப்பினர் பதவியைப் பறிப்பது போன்றவற்றை செய்தது மாத்திரமல்ல.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடிக்கட்டும்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிற காலத்தில் எல்லாம் நிதிநிலை அறிக்கைகளை சட்டமன்றத்திலே ஆளுநர் உரை வருகிற போதெல்லாம் படிப்போம். ஆனால் ஆளுநர் உரையைத் தமிழிலே படிக்கக் கூடாது என்று

சொன்னவர்கள் யார்? தமிழ்ப் பகைவர்களா, தமிழர்களா என்பதை மனசாட்சியோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமாத்திரமல்ல, தந்தை பெரியாருடைய பெயரால் நினைவு சமத்துவபுரங்களை நாடு பூராவும் உருவாக்கினோம். சாதி மத பேதங்கள் ஒழிக்கப்படவேண்டும். தீண்டாமை அடியோடு அகற்றப்பட வேண்டும். சுயமரியாதை உணர்வு நாடெங்கும் சுடரொளிவிட்டுப் பறக்க வேண்டும் என்பதற்காக பெரியாருடைய பெயரால் பெரியார் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். தன்னுடைய தலைவருடைய பெயரால் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கினார். எந்த தந்தை பெரியார் அவர்கள் சாதியில்லை என்றாரோ, மதம் இல்லை என்றாரோ, இனமான உணர்வோடு வாழ வேண்டும் என்பதற்காக பகுத்தறிவுக் கொள்கைகளை பறைசாற்றினாரோ, அந்தத் தலைவருடைய எண்ணங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் தீண்டாமையை ஒழிப்பதற்காகத்தான் பெரியார் பெயரால் நினைவு சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட்டன. அதுவும்கூட நாடு விடுதலைப் பெற்ற 50 ஆம் ஆண்டு பொன் விழாவைக் கொண்டாடுகிற நேரத்தில் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியது. இந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கலைராஜன், அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன். உட்காருங்கள்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** அது பெருமை சேர்க்கிற வகையிலே இருக்க வேண்டும் என்று சொன்ன நேரத்தில், இந்திய நாட்டிலே முதன்முதலாக தமிழ்நாட்டிலேதான் தலைவர் கலைஞர் அவர்கள் 50 சமத்துவபுரங்களை உருவாக்குவோம் என்று சொல்லி பெரியார் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கித் தந்தார்கள். ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த இடத்தில் தொட்டால் தீட்டு என்று சொன்னவர்கள், மேல்சாதி என்று சொன்னவர்கள், கீழ்சாதி என்று சொன்னவர்கள், எல்லோரும் ஓரிடத்திலே குடியிருக்கிற அற்புதமானதோர் வாய்ப்பை தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். தொட்டால் தீட்டு என்று சொன்ன உங்களுக்கு வேண்டுமென்றால் கோபம் வரலாம். ஆனால் ஒரு கால கட்டத்தில் தாழ்த்தப்பட்டவனாக இருந்தால் தொட்டால் தீட்டு என்றான்; மேல்சாதிக்காரன், தெருவிலே நடக்கக் கூடாது என்றான்; தோளிலே துண்டு போடக் கூடாது என்றான்; முழங்காலுக்குக்



கீழே வேட்டி கட்டக் கூடாது என்றான்; காலிலே செருப்புப் போடக் கூடாது என்றான்; பள்ளியிலே ஒன்றாக வந்து உட்காரக் கூடாது என்றான்; ஓடுகிற பஸ்ஸிலே ஏறக் கூடாது என்றான்; தாழ்த்தப்பட்ட பெண்ணாக இந்தால், நாடார் பெண்ணாக இருந்தால் ஜாக்கெட்டே போடக் கூடாது என்றான். இத்தனை கொடுமைகளும் இந்த நாட்டிலே நடந்ததற்கு முற்றுப்புள்ளி வைத்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரியாருடைய எண்ணங்களைப் பிரதிபலித்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் நினைவுபடுத்துவதோடு அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்கிற ஓர் அற்புதமான சட்டத்தைக் கொண்டு வந்து இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் அதை நடைமுறைப்படுத்துகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அந்த அற்புதமான சட்டம் இந்திய நாட்டிலே தமிழ்நாட்டிலே மட்டும்தான் கொண்டு வரப்பட்டது.

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதை எதிர்ப்பவர்கள் யார்? மேட்டுக்குடிக்குச் சொந்தக்காரர்கள். 3,500 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆடு, மாடுகளை மேய்ப்பதற்காக கைபர், போலன் கணவாய் வழியாக பஞ்சம் பிழைப்பதற்காக வந்த ஒரு கும்பல்தான் அதைச் செய்ததே தவிர, தலைவர் கலைஞர் அவர்களோ, மற்றவர்களோ, தமிழர்களோ அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20

அதுமாத்திரம் அல்ல; தமிழிலே அர்ச்சனை செய்யக்கூடாது என்று சொல்கிற ஆணவக்கார கும்பல் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, ஆறுமுக ஓதுவார் இன்றைக்கு சிதம்பரத்தில் தமிழிலே பாடுகிற ஒரு வாய்ப்பு உருவாக்கி, அப்படிப்பட்ட ஆற்றல்மிக்க அந்தப் புலவர் பெருமகனுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 3,000 நிதி உதவி செய்கிற வாய்ப்பை உருவாக்கித் தந்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இருப்பவனுக்கு இடம் வேண்டும்; உழைப்பவனுக்கு வீடு வேண்டும் என்பதற்காக இந்தியாவிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை, நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட அடித்தளத்திலே இருக்கிற சமுதாயத்தை எண்ணிப் பார்த்த தலைவராகக் கலைஞர் இருந்த காரணத்தினாலேதான், 1974 ஆம்

ஆண்டு, முதன் முதலாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இருப்பதற்கு காலனி வீடுகளை, தொகுப்பு வீடுகளைக் கட்டித் தந்தார்கள். ஆனால் அந்தத் திட்டம் வருங்காலத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டமாக மாற்றப்பட்டு இப்போது நாடு பூராவும் வீடுகள் கட்டப்படுகின்றன. 37,000 ரூபாயிலே கட்டப்பட்ட வீடு போதுமானதாக இல்லை என்ற காரணத்தினாலேதான் இன்றைக்கு அதை உயர்த்தித் தர வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் டெல்லி அரசிடத்திலே கோரிக்கை வைத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. 15 பேர் பேசியாக வேண்டும். அரை நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடித்தபின் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** நீங்கள் குறுக்கிட்டதே பாதி நேரம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** இன்றைக்கு ரூ.55,000/-லே வீடு கட்டுகிற ஓர் அற்புதமான திட்டத்தை தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக மகளிருக்கு ஓர் ஆணையத்தை உருவாக்கி அதற்கு சட்ட ரீதியான அதிகாரத்தை வழங்க வேண்டும் என்கிற ஓர் அற்புதமான வாய்ப்பை தலைவர் கலைஞர் தந்திருக்கிறார். நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், 1928-1929 ஆம் ஆண்டு வாக்கில் பெண்கள் சுய உரிமை மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் என்னென்ன சொன்னார்களோ அவற்றை நிறைவேற்றித் தரும் தலைவராக கலைஞர் இருக்கிறார். பெண்களுக்குச் சொத்திலே சம உரிமை தந்திருக்கிறோம். கருவுற்ற பெண்களுக்கு ரூ.6,000/- தந்திருக்கிறோம். ஆனால் அதற்கு வருமான சான்றிதழ் தேவையில்லை என்ற வாய்ப்பை கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். திருமண உதவித் திட்டத்தைத் தந்திருக்கிறோம். இட ஒதுக்கீடுகளுக்கு வாய்ப்பு வழங்கி இருக்கிறோம். மகளிர் சிறு வணிகக் கடன் தந்திருக்கிறோம். சுழல் நிதி வழங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம். தாலிக்கு வரியில்லை. சிலுவையாக இருந்தாலும், கருகமணியாக இருந்தாலும், இல்லை என்கிறோம். எங்களுக்கு அதனுடைய அருமை தெரிந்த காரணத்தினால் அதை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றிற்கும் மேலாக



அரவாணிகளுக்கு, நரிக்குறவர்களுக்கு, பனைத் தொழிலாளர்களுக்கு, கைவினைஞர்களுக்கு, துய்மைப் பணிபுரிவோர்களுக்கு, கேபிள் டி.வி. உரிமையாளர்களுக்கு, சின்னத்திரை கலைஞர்களுக்கு. அமைப்புசாரா தொழிலாளர் என்று.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை முடித்து விடலாம். உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு கால கட்டத்தில் ஆட்சியில் இருந்தார்களே, அவர்கள் இருந்தபோதுதான் தமிழ்நாடு எய்ட்சில் முதல் இடத்தைப் பெற்றிருந்தது. அந்த எய்ட்சாலே பாதிக்கப்பட்ட குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக பாதுகாப்புக்காக, பராமரிப்பிற்காக ரூ. 5 கோடியை தலைவர் கலைஞர் ஒதுக்கி இருக்கிறார் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நினைவுபடுத்தி, எல்லாவற்றிற்கும் மேலாக,

“ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே-ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்!
பழுதுண்டு வேறோர் பணிக்கு”

என்று சொன்னாரே அதற்கு இலக்கணமாக வேளாண்மை மேன்மை பெற வேண்டும் என்பதற்காக இலவச மின்சாரமாக இருந்தாலும், வட்டித் தள்ளுபடியாக இருந்தாலும், பயிர்க் காப்பீடாக இருந்தாலும், வெள்ளச் சேதமாக இருந்தாலும், சொட்டு நீர்ப்பாசனமாக இருந்தாலும், விவசாயக் குழுக்கள்மூலம் உதவுவதாக இருந்தாலும் அத்தனையும் கலைஞர் செய்கிறார்.

இறுதியாக ஒன்றை மாத்திரம் நான் நினைவுபடுத்துகிறேன். கல்வித் துறை கலைஞர் காலத்தில் பொற்காலமாக விளங்குகிறது. கலைஞர் எப்போது முதலமைச்சராக பொறுப்பேற்கிறாரோ அப்போதெல்லாம் கல்வி வானளாவ வளர்ந்திருக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் 7,582 கோடி ரூபாய் கலைஞர் ஒதுக்கியிருக்கிறார். பள்ளிகளுக்குச் சமச்சீர் கல்வி கொண்டு வந்து நிறைவேற்றுகிற கலைஞர் அரசின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பாராட்டி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. போளூர் ம. வரதன். (குறுக்கீடு) இல்லை, நேரம் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. போளூர் வரதன் 15 நிமிடங்கள். (குறுக்கீடு) இருங்கள், கூப்பிடுகிறேன். (குறுக்கீடு).

*முற்பகல் 11-25*

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதத்திலே பங்குபெறச் செய்த எங்கள் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அருமைக்குரிய நயினா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008-2009 ஆண்டின் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது தமிழகம் எந்த அளவிற்கு இன்றைக்கு வளர்ந்து இருக்கிறது நிதியிலே என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதே அவையிலே 1967-க்கு முன்பு, 1967-க்கு பின்பு என்று தமிழகத்தினுடைய நிதிநிலையை நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். 1967-க்கு முன்பு என்று சொல்கின்றபோது தமிழகத்திலே காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்திலே, 1954-லே அருமைத் தலைவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, வெறும் 96 கோடி ரூபாய்க்கு நிதிநிலை அறிக்கையை இதே அவையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள். அது உண்மை. ஆனால் இன்றைக்கு 51 ஆயிரத்து 505 கோடி ரூபாய்க்கு பேராசிரியர் அவர்களாலும், இந்தியத் திருநாட்டிலே இன்றைக்கு மூத்த அரசியல்வாதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலைஞர் அவர்களாலும் நிதிநிலை அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

எங்களுக்கெல்லாம் ஒரு வேதனை. நாங்களெல்லாம் காங்கிரஸ், பெருந்தலைவர் காமராஜர் ஆண்ட காலத்திலே நாங்கள் குழந்தையாகக்கூட இல்லை. அன்றைக்கு 100 கோடி ரூபாயைக்கூட காங்கிரஸ்காரர்கள் நிதிநிலை அறிக்கையாக இந்த அவையிலே சமர்ப்பிக்கவில்லையே என்ற வேதனை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் இன்றைக்கு 51,000 கோடி ரூபாயை நிதிநிலை அறிக்கை என்று நாம் சமர்ப்பித்து அதன்மீது விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். 1967-க்குப் பின்னாலே மாறி, மாறி திராவிட இயக்கங்கள் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்றன. அதில் மாற்றுக் கருத்து இல்லை. நாங்களும் 1971-க்குப் பின்னாலே உங்களை



மாற்றிமாற்றி கைதூக்கி ஆதரித்துக் கொண்டிருக்கிறோம். நீங்களும் குதிரையாக எங்கள்மீது ஓட்டிக்கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் ஓடிக்கொண்டு இருக்கிறோம். நீங்கள் சொல்வீர்கள், டெல்லியிலே நீங்கள் ஓடவில்லையா என்று கேட்பீர்கள். டெல்லியிலே ஓடாத காலங்களும் இருந்திருக்கின்றன என்பது வரலாறு. அந்த வரலாற்றின் உண்மைகளைப் பார்க்கின்றபோது இன்றைக்கு மூத்த அரசியல்வாதியாக இருந்துகொண்டிருக்கின்ற கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கின்ற அரசு சமர்ப்பித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை பல்வேறு கோணத்திலே பார்க்கின்றபோது, வளர்ச்சிப் பணிகள் என்று பார்க்கின்றபோது, பாராட்டுக்குரியதாக இருக்கிறது. வேண்டுமென்று சொன்னால் ஏதோ குறை சொல்ல வேண்டுமென்பதற்காக குறை சொல்லலாம் அது இயற்கை. ஆனால் புத்தகத்திலே இங்கே குறிப்பிட்டிருக்கின்ற அறிக்கையை ஒவ்வொன்றாகப் பார்க்கின்றபோது துறை வாரியாக அந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்கள் 5-வது முறையாக முதலமைச்சராக இருந்துகொண்டிருக்கிறார்கள். வளர்ச்சி என்று வருகின்றபோது யார் நன்மையைச் செய்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் மனப் பக்குவம். அந்த மனப் பக்குவம் இங்கே எத்தனை பேருக்கு இருக்கிறது என்று சொன்னால், அதை நான் சொல்லக்கூடாது. நீங்களே முடிவு எடுத்துக்கொள்ளுங்கள். 200 ரூபாய் முதியோர் பென்ஷன் கொடுத்தீர்கள் மாறி மாறி. இன்றைக்கு 400 ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். அந்த 400 ரூபாய் எப்படி வந்தது? அரசாங்கம்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மணி ஆர்டர் மூலம் வந்தது என்று சொல்கிறார்.

**திரு. போளூர் ம. வரதன்:** மணி ஆர்டர் மூலம் வருகிறதுதான். அந்த மணி ஆர்டரை ப்ரிண்ட் பண்ணுவது டெல்லி சர்க்கார். அந்த மணி ஆர்டரில் போகக்கூடிய பணத்தை கொடுப்பது இந்த சர்க்கார். அந்தப் பணம் மணி ஆர்டரில் போகிறது என்று சொன்னால் அதற்கு வழிவகை என்ன? நிதியாதாரம் எப்படி பெருக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். குறை சொல்லலாம். இன்றைக்கு மகளிர்க்கு திருமண உதவித் திட்டம் ரூ. 15,000-லிருந்து ரூ. 20,000-ஆக 5 ஆயிரத்தைக் கூட்டியிருக்கிறீர்கள். எத்தனை ஆயிரம்

பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு தெரிகிறது. எத்தனை நூறு கோடி ரூபாய்கள் அதிலே இணைத்திருக்கிறார்கள் என்ற கணக்கு இருக்கிறது. இப்படி நலத் திட்டங்களைச் செய்கின்றபோது யார் அந்த நலத் திட்டங்களைச் செய்தாலும் பாராட்ட வேண்டும். குறைகளைச் சுட்டிக்காட்டுகிறோம். நிறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டும். அதுதான் ஒரு மனிதனுடைய பண்பு. அந்தப் பண்புள்ள அரசியலைத்தான் தமிழகத்து மக்கள் இன்றைக்கு எதிர்பார்க்கிறார்கள். அது எத்தனை பேருக்கு இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால், அதை நான் சொன்னால் வேதனையாக இருக்கும். அவரவர்கள் மனச்சாட்சிக்கே அதையும் விட்டு விடுகிறேன்.

காங்கிரஸ்காரன், காங்கிரஸ்காரன் என்று பேசுகிறீர்கள். காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள் தமிழ்நாட்டிலே? எங்கள் தலைவர்கள் செய்ததை நாங்கள் சொல்ல மறந்து விட்டோம். அந்த மறதியின் காரணமாக நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள்.

நீங்கள் மறக்கவில்லை, மறக்கவில்லை என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லி, மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்காமல் இன்றைக்கு நாம் பேசுகிறோம்.

(முற்பகல் 11-30)

இன்றைக்குக்கூடச் சொன்னார்கள், சகோதரிகள். நம்முடைய ஸ்பீக்கர் சொன்னார், டெப்டி ஸ்பீக்கர் சொன்னார், மணி ஆர்டர் எல்லாம் வருகிறது என்று. வரட்டும், ஏழைகளுக்குத் தானே போய்ச் சேருகிறது. ஓர் அரசு என்றால் என்ன? ஏழைகளின் ஏழ்மையை அகற்ற வேண்டும், வறுமையை ஒழிக்க வேண்டும், அறியாமையை அகற்ற வேண்டும், மக்கள் மனத்திலே இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சி பெருக வேண்டும் என்பதுதானே ஒரு உண்மை? அந்த உண்மையை மறுப்பதற்கு வேண்டுமென்றால் எது வேண்டுமானாலும் பேசலாம்.

இப்படிப் பார்க்கின்றபோது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திரு. முல்லைவேந்தன் அவர்கள் சொன்னார்கள். கடந்த ஆண்டு வந்தவாசியிலே முதலமைச்சர் அவர்கள் வந்தார்கள். மேடையிலே பேசுகின்றபோது நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். தமிழகத்திலே இன்றைக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இந்தக் காலத்திலேயும் ஆதிதிராவிட மக்கள் பன்றிக் குடிசைகளிலே நனைந்துகொண்டிருக்கிறார்கள். உங்கள காலத்திலே 1974-லே ஆரம்பிக்கப்பட்ட அந்த வீடு அதே மதிப்பீட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது. இதை மாற்றியமையுங்கள் என்று கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று இன்றைக்கு 55,000 ரூபாய் இந்த அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. அந்தத் திட்டங்கள் வந்திருக்கின்றன என்று சொன்னால், மாநிலத்தினுடைய பங்கு 8,000 ரூபாய் தானே என்று சொல்லலாம். 8,000 ரூபாய் என்று சொன்னாலும், எத்தனை கோடியை அது தாண்டுகிறது என்று எண்ணிப் பார்க்கின்றபோது ஒரு சமுதாயத்தினுடைய வளர்ச்சியை மனதிலேகொண்டு கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதுதானே உண்மை? அதை ஏற்றுக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறை இருந்தால் சொல்லுங்கள். ஆட்சி மாறி மாறி வருகிறது, இல்லையென்று சொல்லவில்லை. ஆட்சி மாற்றம் வரும் என்பதற்காக மிரட்டக் கூடாது. மக்களுக்கு நீங்கள் செய்திருக்கிற சேவையைச் சொல்லுங்கள்.



தமிழ் செம்மொழியைப் பற்றி இங்கே பேசினீர்கள். மாற்றுக் கருத்து இல்லை. நான் பேசுவதும் தமிழ்தான். தமிழகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற .5 கோடி மக்கள் பேசுவதும் தமிழ்தான். அந்தத் தமிழுக்கு முதலிடம் கொடுப்பவர்கள் யார் என்று சொன்னால், எல்லோரும் வீம்புக்கு வேண்டுமானால் பேசலாம். தமிழகத்திலே இன்றைக்கு ஓரேயொரு மனிதன் கலைஞர் அவர்களால் மட்டும்தான் தமிழைத் திறமையாகப் பேச முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உலக வரலாறு ஒப்புக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) நான் யாருக்கும் துதி பாடவேண்டுமென்ற அவசியம் இல்லை. நான் யாருக்கும் ஐஸ் வைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**திரு. போளூர் ம. வரதன்:** நான் யார் வீட்டு வாசலிலேயும் கை கட்டாதவன். போய் அங்கே நிற்கும் புத்தி எனக்குக் கிடையாது. மனதில் பட்டதைச் சொல்லக்கூடியவன். எங்கள் தலைவி அன்னை சோனியா காந்தி எங்களுக்கு இட்டிருக்கின்ற ஆணை யாருக்கும் தலை வணங்காதே, உண்மையைப் பேசு என்பதுதான்.

[2008 மார்ச் 28

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**திரு. போளூர் ம. வரதன்:** நீங்கள் கூடப் பேசினீர்கள், 50 இலட்சத்தைப் பற்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன், திரு. பீட்டர். . .

**திரு. போளூர் ம. வரதன்:** அண்ணன் அவர்கள் சொன்னார்கள், திரு. பன்னீர்செல்வம் அண்ணன் அவர்கள் சொன்னார்கள், அவர் உண்மையைப் பேசக்கூடியவர். இதைச் சொல்வதால் அவருக்குக்கூட சில தொல்லைகள் வரலாம். (சிரிப்பு) அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. 50 இலட்சம் ரூபாயைக். கட்டச் சொல்லும்போது கலைஞர் கட்டவில்லை; அம்மா வந்து அதை ஒரே பேமெண்டாகக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். அந்த 50 இலட்சம் ரூபாயைக் கட்ட முடியாமல் இல்லை. விதியிலே ,இடம் இருந்திருக்கும். அதற்குக் காரணம் மனசு இல்லை. நமக்கு மனசு இருக்கிறதா என்று நினைத்துப் பாருங்கள். நம்மில் எத்தனை பேருக்கு அந்த மனசு இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால் ஒருத்தருக்குக்கூட இல்லை. பேசுவது வேண்டுமானால் பேசலாம். 50 இலட்சம் ரூபாய் கொடுக்கக்கூடிய நிதி அரசிடம் இருந்திருக்கும். அதற்கு ஏதாவது காரணங்கள் இருந்திருக்கலாம். அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு சொல்லியிருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கட்டினீர்கள் வரவேற்கிறேன். ஆனால், தமிழ் வந்து 1,500 வருடங்கள் தானா? எண்ணிப் பாருங்கள். தமிழ் வரலாறுகளைத் தூக்கிப் பாருங்கள். உலகத்திலே இருக்கின்ற மொழிகளிலே சிறந்த மொழி தமிழ் மொழி. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே தோன்றிய மொழி தமிழ் மொழி என்ற வரலாறு இருக்கிறது. உலகத்திலே இருக்கின்ற மொழிகளிலே சீன மொழியும், தமிழ் மொழியும்தான் சிறந்த மொழி, பண்டையகால மொழி என்று சொல்கிறார்கள். அந்த மொழியை (குறுக்கீடு) திரு. கலைராஜன் . . .

(திரு. வி.பி. கலைராஜன் வாய்ப்புக் கேட்டு தொடர்ந்து நின்றுகொண்டேயிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முல்லைவேந்தன் அவர்கள் மாதிரி போளூர் வரதன், அவர் மொழியைப் பற்றிப் பேசிக்கொண்டு போய்விட்டார். அடுத்து நீங்கள் பேசுகிறீர்கள். திரு. கலைராஜன் வேறு நிற்கிறார்.



2008 மார்ச் 28]

**திரு. போளூர் ம. வரதன்:** நான் மொழியைப் பற்றிப் பேசவில்லை. நான் மொழியைப் பற்றிப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பட்ஜெட்டுக்கு வாருங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** 50 இலட்சம் ரூபாய் பணத்தைப் பற்றிப் பேசுகிறேன். மொழி என்பது வேறு, பணம் என்பது வேறு, நிதிநிலை அறிக்கை என்பது வேறு, அந்த அடிப்படையிலே பேசுகிறேன். ஆகவே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எது எப்படியிருந்தாலும், இந்த நிதிநிலையைப் பார்க்கின்றபோது வரவேற்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

(முற்பகல் 11-35

கிட்டத்தட்ட 2,427 கோடி காவல் துறையிலே பார்க்கின்றபோது ஒதுக்கியிருக்கிறீர்கள். 3 கமிஷன்கள் ரூபாய் காவல் துறைக்கு நீங்கள் உங்களுடைய அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மூன்று கமிஷன்கள் தந்திருக்கிறீர்கள். ஆனால் ஆட்சியிலே மாறி, மாறி அதற்கு ஆதரவு கெட்டவர்கள் என்று காவல் துறையில் இருக்கின்ற அத்துணைபேரும் பணிகள் நான் சொல்லவில்லை. இன்றைக்கு காவல் துறையினுடைய துறையில் என்ன என்று எண்ணிப் பாருங்கள். காவல் இருக்கிறார்கள். இருக்கக்கூடியவர்கள் இரண்டு Group ஆக கிடைத்த அந்த குரூப் என்ன என்று சொன்னால், எனக்குக் promotion வருகிறது தகவலைச் சொல்கிறேன். ஒருத்தருக்கு இன்றைக்கு இடைஞ்சலாக என்று சொன்னால் அந்த promotion-க்கு சிலர் கொடுக்கிறீர்கள். இருக்கிறார்கள். Retired ஆகின்றவர்களுக்கு extension அந்த Extension கொடுப்பதன்மூலமாக அந்தப் பதவிக்கு வரவேண்டிய இந்த அதிகாரி தனக்கு வேண்டிய அதிகாரியை வைத்துக்கொண்டு அதைச் அரசுக்கு எந்த அளவுக்குக் கெடுதல் செய்ய முடியுமோ குறிப்பிட்ட செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். அதை சில அந்தத் அதிகாரிகள் செய்துகொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை வேண்டும். துறையில் மாற்றப்பட வேண்டும். மக்களுக்குப் பாதுகாப்பு என்னுடைய ஏன், உண்மையைச் சொல்கிறேன். முந்தாநாள்கூட அதில் வீட்டின் அருகிலே விநாயகர் கோயில் ஒன்று இருக்கிறது. வினாயகர். நிறைய வெள்ளிக் கவசங்கள் அணியப்பட்ட ஒரு காவல் இரவில் கொள்ளை அடித்துவிட்டுப் போய்விட்டார்கள். கொடுத்தால் துறையில் அடையாறு போலீஸ் ஸ்டேஷனில் complaint நடவடிக்கை வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். ஆனால், கோயிலிலும் இல்லை. என் வீட்டின் எதிரிலே இருக்கின்ற

கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது 26 ஆம் தேதி. ஆண்டவனுக்கே பாதுகாப்பு இல்லை. மக்களுக்கு எங்கே பாதுகாப்பு என்று கேட்கிறார்கள். எங்குபோய் சொல்வது, ஐயா. தினம் எங்கள் வீட்டுக் கோயிலில் காலையில் 200 பேர் வந்து கும்பிடுகிறார்கள். ஐயா, இன்றைக்கு உங்கள் வீட்டின் முன் உள்ள கோயிலுக்கே பாதுகாப்பு இல்லை என்று கேட்கிறார்கள். நான் எங்குபோய் சொல்வது இதை'? அதை இங்கு சொல்கிறேன். உண்மையிலேயே இந்தக் காவல் துறைக்கு திறமை இருக்குமானால், உடனே பிடிக்கச் சொல்லுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை, பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, திருவண்ணாமலை மாவட்டம் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற மாவட்டங்களிலேயே பின்தங்கிய மாவட்டம். இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தவிதமான பெரிய திட்டங்களும் எங்கள் மாவட்டத்திற்கு வரவில்லை. ஒன்று சொல்கிறார்கள் எதற்கெடுத்தாலும் அரிசி, அரிசி என்று. அவர் எங்கள் மாவட்டத்தினுடைய அமைச்சர். ஒன்றைச் சொல்கிறேன். கடந்த காலங்களிலே அரிசி கடத்தலை பிடித்தார்களா இல்லையா என்பதை அவர்களிடத்திலே விட்டுவிடுகிறேன். அரிசி அடிக்கடி பிடிக்கிறார்கள். கடத்தப்படுகின்ற அரிசி தடுக்கப்படுகிறது. பிடிக்கப்படுகிறது. அதனால் அது மக்களுக்குத் தெரிகிறது. உடனே நாம் சொல்கிறோம். அரிசி கடத்திக்கொண்டு போய்விட்டார்கள் என்று. எங்கள் ஊர் மந்திரி பேசாமல் இருந்தால் தெரியுமா அது வெளியிலே. யாருக்குமே தெரியாது. பேப்பரில் வராது. பேப்பரில் வருகிறது என்று சொன்னால் சம்பந்தப்பட்ட துறையினுடைய அதிகாரிகளை எங்கள் அமைச்சர் இயக்குகிறார். கள்ளக்கடத்தல் அரிசி தடுக்கப்படுகிறது. அரசுக்கு வருகிற வருமானம் வந்துகொண்டிருக்கிறது. அது அரசு கஜானாவில் திருட்டுப்போவதை கண்டுபிடிக்கிறார். தப்பா அது? சொல்கிறார்கள் அரிசி கடத்துகிறார்கள், அரிசி கடத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். எங்கே கடத்துகிறார்கள்? எனவே அரிசி கடத்துவது இப்போது தடுக்கப்படுகிறது. அதுதான் உண்மை. எங்கள் அமைச்சர் மீதுகூட எனக்கு வருத்தம் உண்டு. எங்கள் மாவட்டத்திற்கு fight பண்ணி நிறைய தொழிற்சாலைகளைக் கொண்டுவரவில்லை என்ற வேதனை எனக்கு இருக்கிறது.

அதுமட்டுமல்ல என்னுடைய செங்கம் சட்டமன்றத் தொகுதியில் பால் பவுடர் அமைக்கக்கூடிய. . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஆண்டுகள்கூட முடியாத நிலையிலே, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே பல்வேறு திட்டங்கள் கொடுக்கப்பட்டன என்று முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியிலே நீங்களே பாராட்டிப் பேசியிருக்கிறீர்கள். அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஒன்று..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அன்றைக்கு.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட நம்முடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு பகுதியில் சிறு தொழில்களை உருவாக்க வேண்டும் என்று சிறப்புப் பொருளாதார மண்டலத்தை தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதை அவருக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் மறுக்கவில்லை. அன்றைக்கும் நான் உண்மையைப் பேசினேன்; இன்றைக்கும் நான் உண்மையைப் பேசுகிறேன். என்றைக்கும் பேசுவேன். அதில் மாற்றுக் கருத்து எனக்கு இல்லை. உங்களுக்கு வேண்டுமென்றால் அது இருக்கலாம். என்னைப் பொறுத்தமட்டில் அது இல்லை. நான் எங்கள் அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்வது சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. மற்ற மாவட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் காய்ந்த மாவட்டங்கள். இன்று தென் மாவட்டங்கள் எல்லாம் மழையால்--இதோ, முடித்துவிடுகிறேன், இரண்டு நிமிடங்கள். மழையால் அடித்துச் செல்லப்படுகின்றன. இந்த மாவட்டத்திற்கு குடிநீருக்குப் பஞ்சம். குடிதண்ணீர் இல்லாத மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அந்த உரிமையுடன் கேட்கிறேன். தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொன்னார்கள். பின்தங்கிய மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறோம். நிறைய தொழிற்சாலைகளைக் கொடுங்கள் என்று கேட்கிறோம். எங்கள் தொகுதியில் பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்க அதற்கு அடிக்கல் நாட்டி இரண்டு வருடங்கள் ஆகின்றன. இன்னும் தொடங்கவில்லை. சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்கு இரண்டாவது முறையாக செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியிலே நிற்பதற்கு வாய்ப்பளித்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், இதை ரொம்ப தடவை சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறையத் தடவை சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) சரி சார்.

**திரு. கி. ஆறுமுகம்:** எங்கள் தெய்வத்திற்குச் சொல்ல வேண்டும் இல்லையா, இங்கே அனுப்பி இருக்கிற என்னுடைய குடும்ப தெய்வம் தமிழ் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய சின்ன அய்யா அவர்களுக்கும், எனக்கு தொடர்ந்து வாய்ப்பு அளித்துக்கொண்டிருக்கிற அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், இங்கே நீண்டநேரம் பேச வாய்ப்பளிக்க இருக்கிற என்னுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போதுதான் சார், correct ஆகப் பேசுகிறீர்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** என்னுடைய வணக்கத்தை முதலிலே தெரிவித்து, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நல்ல ஒரு நிதிநிலை அறிக்கையை இரண்டு மணி நேரம் 45 நிமிடங்கள் படித்து, அதிலே நல்ல திட்டங்களையும் அறிவித்திருக்கிறார்கள். அதிலே ஒரு சிலவற்றை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமச்சீர் கல்வி முறையில் புதிய பாடத் திட்டங்களை இந்த ஆண்டு கொண்டு வருவோம் என்ற அறிவிப்பும், ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகை ரூபாய் 15,000-லிருந்து 20,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்போம் என்கிற அறிவிப்பும், நெசவாளர்கள், புத்தகப் பதிப்பாளர்கள், நரிக்குறவர் உள்ளிட்டவர்களுக்குத் தனி நல வாரியம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பும், திருப்பூர் மாவட்டம் உதயமாகிறது என்கிற செய்தியும்,



சமையல் எண்ணெய், பருப்பு கொள்முதல் ஆகியவற்றுக்கு வரி இரத்து என்கிற நல்லறிவிப்பும், சிவகங்கை, பெரம்பலூரில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்கிற புதிய அறிவிப்புகளும் இந்தத் தமிழகத்திற்கு ஏற்படக்கூடிய நல்ல திட்டங்களையும் அறிவித்திருக்கிற நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற மாமல்லபுரத்திலே ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து வந்த இரண்டு சுற்றுலாப் பயணிகளை அந்தப் பகுதியிலே இருந்த மனநிலை சரியில்லாத ஒருவர் அடித்துத் துன்புறுத்துவதைப் பார்த்த, மாமல்லபுரம் பகுதியிலேயிருக்கிற வெண்புருஷம் மீனவர் பகுதியைச் சேர்ந்த முருகன் என்ற நபர் தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டாலும் பரவாயில்லை, இந்த மாமல்லபுரம் உலகப் பிரசித்திபெற்ற சுற்றுலாத் தலம். அந்த தலத்திலே இதுபோன்ற நிகழ்வுகள், வெளிநாட்டுப் பயணிகளுக்கோ, உள்நாட்டுப் பயணிகளுக்கோ, யாருக்கும் ஏற்படக்கூடாது; அந்தப் பகுதியில் இருக்கிற தன்னுடைய உயிர் போனாலும் பரவாயில்லை என்று உயிரையே துச்சமென மதித்து, உயிரையே மாய்த்துக்கொண்டு, அந்த ஆஸ்திரேலிய நாட்டுப் பயணிகளைக் காப்பாற்றிய அந்த முருகனின் குடும்பத்தாருக்கு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களும், மீனவச் சமுதாய மக்களும் சொல்கிறார்கள்; நாங்களும் சொல்கிறோம்; அந்தப் பகுதியிலிருந்து வீரச் செயல் புரிந்த அந்த மறவருக்கு, வீரச் செயல் புரிந்தமைக்காக வழங்கப்படும் விருதை தமிழக அரசு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும், அதேபோல அவருடைய குடும்பத்தாருக்கு மாத ஓய்வூதியமும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேற்றைய முன்தினம் நல்ல அறிவிப்பைத் தந்தார்கள். எக்டேருக்கு 7,500 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிப்பில் சொல்லியிருந்தாலும்கூட, இன்றைக்கு விவசாயிகள் மத்தியிலே அதை இன்னும் கூடுதலாக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. ஏனென்று சொன்னால்,

அரசாங்கம் பயிர்ச் செலவை மட்டும் கணக்கிடக்கூடாது. அந்த மகசூல் வந்தால் அவர்களுக்கு எவ்வளவு இலாபம் வரும் என்பதையும் கணக்கிட்டு, அதையும் சற்று சேர்த்துக் கொடுப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டும். எனவே ஒரு எக்டேருக்கு 7,500 ரூபாய் என்பது போதாது. எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு எக்டேருக்கு 10,000 ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழக முதல்வரின் அறிவிப்புகளிலே ஒரு நல்ல அறிவிப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா என்கிற அறிவிப்பு. நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் ஏறக்குறைய மூன்று இலட்சம் பேருக்கு மேலாக, (குறுக்கீடு) இப்போது 4½ இலட்சமாக மாறியிருக்கிறது, பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, இன்னும் இலட்சக்கணக்கானவர்களுக்கு பட்டா கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் உள்ளது. இந்தத் தமிழ் மண்ணிலே ஒரு சாதாரணக் குடிமகனுக்குப் பட்டாகூட இல்லையே என்கிற ஆதங்கம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அனைவருக்கும் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க நம்முடைய அரசு முனைப்போடு செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்கூட எங்கள் மாவட்டத்திலே இதுபற்றிக் கேட்டபோது, 'அங்கே ஏராளமான தாசில்தார் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன; அதேபோல, நில அளவை அலுவலர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன; அதேபோன்று வருவாய்த் துறையிலே ஏராளமான பணியிடங்கள் காலியாக இருப்பதாலே எங்களாலே பட்டா வழங்க முடியாத நிலை இருக்கிறது' என்றார்கள். நம்முடைய அமைச்சர்கூட வந்தார்கள்; அந்தப் பகுதியிலே ஆய்வு நடத்தினார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே, செங்கல்பட்டு நகரிலே 10 வட்டங்கள், ஒருவருக்குக்கூட பட்டா இல்லை; நத்தத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள்; பட்டா கிடைக்காத நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே பார்த்தால், இன்னும் 1,000 பேர்களுக்குக்கூட பட்டா கொடுக்கவில்லை. இதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. ஏராளமானவர்கள், இலட்சக்கணக்கிலே தமிழகத்திலே இருக்கிறார்கள்; என்னுடைய தொகுதியிலேகூட 40 ஆயிரம், 50 ஆயிரம் குடும்பங்கள் பட்டா இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே விரைவாக பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்கள் பட்டியல் எடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலிலே பார்த்தால் ஏராளமான குளறுபடி. ஏழைக்கு இல்லை, குடிசையில் இருப்பவருக்கு இல்லை. ஆனால் பணக்காரனும், நிலப்பிரபுக்களும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் பட்டியலிலே இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே நம்முடைய அரசாங்கம் உடனடியாக மீண்டும் மறுபரிசீலனை செய்து உண்மையான பயனாளிகள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியலில் இடம் பெற வழிவகை செய்ய வேண்டும். இன்றைக்கு நிறைய பேர்களுக்கு வீடு கொடுக்க வேண்டுமென்று நாம் நினைக்கிறோம்; இன்றைக்கு நம்முடைய அரசாங்கமும் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே குடிசை போட்டு இருப்பவனின் பெயர் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களின் பட்டியலில் இல்லை. அப்படி இல்லாமல் இருப்பதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பே கிடைக்காமல் போய்க்கொண்டிருக்கிறது. எனவே நம்முடைய அரசாங்கம் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நேற்றையதினம்கூட எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. தமிழரசு பேசும்போது காவிரியிலே வருகிற உபரி நீரை சேலத்திற்கும், நாமக்கல்லிற்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்குப் பல்வேறு காரணங்களை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; மேலும் அதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. அதேபோன்று வறண்டு கிடக்கிற பாலாற்றிலும் இந்த உபரி நீரை விட்டால் மிகப் பெரிய பயன் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் மற்றும் மின் துறை அமைச்சர் இருக்கிற மாவட்டமான வேலூர், அதையடுத்து இருக்கிற திருவண்ணாமலை, அதையடுத்து இருக்கிற காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களிலே இருக்கிற விவசாயிகளுக்கும் சென்னை, திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் போன்ற மாவட்டங்களில் இருக்கிற மக்களுக்கும் நீராதாரம், குடிநீர் ஆதாரம் கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. எனவே இதையும் பரிசீலிக்க வேண்டும். பள்ளத்திலே இருக்கிறது காவிரியாறு. இது மேட்டிலே வர வேண்டிய நிலைமை இருக்கிறது என்று சொன்னாலும்கூட--அதை இன்றைக்கு-நேற்று நாமக்கல்லுக்கும் சேலத்துக்கும் சொல்கிறபோது அமைச்சர் சொன்னார். பாலாற்றுக்கு அந்த நிலை இல்லை. எனவே

[திரு. கி. ஆறுமுகம்] [2008 மார்ச் 28

எப்படியாவது பாலாற்றிலே உபரி நீரை நம்முடைய அரசு விடுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று இன்றைக்கு உலகம் முழுக்க இருக்கிற பிரச்சினை, இந்தியா முழுக்க இருக்கிற பிரச்சினை. அதிலே முன்னோடியாக நாம் தமிழகத்திலே நெகிழிப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்துவதை நூறு சதவீதம் தடுப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுக்கவேண்டும். ஏனென்று சொன்னால் இந்த நெகிழிப் பொருள்கள், ஒரு ஆண்டு, நூறாண்டு அல்ல, எத்தனை ஆண்டுகள் இருந்தாலும் அது மக்காது. அது மண்ணினுடைய தன்மையை மாற்றிவிடும் என்கிற நிலை இருக்கிறது. அப்படி இந்த நெகிழிப் பொருள்களைக் கொளுத்த வேண்டுமென்று சொன்னால், அதிலேயிருந்து வரும் புகை, நச்சுப் புகை நமக்கு மிகப் பெரிய பகையை ஏற்படுத்துகிறது. அதனாலே புற்றுநோய் போன்ற நோய்கள் வரும் வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நெகிழிப் பொருட்களை அறவே ஒழிப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) சொல்லிவிட்டேன். பிளாஸ்டிக் முதலிலேயே சொல்லிவிட்டேன். அதுமட்டுமல்ல. இன்றைக்கு (குறுக்கீடு) தமிழிலே முயற்சி பண்ணுகிறோம். எல்லோரும் பேச வேண்டும் என்றுதான்.

முற்பகல் 11-50

அலுவலகங்களிலே இன்றைக்குப் பார்த்தோமென்றால் நிறைய பேர், ஒரு சில அதிகாரிகள், பணியாளர்கள், காவல் துறை காவலர்கள் போன்றவர்கள் எல்லாம் பார்த்தீர்களென்றால் குடித்துவிட்டே பணிக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இது மிகப் பெரிய ஒரு பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. அவன் 1 போடுகிறானா, 11 போடுகிறானா என்று தெரியாது. இல்லை 1 போட்டு, 0 போடுகிறானா, இன்னொரு 0 போட்டானா என்று தெரியாது. இந்த நிலைமை இருக்கிறது. 1, 0 போட்டு அப்புறம் இன்னொரு 0 போட்டு அப்புறம் 1 கூட போடுவான். இந்த நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இதுபோன்று குடித்துவிட்டு வருகிற அதிகாரிகளுக்கு கண்டிப்பாக தண்டனை விதிக்கவேண்டும். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை நம்முடைய அரசாங்கம் எடுக்கவேண்டும். ஏனென்றால், இன்றைக்கு நிறைய இடங்களில் இந்தப் பிரச்சினை.



2008 மார்ச் 28] [திரு. கி. ஆறுமுகம்]

என்னுடைய தொகுதியிலே திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திலே, வட்டாட்சியர் அலுவலகத்திலே, குடிமைப் பொருள்களை வழங்குகிற அந்த அதிகாரிகள் குடித்துவிட்டே வந்து பிரச்சினை. அவர்கள், அதிகாரிகள்மீது வழக்குக் கொடுத்தால்கூட, அங்கிருக்கிற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதுபோன்று ஏராளமான பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன.

அதுபோன்று எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிற மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. இரண்டு தினங்களுக்கு முன்பாக ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது. அது என்னவென்று சொன்னால், அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை, தனியாருக்கு 20 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடுகிறோம் என்கிற அறிவிப்பு. ஆனால் அந்தப் பகுதி மக்களும் பாட்டாளி மக்கள் கட்சியும், தொடர்ந்து வலியுறுத்தி வருவது, எங்கள் அய்யா கூட அதற்காக பத்தாயிரம் பேரைத் திரட்டி ஒரு மிகப் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். நாங்களும் தொடர்ந்து அந்தப் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைத் தனியாருக்கு விடக் கூடாது, கூட்டுறவுத் துறைமூலமாக நடத்த வேண்டுமென்று நாங்கள் சொல்லிக்கொண்டு வருகிறோம். அதற்கான அறிவிப்பு இன்றைக்கு தினத் தந்தியிலே வந்திருக்கிறது. Madurantakam Cooperative Sugar Mills Limited என்று போட்டு Tender Notification ஒன்று வந்திருக்கிறது. ஆங்கிலத்திலே வந்திருக்கிறது. இது கிராமத்திலே இருப்பவனுக்குத் தெரியுமா? இது தமிழ்ப் பத்திரிகையிலே ஆங்கிலத்திலே வந்திருக்கிறது. அங்கிருக்கிற விவசாயிகளுக்குத் தெரியவில்லை. ஒரு சிலர், படித்தவர்கள்—எங்களுக்கெல்லாம் அப்போதுதான் நாங்களே பார்த்தோம். ஏனென்றால் இதுபோன்ற அறிவிப்புகள் வரக் கூடாது. ஏனென்று சொன்னால் தனியார் துறையிலே அதை நடத்தக் கூடாது, கூட்டுறவுத் துறைமூலமாக நடத்த வேண்டும். அதை நடத்துவதற்கு வெறும் 19 கோடி ரூபாய் மட்டும் செலவாகும். அதிகமாகச் செலவாகவில்லை. அரசாங்கம் இன்றைக்கு 51,000 கோடி ரூபாய்க்கு நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. வெறும் 19 கோடி ரூபாயைக் கொடுத்தால் அதை இலாபமாக நடத்த முடியும் என்று அந்தத் துறையினுடைய செயலாளரே அதற்காக பரிந்துரை செய்திருக்கிறார் என்று சொன்னால், இதை நம்முடைய அரசு ஏன் நடைமுறைப்படுத்தவில்லையென்ற கேள்வி எழுகிறது.

அதேபோன்று எங்களுடைய மாவட்டத்திலே பின்தங்கிய பகுதியாக இருக்கிற செய்யூர். ஏற்கெனவே நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே இதுகுறித்து சட்டமன்றத்திலே பேசியிருக்கிறோம். ஆனால் இந்த அறிவிப்பு வரும் என்று பார்த்தோம். அதற்காக தொடர்ந்து கடந்த 3 மாதங்களாக எங்களுடைய மாவட்டத்திலே தெருமுனைப் பிரச்சாரங்கள், பொதுக் கூட்டங்கள் என்று அந்தப் பகுதி மக்களிடத்திலே விழிப்புணர்வு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஏனென்று சொன்னால் இந்த செய்யூர் அனல் மின்திட்டம் அந்தப் பகுதியிலே வர வேண்டும். அதற்கான ஆய்வறிக்கையைக்கூட நாங்கள் எனது தலைமையிலே நடைபெற்ற அந்தக் குழு விவாதித்து, அய்யா அவர்கள் சொன்ன அந்தக் கருத்துகளையெல்லாம் உள்ளடக்கி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் கொடுத்திருந்தோம். அந்த அறிவிப்பு வரவில்லை. எனவே செய்யூரிலே மீண்டும் இந்த அனல் மின்திட்டம் வரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே அறிவிப்பு வரவில்லையே தவிர, மத்திய அரசாங்கத்தோடு பேசிக்கொண்டிருக்கிறோம். அங்கே நிலத்தினுடைய விலை அதிகமாக இருந்தாலும், செய்யூரிலே ஒரு அனல் மின்நிலையம் போடலாம் என்ற பரிந்துரையை நாங்கள் செய்திருக்கின்றோம். டில்லியிலே இருக்கின்ற Power Finance Corporation நிறுவனத்தார், இரண்டு தினங்களுக்கு முன்னாலே வந்து பேசிவிட்டுப் போயிருக்கிறார்கள். எப்படியாவது ஒரு ஏக்கர் நிலத்தை ஆறு இலட்சம் ரூபாய்க்கு வாங்கித் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அங்கே ஒரு அனல் மின் நிலையம் கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

*முற்பகல் 11–55*

**திரு. கி. ஆறுமுகம்:** நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அறிவித்த அறிவிப்பிற்கு என் தொகுதி மக்களின் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



இப்போது சிமெண்ட் விலை; சிமெண்ட் விலையைப்பற்றி நாங்கள் பலமுறை எங்கள் அய்யா அவர்கள் தலைமையிலே ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறோம். அய்யா அவர்களும் பல்வேறு யோசனைகளை நம்முடைய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தவகையிலே, பல்வேறு குழுக்களிடம் ஆய்வு செய்தபோது, ஒரு மூட்டை சிமெண்ட்டை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு 60 ரூபாயிலிருந்து 80 ரூபாய்க்குள்தான் ஆகிறது என்கிற கருத்துச் சொல்லப்படுகிறது. அதற்கான வரியைச் சேர்த்தாலும்கூட, 100 ரூபாய் அளவிற்குத்தான் வரும் என்று சொல்கிறார்கள். அதற்கடுத்து அதை ஏற்றி இறக்கி, பிறகு அதை வியாபாரிகளுக்குக் கொடுக்கிறபோது, அதிலே இலாபம் வருகிற கணக்கைப் பார்த்தாலும்கூட, 150 ரூபாய்க்கு விற்றால் போதும் என்கிற நிலையைப் பல்வேறு ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்; இந்தக் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு 200 ரூபாயிலே நம்முடைய தமிழக அரசாங்கம் விற்பனை செய்யும் என்கிற அறிவிப்பினைச் செய்து, இன்றைக்கும் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், தனியார் மட்டும் இன்னும் 250 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தக் கருத்துகளையும் மீண்டும் நம்முடைய அரசாங்கம் யோசித்து, 150 ரூபாயிலே மக்களுக்கு சிமெண்ட்டை வழங்குவதற்கான முயற்சியை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய கிராமப்புறச் சுகாதாரத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு வருடமும் 10 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு ஊராட்சிக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன்படி, கடந்த ஆண்டு 10 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்; இந்த ஆண்டும் மீண்டும் 10 ஆயிரம் ரூபாய் வந்திருக்கிறது. ஆனால், நமது தமிழகத்திலே இருக்கிற ஊராட்சிகளிலே அந்தப் பணத்தை இன்னும் செலவு செய்யாமலே வைத்திருக்கிறார்கள். எங்கள் தொகுதியிலேகூட நாங்கள் ஒரு ஆய்வுக் கூட்டத்தை நடத்தி அதிலே கேட்டோம். அப்போது எங்கள் தொகுதியிலே இருக்கிறவர்கள், "நம்முடைய அன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் சாத்தூரார் அவர்கள் அறிவிப்பை வைத்திருந்தார்கள். கொசுவுக்கு மட்டும் மருந்து அடியுங்கள்; கிணறுகளிலே பூச்சிப் பவுடரைப் போடுங்கள் என்று சொன்னதாலே, நாங்கள் அதற்கு 750 ரூபாய், 1,000 ரூபாய்க்குள்தான் செலவு செய்திருக்கிறோம். ஏற்கெனவே, கடந்த ஆண்டிலே மீதமுள்ள 9 ஆயிரம் ரூபாய் நிதியை என்ன செய்வதென்று தெரியவில்லை; இந்த ஆண்டு இன்னுமொரு 10 ஆயிரம் ரூபாய்

வந்திருக்கிறது" என்று சொல்கிறார்கள். இதற்காகத் தலைவரும், அந்தப் பகுதியிலே இருக்கிற செவிலியரும் வங்கிக் கணக்கினை இணைப்பாகத் தொடங்கி, அந்தப் பணம் வங்கியிலே தூங்கிக் கொண்டிருக்கிறது. இதிலே என்னென்ன செய்யவேண்டுமென்று சொல்லி, இதற்கான அறிவிப்புகளை அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டாகக் கூறுகின்றார்கள். இந்தத் தொகை ஒவ்வொரு ஊராட்சிக்கும் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி மன்றத் தலைவரும், அங்குள்ள செவிலியர்களும் இணைந்து ஒரு கணக்கை ஏற்படுத்தி, அதன்மூலமாக அந்தந்தக் கிராமத்தில் இருக்கின்ற சுகாதாரக் கேடுகள் சம்பந்தமாக, கொசு ஒழிப்பு மருந்தும் அல்லது அங்குள்ள சுகாதாரம் சம்பந்தப்பட்ட பணிகளுக்கு அந்தப் பணத்தைச் செலவு செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டு, அது ஒரு திட்டமாகத் தமிழகம் முழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதை மாண்புமிகு உறுப்பினர் அவருடைய தொகுதியிலே கண்காணிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கிருக்கின்ற ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அவர்களுடைய தொகுதிக்குட்பட்டுள்ள கிராமங்களில் இந்தப் பணிகளைக் கண்காணிக்கலாம் என்பதை ஒரு வேண்டுகோளாகவும் நான் வைக்க விரும்புகிறேன்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இதை அரசின் கவனத்திற்கு நான் எடுத்து வந்திருக்கிறேன். அந்த நிதியைச் செலவு செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்; வேறொன்றுமில்லை.

அதேபோன்று, வீட்டு வசதிக் கடன்கள்; வங்கியிலே கொடுக்கக்கூடிய கடன்களை நம்முடைய அரசாங்கம் தள்ளுபடி செய்திருக்கிறது. 25 ஆயிரம் ரூபாய்க்கு குறைந்திருக்கிற அந்த நிதியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். எஞ்சியிருப்பதற்கு அதன் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்; வட்டியிலே சதவிகிதத்தைக் குறைத்திருக்கிறார்கள். இன்றைக்கு, வறுமைக் கோட்டிலே இருக்கிற அந்த மக்களுக்கு ஏற்கெனவே, நாம் விவசாயிகளுக்கு அத்தனை



கடன்களையும் தள்ளுபடி செய்ததைப்போன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலேயும் ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அந்த மக்கள் வறுமையில் இருக்கிறார்கள்; ஒன்றுமே செய்யமுடியவில்லை. எனவே, அந்த வீடாவது மிஞ்சும். எனவே, அத்தனை கடன்களையும் ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வேலையில்லா உடற்பயிற்சி ஆசிரியர்கள் 30 ஆயிரம் பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கடந்த வாரம்கூட, இரண்டு நாட்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தினார்கள். அதிலே அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருந்தார்கள். இப்போது 8 ஆம் வகுப்பு வரையிலே இருக்கிற அந்தப் பள்ளிகளுக்கு உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமித்தால், ஒரு பத்தாயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். இன்னும் அதிகமாக அரசு பல்வேறு இடங்களை அறிவித்தால், ஏறக்குறைய 15 ஆயிரம் பேர்களுக்கு உடனடியாக அந்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, நம்முடைய தமிழக அரசாங்கம் இதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அடுத்து, ஈரோடு மாவட்டம், அந்தியூரில் உள்ள செலின் மேரிஸ் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகள் படித்து தேர்வு எழுத முடியாத நிலை இருக்கிறது. இதேபோன்று வேலூர் மாவட்டத்திலும் திருவலம் குழந்தை இயேசு ஆசிரியர் பயிற்சி நிலையத்திலும் தேர்வு எழுத முடியாத நிலையிலே படித்துவிட்டு இருக்கிற மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் தேர்வு எழுதுவதற்கான வாய்ப்பை நம்முடைய அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது என்னுடைய தொகுதியிலே (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். கடந்த 3 ஆண்டுகளாக நம்முடைய தொடர் வண்டித் துறையிலே ஒரு ரெயில்வே கடவுக்கு அனுமதி வழங்கப்பட்டது, செங்கல்பட்டில் இருந்து மாமல்லபுரம் செல்லும் சாலையிலே. நம்முடைய தமிழக அரசாங்கம்கூட, நம்முடைய

நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கடந்த ஆண்டே அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டார்கள். ஆனால் அதிகாரிகள் மெத்தனத்தாலே மிகப் பெரிய நெரிசல் அந்தப் பகுதியிலே. ஒன்றும் செய்ய முடியவில்லை எங்களுக்கு. அந்தக் கடவிலே போய் நின்றால்கூட எங்களுக்கு மிகக் கஷ்டமாக இருந்துகொண்டிருக்கிறது— (குறுக்கீடு) Railway Gate, railway gate. தமிழில் முயற்சி செய்கிறோம். 100 சதவிகிதம் என்னால் தமிழில் பேசமுடியாது. சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் இந்தக் gate-இலே சிக்கிக் கொண்டோம் என்று சொன்னால்—ஏனென்றால் நீங்கள் தெரியாது என்று சொல்கிறீர்களே, ஆங்கிலத்தில் சொல்லச் சொன்னீர்கள், சொல்லிவிட்டேன். (குறுக்கீடு)—ரொம்ப நெருக்கடியாக இருக்கிறது, இந்த அதிகாரிகள் காட்டும் மெத்தனத்தினாலே—மத்திய அரசாங்கம் கொடுத்துவிடுகிறது. மாநில அரசாங்கம் கொடுத்துவிடுகிறது. அதிகாரிகள் இன்னும் அதற்கான வரைபடம் தயார் செய்கிறோம், நில ஆர்ஜிதம் இன்னும் செய்யவில்லை என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக எங்களுக்கு அந்தப் பகுதியிலே இந்த ரெயில்வே மேம்பாலத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் களத்தூரான் கால்வாய் திட்டம் கடந்த ஆண்டு ஒன்றரை கோடி ரூபாயில் அறிவித்தார்கள். அது இன்னும் கிடப்பிலே இருக்கிறது. அதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வாயலூரிலே தடுப்பணை, பாலாற்றின் குறுக்கே வங்கக் கடலின் முகத்துவாரத்திலே ஒரு தடுப்பணை கட்டவேண்டுமென்று கடந்த ஆட்சிக்கால அரசு அறிவித்தது. அது இன்னும் கிடப்பிலே இருக்கிறது. அந்தப் பகுதியிலே இப்பொழுது— ஏற்கெனவே பேசியிருக்கிறேன். மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன் அரசுக்கு. ஏனென்று சொன்னால் அங்கு—கடல் தண்ணீர் புகுந்துவிடுகிறது. உப்பு நீராகிக் கொண்டிருக்கிறது. அதை உடனடியாக கட்டுவதற்கான முயற்சியை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு பாதாள சாக்கடைத் திட்டம் அறிவித்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அது தொடங்கப்படவில்லை. அதை உடனடியாகத் தொடங்குவதற்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். எங்களுக்கு ஒரு. . . (மணியடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. முடியுங்கள், No, no, பேசி முடியுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். எனது தொகுதிதான் வேறு ஒன்றும் controversy-யாக எல்லாம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடம் எல்லாம் கிடையாது. ஒரே வார்த்தையில் சொல்லுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** சட்டக் கல்லூரி. செங்கல்பட்டிலே சட்டக் கல்லூரி இருக்கிறது. அதிலே படிக்கிற மாணவ மாணவிகள் தமிழகம் முழுவதும் இருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு அங்கே இடவசதி இல்லை. தங்கும் விடுதிகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருக்கழுக்குன்றம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம்.

திருக்கழுக்குன்றம் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய மாவட்டத்தில் எங்களுடைய தொகுதியில் இருக்கிற குழிபாந்தண்டலம், எடையூர், நெரும்பூர், பட்டரவாக்கம், சுவகண்டி ஆகிய பகுதிகளில் உள்ள நடு நிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகள் ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று செங்கல்பட்டு ஐ.டி.ஐ.யிலே படிக்கிற மாணவர்களுக்கு அங்கு benche கூட இல்லை. அங்கு இருக்கிற உதிரிப் பாகங்கள், அங்கு இருக்கிற வாகனங்கள் எல்லாம் மிகப் பழமையாக இருக்கின்றன. புதுமையாக இருக்கிற வாகனங்களும் அங்கு புதுமையான பொருட்களும் எங்களுக்குச் செய்ய வேண்டுமென்று ஐ.டி.ஐ.-யிலே கேட்டிருக்கிறார்கள்.

இன்னொரு கோரிக்கை. தமிழகம் முழுக்க ஐ.டி.ஐ.-யிலே படிக்கின்ற மாணவர்களுக்கு 50 சதவிகிதம் அவர்கள் போவதற்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது பேருந்துகளிலே. அந்த மாணவர்கள் சொல்கிறார்கள், பள்ளி மாணவர்களைப் போன்று, நாங்களும் மிக ஏழையான மாணவர்கள் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன். *(குறுக்கீடு)* No, no நிறைய நேரம் எடுத்துக் கொண்டு விட்டீர்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** ஒரே ஒரு நிமிடம் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப நேரம் எடுத்துக் கொண்டு விட்டீர்கள். நீங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** நான் எடுத்துக்கொள்ளமாட்டேன். இந்த ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு இலவசப் பேருந்து அட்டை வழங்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய தொகுதியில் இருக்கிற குறைகளை எல்லாம் நம்முடைய அமைச்சரிடம் எழுதிக்கொடுக்கிறேன். இவற்றை எல்லாம் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மாண்புமிகு நிதி அமைச்சர் முன்வைத்துள்ள நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளை, இதனால் பயனுறும் மக்களின் சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வயதால் முதுமையும், செயலால், சிந்தனையால் இளமையும் கொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்களையும், *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏறத்தாழ நெடுநேரம் நின்றபடியே நிதிநிலை அறிக்கையை மனப்பூர்வமாக இந்த மன்றத்திலே சமர்ப்பித்த நிதி அமைச்சர் அவர்களையும் மீண்டும் ஒருமுறை மன்றத்தின் சார்பில் வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-05*

இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிற அதேசமயத்தில், குறிப்பிட வேண்டிய சில விவரங்களைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறோம். அறிக்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது முக்கியத்துவம் வாய்ந்தது. உலகையே அச்சுறுத்தும் பெரும் பிரச்சினை இது என்பதை



அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் சாலப் பொருத்தமானது. கோவையில் நடைபெற இருக்கிற மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டு அறிக்கையிலும் இந்த விவரம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ சக்திகளுடைய இலாப வெறி, பணவெறி காரணமாக வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் குறிப்பாக ஏகாதிபத்திய சக்திகளுடைய செயல்களால் புவிக் கோளத்திற்கு மண்ணில் வாழும் மனிதர் அனைவருடைய பொது இல்லத்திற்கு இந்தப் பேராபத்து சூழ்ந்திருக்கிறது.

நிதிநிலை அறிக்கையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள தட்பவெட்ப நிலை ஆராய்ச்சி மையத்திற்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கங்கள் அமைத்து மாணவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்கதாக நாங்கள் கருதுகிறோம்.

தமிழகத்தில் தலைநகரங்களில் கணினி இன்டர்நெட் மூலம் பல மோசடிகள் நடைபெறுவதைத் தடுப்பதற்காக Cyber Crime Wing என்கிற wing அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த Cyber Crime Wing என்கிற wing இந்தப் பிரிவு மாநிலத்தின் தலைநகரமாகிய சென்னையில் மாத்திரம் இல்லாமல் தமிழகத்தில் முக்கிய நகரங்கள் அனைத்துக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்றும் இன்னும் கூடுதலான நுட்பன்னர்களை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம். அன்றாடம் நாளேடுகளில் வரக்கூடிய கொலை, கொள்ளை, திருட்டு போன்ற சம்பவங்களைக் கட்டுப்படுத்தப்படுவதற்கு நாம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில், குடியிருக்கக்கூடிய, தொழில் செய்து வாழக்கூடிய மக்களுக்கு ஏற்பட்டுள்ள புதிய நெருக்கடிகள் வாடகை மற்றும் பல நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். ஒரு குழு கூட அமைக்கலாம். அதன் பரிந்துரையை ஏற்று சுமுக முடிவுக்கு வரலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன். குத்தகை விவசாயிகள், வாடகைதாரர்கள், குடியிருப்பவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர்களுக்கு உடற்பயிற்சிக் கூடம் தொகுதிக்கு ஒன்று என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதேசமயம் இளைஞர் மேம்பாட்டிற்காக இளைஞர் நலக் குழு Youth Welfare Board என்பது தமிழகத்தில் அமைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

சிதம்பரம் ஆலயத்தில் ஒரு கொடிய சம்பவம். அதனுடைய வரலாற்றில் நிற்கக்கூடிய ஒரு சம்பவமாக தமிழ்ச் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில், சில மூர்க்கர்களால் தமிழுக்கு நேர்ந்த தடையை நீக்குவதற்கு அரசு எடுத்த முயற்சியை வரவேற்கிறோம். சிவனடியார் ஆறுமுகத்திற்கு அளித்த உதவிக்கு உண்மையிலே மனப்பூர்வமாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கேபிள் டி.வி. ஊழியர்கள், அவர்களுக்கு நல வாரியம் அமைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

சின்னத் திரை கலைஞர்கள் மருத்துவ உதவிக்காக நல நிதியம் அமைப்பது மகிழ்ச்சிக்குரியது. அதேசமயத்தில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும்போது வன்முறை, மூட நம்பிக்கை, வஞ்சனை ஆகியவற்றை வளர்க்கக்கூடிய போக்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா என்பதைப் பொறுத்தவரையில் மதுரை திருமலை மன்னர் மகாலுக்கு ஒலி-ஒளி காட்சிக்காகவும், பராமரிப்புக்காகவும், ஒரு நீண்ட பெரிய உதவியைச் செய்திருப்பதற்கு மாநில அரசிற்கும் மத்திய அரசிற்கும் நன்றி தெரிவிக்கிறேன். மூன்று கோடி ரூபாய் வரையிலும் வழங்கப்பட்டிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அந்தப் பணிகள் விரைவுப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ச் சான்றோர்களுடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது, வரவேற்கத்தக்கது. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தாலுகா, இராமலிங்கம்பட்டியில் புலவர் கோ. ஆறுமுகனார் அவர்களுடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அவர்களுடைய நினைவிடம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய விவரங்களையெல்லாம் தனியாகவும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தக் காலத்தில் 'குமாஸ்தாவின் பெண்' என்கிற நாடகத்திற்குப் பாடல் எழுதியவர், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி அவர்கள் அவர் என்னென்ன பாடல்களையெல்லாம்



பாடியிருக்கிறார் என்கிற விவரங்கள் இருக்கின்றன. ஐநூறு நூல்கள் எழுதியிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகள் நலன் குறித்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது மகிழ்ச்சி. சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடி மையங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், பராமரிக்கப்பட வேண்டும், புதிதாகவும் கட்டப்பட வேண்டும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இதைக் கொண்டுவந்தாலும்கூட இந்தக் கட்டடப் பராமரிப்பைக் கொண்டுவருவது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அடுத்து, தூய்மைப் பணித் தொழிலாளர்கள் பற்றிக் குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சி. நவீன கருவிகள் வழங்குவது நல்லது. அந்தப் பணியில் ஈடுபடக்கூடியவர்கள் காலமாகிவிட்டபிறகு அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை என்பது, மாநகராட்சிகளில் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் நிலவக்கூடிய தீண்டாமைக் கொடுமை குறித்து, தீண்டாமை ஒழிப்பு முன்னணி, அதனுடைய தலைவர் சம்பத் அவர்களுடைய தலைமையில் இயக்கங்களை நடத்தி, மதுரை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்திருக்கிறது. அதனுடைய விவரங்களை அறிந்து உரிய நடவடிக்கை எடுத்து, உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல வாரியங்களை உருவாக்குகிறோம், நன்றி. அவற்றில் பல வாரியங்கள் நலங்குன்றியிருப்பனவாகத் தெரிகின்றன. இக்குறையைப் போக்க வேண்டும். நிதியும், ஊழியர்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் என்பதைப் பொறுத்தவரையில், சென்னையில் மாத்திரம் தொழில் வளராமல் தமிழகம் முழுவதும் தொழில் வளரவேண்டும் என்கிற உணர்வோடு, விரிவாகப் பல இடங்களுக்கு அறிவிப்புச் செய்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

மதுரையைப் பொறுத்தவரையில், ஐ.டி. பார்க் என்பது, தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. விரைவில் அடிக்கல் நாட்டப்படும்

[திரு. என். நன்மாறன்] [2008 மார்ச் 28

என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தேதி நிச்சயிக்கப்படும் என்று சென்ற தொடரில் தெரிவித்தார்கள். அந்தத் தேதியை விரைந்து நிச்சயித்து, உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் ஒரு புதிய தொழில்நுட்ப மையம், ஐ.ஐ.டி. உருவாகும் என்று சென்ற ஆளுநர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் அந்தச் செய்தி இடம்பெறவில்லை. ஆகவே, அது அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் ஏற்பட்ட ஜாதிக் கலவரத்தின்போது, அதைத் தீர்வு செய்வதற்கு தொழில் வளர வேண்டும், தொழில் வளர்ச்சி வேண்டுமென்று மோகன் குழுவின் பரிந்துரையையொட்டி, புதிய தொழில்களை உருவாக்குவதற்கு முன்வர வேண்டும். குறிப்பாக, மதுரையைச் சுற்றிலும் புதிய தொழில் வளர்ச்சிக்கு அரசு உரிய அறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் அப்படிப்பட்ட புதிய செய்திகள் இல்லாதது, ஒரு பகுதியினருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், அங்கே ஒரு சக்தியான இயக்கத்தையும் ஏற்கெனவே நடத்தி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியில் நல்ல நிதிநிலை அறிக்கை என்பது வைக்கப்பட்டது. அதிலே பல்வேறுவிதமான நடவடிக்கைகளைப் பார்த்து, உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அதற்கு முன்னின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், சென்னை மாநகரத்தினுடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கும், ஆணையாளர் அவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியறிதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"அன்ன யாவினும் புண்ணியம்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்றார் பாரதி. ஆகவே, இங்கே பயிலக்கூடிய மாணவர்களை நீங்கள் ஊக்கப்படுத்துவது, நாட்டிற்கு நல்லது. ஆனால், சென்னையில் அறிவித்திருக்கக்கூடிய இதே அறிவிப்பு, தமிழகத்தின் அனைத்து மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளும் தரமுயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2008 மார்ச் 28] [திரு. என். நன்மாறன்]

அதேபோன்று வீட்டுவசதிப் பிரச்சினையில், வீட்டுவசதி வாரியங்கள் அமைக்கப்பட்டு, அதிலே ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு உள்ளே செல்ல நான் விரும்பவில்லை. ஆனால், நீண்ட நெடிய காலமாக இயக்கம் நடந்து வருகிறது. அதற்கு ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. குழு அமைக்கப்பட வேண்டும். மாவட்ட அளவிலும் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ஆங்காங்கே உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். அங்கே வசிக்கக்கூடிய மக்கள் பெரிய அளவிற்கு முதலமைச்சர் அவர்களை நம்புகிறார்கள். இவர்களுடைய காலத்தில்தான் நடைபெற முடியும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

பட்டா என்பது, வழங்கப்படும் என்று அறிவித்திருக்கின்றோம். இன்னும் மதுரை மாநகராட்சிப் பகுதியில் அந்தப் பட்டா என்பது வழங்கப்படாத நிலையிருக்கிறது. காமராஜர்புரம் போன்ற பகுதிகளில் பட்டா வழங்கப்பட வேண்டும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும்கூட இதிலே அக்கறையோடு இருக்கிறார்கள். அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களுடைய நலன் அறிவிக்கப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சி. அதில் புறநகர்ப் பகுதியில் பணியாற்றக்கூடிய பத்திரிகையாளர்களுக்குப் பல சிரமங்கள் இருக்கின்றன. சில நேரங்களில் ஏராளமான பாதிப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, அந்தப் பத்திரிகையாளர்களுடைய பாதுகாப்பிற்கு, சிலநேரங்களில் ஏற்படக்கூடிய இழப்பிற்கு உரிய உதவி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் வாழக்கூடிய பத்திரிகையாளர்களுக்கும், தலைநகரங்களிலே இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களுக்கும் காலனி அமைப்பதை உறுதி செய்யவேண்டும். ஏற்கெனவே ஒரு காலனி சென்னையில் இருக்கிறது. புதிய காலனியும் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பல கருத்துக்களோடு எங்களுக்கு இருக்கக்கூடிய உடன்பாட்டையும் கூறி, மேலும் இதைச் செழுமைப்படுத்துவதற்காக கருத்துகளையும் தெரிவித்திருக்கிறேன். உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அந்த அறிக்கையின்மீது விவாதமும் நடந்து கொண்டிருக்கும்போதே தமிழகத்தில், குறிப்பாக தென் மாவட்டங்களில் திடீரென மழை பெய்து, அந்த மழையின் காரணமாக வெள்ளச்சேதங்கள் ஏற்பட்டு, மக்கள் துயருற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்தில் உடனடியாக சட்டமன்றத்தை ஒத்திவைத்து துயர் துடைப்புப் பணிகளில் நேரடியாகச் சென்று ஈடுபடுங்கள், மக்களின் துயரத்தில் பங்கு கொள்ளுங்கள் என்று அமைச்சர்களுக்கெல்லாம் உத்தரவிட்ட நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நேரடியாக மாவட்டம் முழுவதும் சென்று, அந்தந்த மாவட்டங்களில் மக்களின் குறை தீர்த்து, குறிப்பாக எங்கள் விருதுநகர் மாவட்டத்திற்கு ஓடோடி வந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களோடு சேர்ந்து பணியாற்றிய எங்கள் மாவட்ட அமைச்சர்களுக்கும் இந்த நேரத்தில் முதலில் நன்றியைக் கூறி, இந்த அரசு துயரப்படுகின்ற மக்களுக்கு உடனடியாக துயர் துடைக்கின்ற பணிகளில் ஈடுபடும் என்பதற்கு இதுபோன்ற பல முன்னுதாரணங்கள் இருந்தாலும் இதைப் பாராட்டுகிறேன்.

அதேபோல, நமது சபாநாயகர், பேரவைத் தலைவர் அவர்களையும் இந்த நேரத்தில் நான் பாராட்ட வேண்டும். நமது மாண்புமிகு மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்கள் 2 மணி நேரம் 45 நிமிடம் நிதிநிலை அறிக்கையை இந்த வயது முதிர்ந்த காலத்திலும் நின்றுகொண்டே படித்து, தமிழகத்தினுடைய எதிர்கால வளர்ச்சிக்கும், உடனடித் தேவைகளுக்குமான பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை, இருந்துகூட கேட்க முடியாமல் வெளியே சென்றவர்களுக்கெல்லாம் இன்றைக்குத் தாராளமாக நேரத்தை வழங்கி, ஒரு வார காலத்திலே சட்டமன்றக் கூட்டத்தொடர் பூராவும் முடித்துவிட்டு வெளியேறிய காலம் மலையேறி, இன்றைக்கு ஒன்றரை மாதத்திற்குமேலே (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற, இந்த உயர்ந்த ஜனநாயகத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கக்கூடிய



நமது பேரவைத் தலைவர் அவர்களையும் இந்த நேரத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜனநாயகத்தைப் பற்றிப் பாராட்டிப் பேசுகிறார், உட்காருங்கள்.

**திரு. தி. இராமசாமி:** ஆமாம். இந்த நிதிநிலை அறிக்கையில் பாராட்ட வேண்டிய அம்சங்கள், வரவேற்க வேண்டிய அம்சங்கள் அதிகமாக இருக்கின்றன. பூராவும் பாராட்ட வேண்டிய அம்சங்கள்தான். ஆனால், பொதுவாக ஆளுநர் உரையின்மீதே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக எங்களது கருத்துகளைச் சொல்லும்போது தொழில்கள் என்பது பெரு நகரங்களைச் சுற்றி மட்டும் உருவாக்கப்படுகிறது, தொழில்கள் பின்தங்கிய பகுதிகளுக்கும், குறிப்பாக தென் மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டும், அதற்கான முறையில் நிதிநிலை அறிக்கை அமையவேண்டும் என்று சொல்லி, எங்கள் கட்சியின் சார்பாக கருத்துகளைக் கூறியிருந்தோம். இப்பொழுது, அதனுடைய தொடர்ச்சியாக சிறு தொழில் என்று சொல்லி, 251 பின்தங்கிய வட்டாரங்கள் கண்டறியப்பட்டு, அவற்றில் தொழில் தொடங்கப்படும் என்ற ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதேசமயத்தில் ஒவ்வொரு வட்டாரங்கள்வாரியாக ஏற்படுத்தக்கூடிய தொழில்கள், அதை நடத்துவதற்கான தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துவது, அவர்களுக்கான ஆலோசனை வழங்குவது, வங்கிகளிலே கடன் பெறுவதற்கான வழிமுறைகளைத் தேடுவது போன்றவற்றிற்காக வட்டாரந்தோறும் அரசின் சார்பில் தொழில் ஊக்குநர்களை நியமனம் செய்ய வேண்டும். அதற்கு இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே வழிவகைகளைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நாங்கள் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12-20

சமீபத்தில் ஒரு பத்து தினங்களுக்கு முன்பு இந்திய பாராளுமன்றத்திற்கு முன்னால், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய பாராளுமன்றக் குழுத் தலைவர், எங்கள் அருமைத் தலைவர் தோழர் குருதாஸ் தாஸ் குப்தா அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் திடீரென பாராளுமன்றத்திற்கு முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். காரணம், மேற்கு வங்காளத்திற்கும், கேரளாவிற்கும்

கொடுக்கப்படுகின்ற ரேஷன் அரிசியினுடைய அளவை மத்திய அரசு குறைத்து விட்டது என்று போராட்டம் நடத்தினார்கள், அது உண்மை. ஆனால், எனக்கு இப்போது ஒரு சந்தேகம், தமிழகத்திலும் அப்படிக் குறைத்துவிட்டார்களா? ஏனென்றால், தமிழகத்தில் வழங்கப்படுகின்ற ரேஷன் கார்டுகளுக்கு 20 கிலோ அரிசி என்று சொன்னால், 20 கிலோ அரிசி என்பதே வழங்கப்படவில்லை. குறிப்பாக, என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், நகரத்தில் ஒரு கார்டுக்கு 10 கிலோதான் வழங்குகிறார்கள். அதை விசாரித்துப் பார்க்கும்போது, பச்சரிசியை வாங்க மக்கள் மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. 5 கிலோ புழுங்கல் அரிசி, 5 கிலோ பச்சரிசி என்ற நிலைதான் எங்கள் தொகுதியில் தொடர்ந்துகொண்டிருக்கிறது. காரணம், ரேஷன் கடைகளுக்குக் கொடுக்கக்கூடிய அரிசியினுடைய அளவைக் குறைத்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு ரேஷன் அரிசி கடத்தப்படுவது என்பதே கிராமப்புறங்களிலோ அல்லது நகர்ப்புறங்களிலோ இருக்கக்கூடிய ரேஷன் கடைகளுக்கு போனதற்குப் பிறகு, அந்தக் கடைகளிலிருந்து அரிசி என்பது கடத்தப்படவில்லை. ரேஷன் கடைகளுக்கு கொண்டுவரும்போதே இடையிலேயே அதிகாரிகள்மட்டத்தில் அந்தச் சம்பவம் நடப்பதாக நாங்கள் அறிகிறோம். அந்த அடிப்படையில் கடைகளுக்கு 100 சதவீத அரிசியையும், குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு, தொழில் பகுதிகள் இல்லாத மக்களுக்கு வழங்க வேண்டும். கார்டுகளுக்குரிய 20 கிலோ அரிசியை உரிமைப்படுத்தி வழங்க வேண்டும். ஏற்கெனவே இதிலே மத்திய அரசினுடைய ஒரு தவறு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், மத்திய அரசாங்கம் நாம் கேட்கிற அளவிற்கு அரிசியை கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதிலே எந்தவித மாற்றுக் கருத்தும் அல்ல. அதேபோன்று ஒரு யூனிட்டிற்கு 4 கிலோ என்கிற அடிப்படையிலே மூன்று பேர் இருந்தால், அவர்களுக்கு 12 கிலோவும், மூன்று பேருக்கு மேற்பட்டவர்களாக இருந்தால், 20 கிலோவும் தமிழ்நாட்டிலே அரிசி கொடுக்கச் சொல்லி 1 கோடியே 87 இலட்சம் குடும்பங்களுக்கு அரிசி கொடுக்கப்படுகிறது. சில இடங்களிலே அரிசி நுகர்வோர் சில மாவட்டங்களில் அதிகமாக இருக்கிறபோது அரிசியினுடைய



நுகர்வு அளவும் அதிகமாக இருக்கும். குறிப்பாக, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற பகுதிகளிலே, தமிழ்நாட்டிற்கே நெல் உற்பத்தி செய்கிற மாவட்டங்கள் அந்த மாவட்டங்கள். ஆக, அங்கே பார்க்கிறபோது நெல்லினை உற்பத்தி செய்தாலும்கூட, அங்கே நுகர்வோரினுடைய அளவு என்பது அதிகமாக இருக்கும். 93 சதவீதம், 97 சதவீதம் அங்கே இருக்கிறது. காரணம், அங்கே இருக்கிற விவசாயிகள் எல்லாம் மொத்த நெல்லை உற்பத்தி செய்து நேரடி கொள்முதல் நிலையங்களிலே அளித்துவிட்டு, அரிசியை வாங்கித்தான் சாப்பிடுகிறார்கள். அந்த அளவிற்கு அங்கு நுகர்வு இருக்கிறது.

அதுவே, ஈரோடு, கோயம்புத்தூர், நாமக்கல் போன்ற பகுதிகளில் பார்க்கிறபோது, நுகர்வோருடைய அளவு குறைவாக இருக்கிறது. அங்கு நுகர்வினுடைய அளவு குறைவாக இருப்பதற்குக் காரணம், அந்தப் பகுதியிலே இருக்கிற தொழிலதிபர்கள், பணக்காரர்கள் எல்லாம், அரிசி வாங்காமல் இருக்கிற காரணத்தினால், நுகர்வினுடைய அளவு குறைவாக இருக்கும். 53 சதவீதம், 63 சதவீதம் என்ற அடிப்படையிலே இருக்கும். எனவே, மாவட்டத்தினுடைய நுகர்வு அளவைக் கருதித்தான், முழுமையாக இந்த அரசாங்கம் அரிசியைக் கொடுக்கிறது. 100 சதவீதம் என்று, ஈரோடு மாவட்டத்திற்கும் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கும் நுகர்வு குறைவாக இருந்து, 100 சதவீதம் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால், அங்கு தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும். எனவே, அந்த அடிப்படையில், நுகர்வினுடைய அளவை வைத்துக்கொண்டு, அரசாங்கம் கட்டாயம் கொடுக்கிறது, இது ஒன்று. இப்போது ரேஷன் கடைகளில் தவறுகள் நடைபெறுவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படியல்ல. சில இடங்களில் தவறு நடைபெற்றுள்ளதை துறையின் சார்பில் நாங்கள் நேரடியாகக் கண்டுபிடித்து, சென்றமாதம்கூட நாமக்கல் பகுதியிலே இரண்டு விற்பனையாளர்கள் தவறு செய்தார்கள் என்று கண்டுபிடித்து, அவர்களைச் சிறையிலே அடைக்கின்ற அளவிற்குச் சென்றிருக்கிறது இந்தத் துறை, இந்த அரசாங்கம் என்பதைத் தெளிவிலே கொள்ள வேண்டும், ஒன்று.

அடுத்து, அதிகாரிகள் மத்தியில் அரிசி போகிறபோது தவறுகள் நடைபெறுவதாக ஒரு குற்றச்சாட்டினை உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியல்ல. இப்போது புதிதாக ரூட் சார்ட் முறை என்ற ஒரு முறையையே நாங்கள்

அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அந்த வண்டிகள் போகிறபோது, எந்தப் பகுதிக்கு லாரிகள் போகின்றன என்று, அவற்றையெல்லாம் அதாவது, எந்தெந்த ஊர்களுக்குப் போகின்றன என்று, கடைகளினுடைய எண்ணை எல்லாம் எழுதவேண்டும். அப்படியும் அதிலே தவறு நடக்கிறது என்று சொன்னால்—ஒவ்வொரு கடையிலும்—கண்ட்ரோல் ரூம் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் வைத்து, நம்முடைய மக்கள் பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத் தலைவரோ, ஒன்றியக் குழுத் தலைவரோ, சட்டமன்ற உறுப்பினர்களோ உடனே தொடர்புகொண்டால், இந்தத் துறையின் சார்பாக 24 மணி நேரத்தில் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி எங்காவது தவறு நடக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால், அதைப் புகாராக தந்தால், இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கையை கட்டாயம் எடுக்கும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 10 கிலோ அரிசிதான் வழங்கப்படுகிறது, 20 கிலோ அரிசி ஒரே நேரத்தில் வழங்கப்படவில்லையென்பதை இங்கே சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, நுகர்வோர்கள் குறைவாக இருக்கிற இடங்கள் என்று பிரித்து சொல்லி, அங்கே குறைவாக அரிசி வழங்கப்படுகிறது. 60 சதவீதம், 50 சதவீதம் என்று சொன்னார்கள். 60 சதவீதம் வழங்கப்படுகிற அந்தப் பகுதியிலேகூட 20 கிலோ அரிசி ஒரே நேரத்தில் வழங்கப்படவில்லையென்பது மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதேபோல அமைச்சர் அவர்கள், குண்டர் சட்டம் பாயும் என்று சொன்னார்களே, இந்த குண்டர் சட்டம், லாரிகளில் கடத்துகிறவர்கள் யார் மீதாவது பாய்ந்திருக்கிறதா? சாதாரணமாக 5 கிலோ, 10 கிலோ என்று எடுத்துச் செல்கிறவர்களைத்தான் நீங்கள் பிடிக்கிறீர்களே தவிர, லாரிகளிலே கடத்துபவர்களில் யார்; அதில் யார் முக்கியமான புள்ளிகள் என்பதைத் தெரிந்து அவர்கள்மீது குண்டர் சட்டம் பாய்ந்திருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமப் பகுதியிலே இருக்கிற விற்பனை நிலையங்களிலே அந்த ஊருக்கு உரிய மொத்த கார்டுகளுடைய அரிசியை அங்கே கொண்டு வைப்பதற்கு godown எல்லாம்



கிடையாது. ஒரு விற்பனைக் கடை இருக்கிறது என்று சொன்னால், அந்த விற்பனை நிலையத்திலே ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் அரிசியைக் கொண்டு போய் வைக்க முடியும். எனவே, அரசாங்கம் இரண்டு வகையாக அரிசியை நுகர்வு செய்கிறது. முதலிலே அந்த ஊருக்குத் தேவையான 60 சதவீத அரிசியை முதலில் நுகர்வு செய்கிறது. அது முடிந்தவுடனேதான் அடுத்தபடியாக 40 சதவீத அரிசியை அங்கே நாங்கள் நுகர்வின்மூலமாக நுகர்வு செய்வதற்கு ஏற்பாடு செய்கிறோம். எனவே, ஒட்டுமொத்தமாக ஒரு ஊரினுடைய மொத்த அரிசி இருப்பையும் வைப்பதற்கு அங்கே godown எல்லாம் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, முதலிலே 60 சதவீதம் அனுப்புகிறபோது அப்போது நேரடியாக சில பயனாளிகள் எங்களுக்கு இப்போது 10 கிலோ போதும், பின்னாலே வந்து வாங்கிக்கொள்கிறோம் என்று விவரம் தெரிந்தவர்கள் சொல்வது உண்டு. சில நேரங்களிலே அடுத்தபடியாக வருகிறபோது போடுகிறோம். ஏனென்று சொன்னால், ஏற்கெனவே இதே சட்டமன்றத்திலே என்ன சொல்லப்பட்டது என்று சொன்னால், ஒரே நேரத்திலே 20 கிலோ வாங்கச் சொல்லி வற்புறுத்துகிறார்கள், அதைப் பகுதி பகுதியாகத் தர வேண்டுமென்று சொல்லி அரசாங்கம் நேரடியாக ஆணை பிறப்பித்தது. 5 கிலோ கேட்டாலும் கொடுக்க வேண்டும், 5, 5 கிலோவாக, 10, 10 கிலோவாக கேட்டாலும் கொடுக்க வேண்டும், ஒரே நேரத்தில் 20 கிலோ வேண்டுமென்றாலும் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை வாங்குகிற நம்முடைய பயனாளிகள் அதிலே கொஞ்சம் கவனம் செலுத்தி நேரடியாக வாங்க வேண்டுமேயொழிய, அரசைப் பொறுத்த அளவுக்கு அந்தக் கார்டுகளுக்குரிய அரிசியை கட்டாயம் கொடுப்பதாகத்தான் இப்போது ஆணை பிறப்பிக்கப்பட்டு அவையெல்லாம் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்னொன்று, குண்டர் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். குண்டர் சட்டத்தைப் பொறுத்த அளவில் தமிழக அரசால், 5 பேர்மீது குண்டர் சட்டம் போடப்பட்டு, அவர்கள் எல்லாம் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 1984 ஆம் ஆண்டிலிருந்து சிலர் ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள். அதிலும் இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தெற்குப் பகுதியிலே இருப்பவர்கள் சிலர் 6 ஆண்[illegible] இதுபோன்ற கடத்தலிலே ஈடுபட்டு அவர்[illegible]

228103
Chennai-600 009

[திரு. எ.வ. வேலு] [2008 மார்ச் 28

செய்யப்பட முடியாத நிலையிலே இருந்தார்கள். ஆனால், இந்த அரசாங்கம் சென்ற மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குத் தனிக் கவனம் செலுத்தி, எங்கள் துறையின் சார்பாக ஒரு ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, இந்தச் சட்டம் கடுமையாக பாய்ச்சப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதனுடைய விளைவாக 6 ஆண்டு காலம், 7 ஆண்டு காலம் தப்பித்திருந்த தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்த பழனிச் செல்வம், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கணேஷ் ராஜன், பட்டுக்கோட்டையைச் சேர்ந்த தேவதாஸ், மாதா டிரேடர்ஸ்; அதேபோல தருமபுரி மாவட்டம் மொரப்பூரை சேர்ந்த செல்வராஜு, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பார்த்திபனூர் அபுதகீர், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கணேசன்; என். பாபு, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர், இராமநாதபுரத்தை சேர்ந்த பசி கணேசன் இவர்களை எல்லாம், கிட்டத்தட்ட 13 பேர்களை நாங்கள் அடையாளம் கண்டுபிடித்து 8 பேர்களை, இந்த ஒரு மாத காலத்திலே கைது செய்து உள்ளே அனுப்பியிருக்கிறோம். இவர்கள் எல்லாம் பெரும் திருடர்களாக இருந்து 6 ஆண்டு காலம் ஏமாற்றிக் கொண்டிருந்தவர்கள். எனவே, முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கைது மீண்டும் தொடர்ந்து—இந்தத் துறையைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டு மக்கள் ஏழையெளிய மக்கள் எப்போதும் பசியாறி, உணவோடு இருக்க வேண்டும் என்று முதலமைச்சருடைய கடமையை மிக வேகமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது இந்த உணவுத் துறை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி. (குறுக்கீடு) திரு. மணி, என்ன?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கேள்வி. சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே, நுகர்வோர். . .



2008 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, என்ன இது? அவர் பேசிக் கொண்டிருக்கிறபோது, நீங்கள் இடையிலே பேசுகிறீர்களே? (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்கிற நேரத்தில் நுகர்வோர், தேவையானால் 20 கிலோ கேட்டால் வழங்கப்படும், 10 கிலோ கேட்டாலும் வழங்கப்படும், 15 கிலோ கேட்டாலும் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், உண்மை நிலை அதுவல்ல. நுகர்வோர் 20 கிலோ கேட்டாலும் வழங்கப்படுவது இல்லை. பல இடங்களில், நாங்கள் சென்ற மாவட்டங்களில், சென்ற இடங்களில் 20 கிலோ வழங்கப்படுவதில்லை என்ற குறையை பரவலாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மேல் அதிகாரிகளிடத்திலே, மாவட்ட வழங்கல் துறை அலுவலர்களிடத்திலே கேட்டால் அவர்கள் சொல்வது, எங்கள் மாவட்டத்திற்கு 50 விழுக்காடு, எங்கள் மாவட்டத்திற்கு 60 விழுக்காடு என்று பிரித்து வழங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, நான் உங்களிடத்திலே அறிய விரும்புவது, விரும்புகிற மாவட்டங்களில், விரும்புகிற பகுதிகளுக்கு 20 கிலோ வழங்குங்கள். விரும்பாத பகுதிகளில் குறைத்து வழங்குங்கள். ஆகவே, மக்கள் எங்கெங்கெல்லாம் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்களோ அவர்களுக்குத் தேவையான அளவுக்கு 20 கிலோ வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் அவருக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அரசைப் பொறுத்த அளவுக்கு அனைத்து அட்டைகளுக்குமுரிய அரிசியைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம், ஒன்று. அவர் சொல்வது—தருமபுரி போன்ற மாவட்டங்களிலே இதுபோன்ற புகார்கள் வருகின்றன என்று நான்கூட பத்திரிகைகளில் படித்து, சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் அதிகாரி, இணைப் பதிவாளரை எல்லாம் கூப்பிட்டுப் பேசி இருக்கிறேன். அதனால்தான் நான் சொல்ல விரும்புகிறேன், சட்டமன்ற உறுப்பினர் என்பதல்ல, நேரடியாக நுகர்வோர்களே தங்களுக்கு அரிசி கொடுக்கவில்லை என்று சொன்னால், அந்தந்த மாவட்டங்களிலே கட்டுப்பாட்டு அறை என்று சொல்லி ஒவ்வொரு பத்திரிகையிலும் நாங்கள் அதனுடைய எண்ணை எல்லாம்கூட கொடுத்திருக்கிறோம்.

Fax கொடுப்பதற்கு அந்த எண்ணைக் கொடுத்திருக்கிறோம். மாநில அளவில் அமைச்சராக இருக்கின்ற என்னுடைய

அலுவலகத்திலே இதற்கென்று ஒரு நேர்முக உதவியாளரை காலையில் 10 மணியிலிருந்து இரவு 8 மணி வரை இருக்கும்படியாக தனியாக நியமித்திருக்கிறோம். புகார் வந்திருக்கின்றது. அவற்றையெல்லாம் என்னுடைய மானியக் கோரிக்கையிலே விளக்கமாகச் சொல்லவிருக்கின்றேன். எனவே யார் புகார் சொன்னாலும், பயனாளிகள் புகார் செய்தால், அந்தந்தக் கடைகளிலே நுகர்வோருக்கு 20 கிலோ அரிசி கட்டாயம் தருவதற்கு இந்த அரசு 24 மணி நேரத்திலே உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடிக்கவேண்டும்.

**திரு. தி. இராமசாமி:** மாவட்டந்தோறும் விவசாயிகளுடைய குறை தீர்க்கும் நாள் நடத்துவதைப்போன்று, ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு மாவட்டத்திலும் நுகர்வோர் குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சியை நடத்தவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பதநீர் இறக்குகின்ற தொழிலாளர்கள் கருவிகளை வாங்குவதற்கு, அவர்களுக்கு 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. உண்மையிலேயே நாங்கள் இதை வரவேற்கின்றோம். ஆனால், பதநீர் தொழிலாளர்கள் அந்தக் கருவிகளோடு பனைத் தொழில் செய்யச் சென்றால், அவர்கள் கட்டியிருக்கின்ற முட்டியை உடைப்பது, பதநீரை, கள் என்று சொல்லி அவர்கள்மீது பொய்யான வழக்கைப் போடுவது போன்ற சம்பவங்கள் தென்மாவட்டங்களில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

அதேபோல இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்கள் விருதுநகர் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரிக்கான அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தோம். அது இந்த அறிக்கையில் இடம் பெறவில்லை. இருந்தாலும் முதலமைச்சர் அவர்களுடைய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்கார் சி. நிக்லி (குறுக்கீடு)

**திரு. தி. இராமசாமி:** ஒரே ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்கிறேன். எங்கள் விருதுநகர் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியைத் தொடங்கவேண்டும்.



அதேபோன்று சென்ற நிதிநிலை அறிக்கையில் விருதுநகரில் சிறப்புப் பொருளாதார மண்டலம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் அது தொடங்கப்படவில்லை.

அதேபோல எங்கள் விருதுநகர் மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி ஒன்றை உடனடியாகத் தொடங்கவேண்டும்.

எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு ஒன்றியத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி. You are given 10 minutes. You have to restrict within 10 minutes.

***DR. OSCAR C. NIGLI :** I shall try my best. Honourable Speaker Sir, this is my third Budget Speech on the third Budget of the Thirteenth Legislative Assembly with the Government led by the fifth-term Chief Minister, who has put in 50 years as a Legislator. (Thumping of desks) We all know that it is history, not only in Tamil Nadu, but also in rest of the world, to have a legislator who has completed 50 years for the cause of humanity, (Thumping of desks) a man who has sacrificed himself for Tamil language, for Tamil culture. He is a catamaran in which all people ride today. He has taken with him the Scheduled Castes, the Scheduled Tribes, the most backward classes, backward classes and most importantly the people whom I represent, the minorities.

Today, the whole of Tamil Nadu stands up to respect the Budget, 2008-2009. It is people-friendly and has been presented with a view to wipe out poverty from Tamil Nadu and make Tamil Nadu the fastest growing state in the country today. By 2011, i.e. by the time the next elections come, Tamil Nadu will be one of the most powerful States economically, industrially and agriculturally. There is a saying in Sanskrit which says "Yatha Raja, thatha Praja" which means "How the King is, so are his subjects". If the Chief Minister is good, the people will be good. If you have a bad Chief Minister, the people suffer.

Today, Tamil Nadu has set an example in agriculture. We had waiver of Rs. 7,000 crores of loans which has been compensated to the co-operatives and crop loans for Rs.1,250 crores have been given; the rates of interest have been reduced. Crop insurance, labour welfare board, distribution of lands to

landless are all things which no Government has done for any farmer so far since independence. Everybody knows that even the Government of India has emulated the principle followed by our own Chief Minister, of crop loan waiver. In this Budget, the Union Government had announced a crop loan waiver, in which loan burden has been reduced or taken away.

It is a matter of pride today that we have with us a Chief Minister, who is a great administrator, a thinker, a writer, an artist, a philosopher, a social worker and above all a man for others, whom the rest of India looks up to, not only as the senior-most Chief Minister in India, but also as the most performing Chief Minister in the country today.

பிற்பகல் 12-35

In fact the D.M.K. Government has been saying 'செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்'. (Thumping of desks) I think that has become true. Today, I think we have gone faster. Today, the same Government can say 'சொல்லாததையும் செய்வோம்'. After that, the next slogan will be 'எதிர்பார்க்காததையும் செய்வோம்'. This is the state of things. What has not been promised is also being given today.

I now come to irrigation and flood control. We have seen what is being done for irrigation. Regarding flood control, we saw recently the amount of work done by our Local Administration Minister who went personally and looked around and of course it was personally supervised by the Chief Minister. Action was taken on a war footing today with concern for the people of Tamil Nadu.

Next, is the supply of rice at Rs. 2 a kg. Many people laughed at this Rs. 2 per kg. rice proposition. They asked, "How is it possible? Is it possible? Is it feasible?" Today what has happened is that the other States in other parts of the country are now trying to follow the Rs. 2 per kg. rice scheme. Probably many people could digest the Rs. 2.00 per kg. rice but they could not digest the Rs.2 per kg. rice scheme; that was the problem.

It has also to be seen that, way back in 1974 it was our Chief Minister who introduced the Slum Clearance Board and today what has happened is, many other States are following the Slum Clearance board example today and this is some thing which they are able to follow keeping Tamil Nadu as an example.



Next is Law and Order. Today, we often hear people speak—if a few murders take place or anything like that, immediately people say that the maintenance of law and order has come down. May I ask the same friends, are there no deaths, are there no murders in any part of the country? (Thumping of desks). It happens in all the States but I do not know why it is pointed out only here. I very often hear one word or two words being used. One word is 'dismiss' and the other word is 'minority' or 'minority Government'. Now if anybody reads the Constitution, it is very clear. The moment the Government is a minority Government, it cannot be in existence. A Government is a minority Government, if it fails to pass the test on the floor of the House. We had two No Confidence Motions against the Speaker which were defeated miserably which indicates that this Government cannot be a minority Government. (Thumping of desks) So, people who use the word 'Minority Government' are unfortunately doing so without understanding the Constitution. (Thumping of desks)

The other thing is, we had three Police Commissions so far, ever since independence. But I wonder why all these three Police Commissions were only constituted by the D.M.K. Government. (Thumping of desks) This means our Chief Minister is concerned about the welfare of the Police force and not just about chasing of few Veerappans and just giving out property and money to people for having killed Veerappan. That is not what we are looking for. We are looking for Tamil Nadu as a welfare State and not as a Police State. That is the difference that people have to understand. We have to look at this as a Welfare State.

Next thing is Road Safety. One of the things dealt in the Budget is about road safety. It has been pointed out that there have been so many road deaths. We all know that with the increase in two wheelers, numbering 18 lakhs all over, this is causing more road deaths. But what the good thing the Government has done now is, they have come up with a large number of flyovers. As all of us know, that there are even now three flyovers are coming in Chennai. I am referring to three special flyovers which are called Butterfly flyovers with eight-lane traffic system which will ease traffic to a large extent in Chennai.

I now come to school education which is something very important to me. I am trying my best to keep up time, Sir. In the last two years, since this Government came to power in 2006, there has been a huge improvement

in school education. We have a very good and very dynamic School Education Minister and today we have Activity-Based Learning system (ABL). In fact as a Member of the Estimates Committee, myself and Honble Member Mr. Mullaivendan, and so many others travelled to various schools and we found that this Activity-Based Learning is doing extremely well in many of the rural schools and the Government of India's scheme called 'SUCCESS' has again been aided by our own State Government. The allocation for school education is Rs.7,852 crores. I would request that this allocation be increased further.

*பிற்பகல் 12-40*

I come to an important point which is about the Common Syllabus, i.e. "samachir kalvi", as everybody has been talking about. We all welcome Uniform Syllabus. But I would like to appeal to our Hon. Chief Minister and to our Hon. School Education Minister to proceed very cautiously on this, with regard to maintaining the identity of our School Boards. As all of us know, Tamil Nadu has a unique history for more than a hundred years of having the Anglo-Indian School Board, the Matric Board as well as the S.S.L.C. Board, finally. What I would appeal to our Hon. Chief Minister is to retain the identity of these Boards, even if we change our syllabus. You please maintain the identity of these Boards because there is a great concern among the minorities as to what will happen to the identity of their schools if these Boards are going to be removed. (The gong was sounded) You just give me two minutes, Sir. I will finish. I promise you.

With regard to minorities--I am still talking about the minorities — the minorities would like to thank our Hon. Chief Minister and the Government for having brought in the 3.5 per cent reservation for Christians and Muslims. (Thumping of desks) This is something which has never happened before and it has never been done anywhere in the country. In Andhra Pradesh, they tried it for the Muslims. They brought in reservation, but unfortunately they brought it outside the 69% reservation and so the Court struck it down. The Government of Tamil Nadu studied this carefully and brought it in within the 69% reservation and today the Christian Community and the Muslim Community are grateful to the Hon. Chief Minister for having introduced the 3.5 per cent reservation. (Thumping of desks) (The gong was sounded) And the last, I am just winding up Sir.



**HON. SPEAKER:** No, No, you please wind up your speech.

**DR. OSCAR C. NIGLI:** Sir, just English language is the last thing, before I go on to that one more thing and I will wind up. Allow me to finish, please.

Like we have the Railway Department in the Central Government, the one Department I found in the State Government having a great turnover today is the Electricity Department. Today it has a production of 17,000 MW and one of the reasons why we have a lot of people investing in Tamil Nadu is because of the availability of electricity. People talk about power-cut, about power failure. Power-cut is different, we do not have power-cut; we may have power failure; but we have so many people who are investing in our country unlike the neighbouring States today, where there is so much of problem with power.

Lastly it is...

**HON. SPEAKER:** No, No, it is enough. Please Sit down.

**DR. OSCAR C. NIGLI:** Sir, regarding English language Sir, I just want to say one thing.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.*

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு (குறுக்கீடு) நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தின்மீது.*

**HON. SPEAKER:** Thiru Sadhan Thirumalaikumar, please wait.

**DR. OSCAR C. NIGLI:** Lastly Sir, one thing about the English Language and I will wind up. I would like to appreciate and commend the importance that we have been giving to the English language, both spoken English as well as in administration. Nehru's assurance was that English would continue as a language as long as the non-Hindi speaking people wanted it. So, just as how we had the Nehru's assurance there, I am sure, we have in Tamil Nadu the Kalaignar Assurance which gives us the identity of the English language today, keeping in mind the importance of English language. As Rajaji said, English is Saraswathi's gift to India. I thank you, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுபோல் தேசிய நீரியல் வேளாண்மைத் துறையினால் 1990 ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்ட அச்சன்கோவில்-பம்பையாறு-வைப்பாறு இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுகிறேன். ஏற்கெனவே சொக்கம்பட்டி கிராமத்தில் அமையவிருந்த வறட்டாறு குப்பத்தாறு நீர்த்தேக்கத் திட்டம் அமைக்கும் பணி 1992-ல் அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டு நீதிமன்ற வழக்கினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது நீதிமன்றத் தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக வந்துள்ளது. இத்திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்த இயற்கை விவசாயம் செய்ய முன்வரும் வேளாண்மைப் பெருமக்களுக்கு எளிய முறையில் கடன் கிடைத்திடவும், மானியம் கொடுத்தும் ஊக்கப்படுத்த வேண்டுகிறேன். எங்கள் தொகுதியில் சிலர் இயற்கை விவசாயம் செய்து குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெற்று நல்ல உணவுப் பொருட்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

போக்குவரத்து பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு நீண்டதூரம் போய் வரும் பேருந்துகளில் வயர்லஸ் கருவி பொருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அரசுப் பள்ளிகளின் உள் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி, தனியார் பள்ளிகளுக்கு இணையாக இயங்க வழிவகை செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியப் பெருமக்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பெரும் விபத்துகளில் அதிக எண்ணிக்கையிலானோர் ஒரே நேரத்தில் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள் கொண்ட சிறப்பு மையம் ஒன்று, மைய அரசின் நிதி உதவியுடன் சென்னையில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுபோன்ற சிறப்பு மையங்கள் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் அமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் பற்றாக்குறையைச் சமாளிக்க பெரிய தொழிற்சாலைகளுக்கு மின் உபயோக நேரக் கட்டுப்பாடு அமல்படுத்தப்படுகிறது. சிறு விசைத்தறித் தொழிலுக்கும் இந்தக் கட்டுப்பாடு மின் வாரியத்தால் அமல்படுத்தப்படுகிறது. இதனால் சிறு விசைத்தறித் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டமும் நஷ்டமும் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால், சிறு விசைத்தறி நெசவாளர்களின் நலன் காக்க மின் உபயோக நேரக் கட்டுப்பாட்டை நீக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போதுள்ள விதிகளின்படி, நகராட்சிகளில் ஒரு தெரு மற்றும் அதில் உள்ள குடியிருப்புகள் அங்கீகாரம் பெறவேண்டுமென்றால் தெருவின் அகலம் 16 அடி இருக்க வேண்டும் என்று இருக்கிறது. சில இடங்களில் கட்டி இருக்கின்ற வீட்டுக்கு நகராட்சி நிர்வாகம் கட்டடம் கட்டுவதற்கு plan approval வழங்கி இருக்கின்றார்கள். அவர்கள் plan approval பெற்று கட்டடம் கட்டுவதற்கு வங்கியில் கடனும் பெற்றிருக்கிறார்கள். மின்சார இணைப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சொத்து வரியும் வசூலிக்கப்பட்டு இருக்கிறது. குடிநீர் இணைப்புக்கு முன் வைப்புத் தொகையும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குடிநீர் இணைப்பு கொடுக்க மறுக்கிறார்கள். குடியிருப்பவர்கள் கேட்டால் உங்கள் தெருவிற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை, தெருவின் அகலம் குறைவாக இருக்கிறது என்று சொல்லி அடிப்படை வசதிகளான வாறுகால், சிமெண்ட் தளம், தார்ச்சாலை போன்ற வசதிகளைச் செய்து தர மறுக்கிறார்கள். ஆகவே கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் அனைத்துக்கும் நிபந்தனையின்றி அடிப்படை வசதிகளைச் செய்திட வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எங்கள் தொகுதியில் கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவு அலுவலகத்தில் நடக்கும் பத்திரப் பதிவில் தவறான வழிகாட்டு

மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்தச் சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட மிகச் சிறிய கிராமத்தில் உள்ள விவசாய நிலங்களின் வழிகாட்டு மதிப்பு மிக அதிகமாக இருக்கிறது. உதாரணமாக, குவளைக்கன்னி என்ற ஒரு சிறிய கிராமத்தில் சர்வே எண் 70/1, 314/2-ல் உள்ள நிலத்தின் மதிப்பு முன்பு ஏக்கருக்கு ரூ.8,000 ஆக இருந்தது. தற்போது ரூ.1,67,000 ஆக இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் உள்ள பெருமாள்பட்டி என்ற கிராமத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ.8,000 ஆக இருந்த மதிப்பு தற்போது ரூ.2,77,500 என்று இருக்கிறது. தென்மலைக் கிராமத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ.14,000 ஆக இருந்த மதிப்பு தற்போது ரூ.2,98,305 ஆக இருக்கிறது.

இதுபோன்று, இதற்குட்பட்ட 70 கிராமங்களிலும் இந்த வழிகாட்டு மதிப்பு தவறுதலாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகியும், பேசியும் பல்வேறு போராட்டங்களையும் நடத்தி இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரப்பில் ஒரு எக்டேருக்கு உள்ள வழிகாட்டு மதிப்பு ஒரு ஏக்கருக்கு என தவறுதலாகப் பதிவு செய்யப்பட்டுவிட்டது என்றும், கூடுதலாக பத்திரம் வாங்க வைத்தது தவறு என்றும், இனிவருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடக்காது எனவும் கூறினார்கள். இதுவரை அந்தத் தவறு சரிசெய்யப்படவில்லை. இதுபோன்ற நிலை கரூர் மாவட்டத்திலும் இருந்தது. மாண்புமிகு அமைச்சர்மூலம் அங்கே தீர்வு கிடைத்திருக்கின்றது. ஆகவே, எங்கள் தொகுதியில் உள்ள கரிவலம்வந்தநல்லூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் இருக்கின்ற அந்தக் குறையைத் தீர்த்திட நான் கேட்டுக்கொள்கின்றேன்.

வாசுதேவநல்லூர் தொகுதி, வாழமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் ஏற்படுத்த வேண்டும். இந்தத் திட்டம் நிறைவேறினால் வீணாகும் தண்ணீர் சேமிக்கப்படும், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களின் பாசனத்திற்கும், புளியங்குடி நகர மக்களின் குடிநீருக்கும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் உள்ள தேவிப்பட்டினம் மற்றும் விசுவநாதப்பேரி, பெரியகுளம் வழியாக செல்கின்ற தேவியாற்றில் இருந்து பெரியகுளத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெருக்கி அதைச் சார்ந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பயனடைய ஆவன செய்ய வேண்டுகிறேன்.



சுமார் 135 குளங்கள் எங்கள் தொகுதியில் நீண்டகாலமாக தூர்வாராமல் உள்ளதால் குறைந்த அளவே தண்ணீர் பெருகுகிறது. ஆகவே, அந்தக் குளங்களையும், கால்வாய்களையும் தூர்வார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

வாசுதேவநல்லூர் பகுதியில் பல ஏக்கர் நிலங்களைக் குத்தகை எடுத்து, பல விவசாயிகள் ஒன்று சேர்ந்து வெற்றிலைக் கொடிக்கால் ஏற்படுத்துவது வழக்கம். இதுபோல் ஏற்படுத்தப்பட்ட கொடிக்கால்களில் பெரும்பாலானவை கடந்த தினங்களில் பெய்த பெரு மழையால் மிகவும் சேதத்திற்கு உள்ளாகிவிட்டன. அவர்களுக்கு பல இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு வெற்றிலைக் கொடிக்கால் ஒரு ஏக்கரில் ஏற்படுத்த வேண்டுமென்றால் சுமார் 50,000 ரூபாய் செலவு ஆகும். இந்த நிலையில் கொடிக்கால் விவசாயிகளுக்கு கூடுதலாக இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் விளைகின்ற மொத்த எலுமிச்சை விளைச்சலில் 75 விழுக்காடு வாசுதேவநல்லூர் தொகுதியில் விளைகிறது. எலுமிச்சம் பழம் விற்பனைக்கு புளியங்குடி நகரில் பெரிய சந்தை ஒன்று இருக்கிறது. அங்கிருந்து வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு எலுமிச்சம்பழம் அனுப்பப்படுகிறது. இப்பகுதியில் சுமார் 10,000 ஏக்கர் நிலப்பரப்பில் எலுமிச்சை பயிரிடப்படுகிறது. இதனால் இப்பகுதியில் உள்ள விவசாயப் பெருமக்களுக்கு நிகர இலாபமாக வருடத்திற்கு சுமார் 25 கோடி ரூபாய் கிடைக்கிறது. எலுமிச்சம்பழத்தின் விலையில் ஏற்றம் இறக்கம் இருக்கும். விலை குறைவான நாட்களில் பழங்களைச் சேமித்துவைக்க குளிர்ப்பதன நிலையம்—cold storage ஒன்று இந்நகருக்கு அருகில் அமைத்திட வேண்டுகிறேன். எலுமிச்சம்பழத்திலிருந்து மர்மலேட் என்கின்ற ஜெல்லி எடுப்பதற்கான ஒரு ஆலையை இப்பகுதியில் நிறுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புளியங்குடி மற்றும் சுற்று வட்டங்களில் பூக்கள் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்படுகின்றன. குறிப்பாக மல்லிகை, முல்லை, கனகாம்பரம், ரோஜா போன்ற பூச்செடிகள் பயிரிடப்படுகின்றன. இந்தப் பூக்களிலிருந்து சென்ட் தயாரிக்க இப்பகுதியில் ஒரு சென்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்][2008 மார்ச் 28

அறிவிக்கப்பட்ட வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தி, தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 30,000 மக்கள் கொண்ட கிராமங்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்று இருந்த கொள்கைப்படி தென்மலை கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கரிவலம்வந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம்–கொல்லம் தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் உள்ள இராஜபாளையம் மற்றும் தென்காசி அரசு மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கிகள் உள்ளன. இரண்டுக்கும் இடைப்பட்ட தூரம் 80 கி.மீ. (மணியடிக்கப்பெற்றது) One minute Sir, ஆதலால் சிவகிரி அரசு மருத்துவமனையிலும், புளியங்குடி அரசு மருத்துவமனையிலும் இரத்த சேமிப்பு வங்கி அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புளியங்குடி அரசு மருத்துவமனையில் தினசரி ஆபரேஷன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குத் தேவையான ஆபரேஷன் தியேட்டர் அங்கே இல்லை. தகுந்த ஆபரேஷன் தியேட்டர் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூர் பேரூராட்சியை முன்மாதிரி நகர் திட்டத்தில் எடுத்திருக்கிறார்கள். ஆனால் வேலை தாமதம் ஆகின்றது. விரைவுபடுத்த வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் தென் இந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படும் பாளையங்கோட்டைக்கு அடுத்தபடியாக புளியங்குடி நகரத்தில் 50–க்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. இவற்றில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும் இருக்கின்றன. இப்பள்ளிகளின் கட்டடங்கள் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை. அவை பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. கடந்த தினங்களில் பெய்த மழையால் மிகவும் சேதமடைந்திருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) Sir, one minute.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** One minute Sir.



2008 மார்ச் 28]

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள். ஒரே வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** Sir, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று 3 முறை சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்மூலம் ரூ.20 இலட்சம் ஒரு ஊராட்சிக்கு ஒதுக்கியிருக்கின்றார்கள். பல ஊராட்சிகளில் நிறைய கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, நிறைய கிராமங்கள் உள்ள ஊராட்சிக்கு அந்த தொகையைக் கூடுதலாக்கித் தர வேண்டும். நெல்லை மாவட்டத்தின் அனைத்து கல் குவாரிகளும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து 3-வது முறையாக நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் கலந்து கொண்டு விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கருத்தைத் தெரிவிப்பதற்கு அனுமதியளித்த உங்களுக்கு, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து வரி இல்லாத நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தது மட்டுமல்லாமல், முதல்முறையாக வருவாய் உபரி கொண்ட ஒரு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து மிகப்பெரிய சாதனையை நிகழ்த்தியிருக்கின்ற மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியப் பெருந்தகை அவர்களை விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கை விடுதலைச் சிறுத்தைகளைப் பொறுத்த அளவிலே எங்களையெல்லாம் கடனாளிகளாக ஆக்கியிருக்கிறது, அதாவது நன்றிக்கடன்பட்டவர்களாக ஆக்கியிருக்கிறது. நாங்கள் முன் வைத்த கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றி ஒடுக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட, ஆதி திராவிட மக்களுடைய வாழ்விலே மிகப்பெரிய மாற்றத்தை, நன்மையைச் செய்திருக்கின்ற அறிவிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே இதற்கு நாங்கள் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது ஈடு செய்ய முடியாத ஒன்றாகவே இருக்கும்.

பிற்பகல் 12-55

குறிப்பாக, தாட்கோ கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நாங்கள் இங்கே கோரிக்கை விடுத்தோம். இதற்காக 43 சட்டமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்துப் பெற்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கோரிக்கை மனு ஒன்றையும் நாங்கள் அளித்திருந்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்று இன்றைக்கு 5½ கோடி ரூபாய் அளவுக்கு தாட்கோ மூலமாக விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்து மிகப்பெரிய நன்மையை இந்த நிதிநிலை அறிக்கையிலே நமது அரசு செய்திருக்கின்றது. எங்களுடைய கோரிக்கை, அந்தக் கடன்கள் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்பதாகும். முதல்வர் அவர்கள் இந்த அறிவிப்பைச் செய்த அதே கருணை உள்ளத்தோடு இந்தக் கோரிக்கையையும் பரிசீலித்து தாட்கோ கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, தொகுப்பு வீடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாயாக நிதியை உயர்த்தித் தர வேண்டுமென்று இங்கே எங்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் வலியுறுத்தினோம். நெல்லையிலே மண்ணுரிமை மாநாட்டை நடத்தி, மாண்புமிகு முதல்வர் அவர்களையும் அழைத்து, அந்தக் கோரிக்கையை நாங்கள் முன்வைத்தோம். முதல்வர் அவர்களும் ஒருசில மாதங்களுக்கு முன்னாலே டெல்லியிலே நடந்த தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்திலே கலந்துகொண்டு பேசியபோது இந்தக் கோரிக்கையை முன்வைத்து அங்கே பேசினார்கள். அதனடிப்படையிலே மத்திய அரசின் ஒதுக்கீடு ஒரு வீட்டிற்கு 10,000 ரூபாய் உயர்த்தப்பட்டிருப்பதோடு மாநில அரசின் நிதியும் 8,000 ரூபாய் உயர்த்தப்பட்டு இன்றைக்கு 55,000 ரூபாயாக அந்தத் தொகுப்பு வீடுகளுக்கான நிதி உயர்த்தப்பட்டிருக்கின்றது. அது அந்த ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையிலே மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஓர் அறிவிப்பாகும். இதற்காக விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, சிதம்பரத்திலே தமிழிலே பாடி பல நூறு ஆண்டுகாலமாக அங்கேயிருந்த ஒரு தீண்டாமை உணர்வை, ஒரு பாரபட்சப் போக்கை மாற்றியமைத்த அந்த சிவனடியார் ஆறுமுகசாமி அவர்கள் வறுமை நிலையிலே இருக்கிறார்கள், அவருக்கு உதவ வேண்டுமென்று நான் கோரிக்கை விடுத்ததை ஏற்று, தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு மாதம் 3,000 ரூபாய் அந்தச் சிவனடியாருக்கு



வழங்க உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது இந்தச் சமூகத்திலே புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்ற நரிக்குறவ மக்களுக்கு ஒரு நல வாரியம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கோரினேன். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு நரிக்குறவர்களுக்கும் நல வாரியம் என்கின்ற அறிவிப்பு இந்த பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காகவும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுப் பணியாளர்களுக்காக நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவிப்புச் செய்து சாதனை படைத்த அரசு நம்முடைய அரசு. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே நாம் இந்த அறிவிப்பைச் செய்தோம். ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னதாக அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான அறிவிப்பும் தொழிலாளர் நலத் துறையால் வெளியிடப்பட்டது. ஆனால், ஓராண்டு ஆகியும் அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அருகிலே இருக்கிற கர்நாடக மாநிலத்திலேயும், ஆந்திர மாநிலத்திலேயும் இதற்கான அறிவிப்புக்கள் செய்யப்பட்டுவிட்டன. ஆந்திர மாநிலத்தை எடுத்துக்கொண்டால், ஒரு மணி நேரத்திற்கு 12½ ரூபாய் என்று நிர்ணயித்து, ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்தால் ஒரு மாதத்திற்கு 4 நாட்கள் விடுமுறை என்பதை உள்ளடக்கி மாத ஊதியம் 2,600 ரூபாயாக நிர்ணயித்திருக்கிறார்கள். அதைப்போல, நம்முடைய அரசும் வீட்டுப் பணியாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை உடனடியாக நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு நம்முடைய உறுப்பினர்கள் பெரும்பாலும் கவலை தெரிவித்த விஷயம் பயிர்ப் பாதுகாப்புப் பற்றிய விஷயம் ஆகும். பெருமழையினாலே பயிர்களெல்லாம் அழிந்து மிகப்பெரிய சேதத்தை விவசாயப் பெருங்குடி மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் கொடுக்கின்ற இழப்பீடு போதுமானதாக இல்லை என்கின்ற குறை இருக்கிறது. இவற்றை மாற்ற வேண்டுமென்று சொன்னால் இங்கே இருக்கின்ற பயிர்கள் அனைத்துக்கும் இன்சூரன்ஸ் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால்தான் சாத்தியம் ஆகும்.

பிற்பகல் 1-00

நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே இதற்காக 25 இலட்சம் விவசாயிகளை பதிவு செய்வதற்கு இலக்காகக்கொண்டு 40 கோடி ரூபாய் இதற்கான Premium-ஆக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே இந்தத் திட்டம் நடைமுறையிலே இருந்தாலும்கூட, அந்த Premium என்பதை சிறு, குறு விவசாயிகளுக்கு முழுமையாக அரசே செலுத்துகிறது என்றாலும்கூட அது உரிய காலத்தில் செலுத்தப்படாத காரணத்தினாலே பல விவசாயிகள் தங்களுடைய Insurance தொகையைப் பெறமுடியாத நிலையிலும் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு அண்டையிலே இருக்கின்ற மாநிலங்களான கர்நாடகாவிலே, ஆந்திராவிலே, மகாராஷ்டிராவிலே Agricultural Insurance Corporation-ன் கீழே பதிவு செய்துகொண்டு இருக்கின்ற விவசாயிகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டு நோக்குவோமானால் அவற்றில் பத்தில் ஒன்றுகூட தமிழக விவசாயிகள் பதிவு செய்துகொள்ளவில்லை. இந்தக் குறையைப் போக்கும் விதமாக இப்போது தமிழ்நாட்டிலே பயிரிடப்படுகின்ற அனைத்து பயிர்களுக்கும் Insurance திட்டத்தை அமல்படுத்தவேண்டும். சிறு, குறு விவசாயிகளுக்கு அதற்கான Premium தொகையை அரசே செலுத்த முன்வரவேண்டும் என்று உங்கள்வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அயல்நாடுகளிலே நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் சென்று வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்கின்ற இடங்களிலே நேரிடுகின்ற தவறுகள் காரணமாக அவர்கள் அங்கே குற்றவாளிகளாக ஆக்கப்பட்டு அயல்நாட்டு சிறைகளிலே ஏறத்தாழ 7,000 இந்தியர்கள் சிறைப்பட்டு இருக்கின்றார்கள். அதிலே பெரும்பகுதி தமிழர்களாக இருக்கின்றார்கள். அரபு நாடுகளிலே, மாலத்தீவு போன்ற இடங்களிலே இப்படிச் சிறையிலே வாழ்கின்ற தமிழர்கள் ஏராளமானபேர் இருக்கின்றார்கள். இலங்கையை எடுத்துக்கொண்டால் தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 பேர் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக அங்கே சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சிறைப்பட்டவர்களை கேரளா மாநிலமும், ஆந்திர மாநிலமும் அந்த அரசுகளிடம் பேசி தங்களுடைய மாநிலத்திற்கு அழைத்துவந்து அவர்களை இங்கே சிறையிலே அடைத்து குற்ற விசாரணையை மேற்கொண்டிருக்கின்றன. அப்படி இலங்கைச் சிறையிலே வாடும்



தமிழ்நாட்டைச் சேர்ந்த அந்த 40 பேரையும் தமிழக அரசு இலங்கை அரசோடு மத்திய அரசுமூலமாகப் பேசி அவர்களை இங்கே அழைத்துவந்து இங்கே குற்ற விசாரணைக்கு உட்படுத்தி அதன்மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உங்கள்வாயிலாக நான் வேண்டிக்கொள்கின்றேன்.

மத்திய பட்ஜெட்டிலே தேசிய வேலை உறுதித் திட்டமானது 596 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே நம்முடைய மாநிலத்திலே 10 மாவட்டங்களிலே இந்தத் திட்டம் நடைமுறையிலே இருக்கிறது. இந்தத் திட்டம் இன்றைக்கு அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுகின்ற நிலையிலே இந்தத் திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக குறைந்தபட்சக் கூலி இந்தத் திட்டத்திலே சரியாக செயல்படுத்தப்படுவதற்கு தமிழக அரசு விழிப்போடு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே குறைந்தபட்சக் கூலி ரூ.80 ஆக நம்முடைய அரசு நிர்ணயித்திருக்கின்றது. அந்தக் குறைந்தபட்சக் கூலி என்பது 80 ரூபாயிலிருந்து 120 ரூபாயாக உயர்த்தப்படவேண்டும் என்று விவசாயத் தொழிலாளர்கள் பல காலமாகக் கோரிவருகிறார்கள். அந்த குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் அடிப்படையிலே அந்தக் கூலியை மறு நிர்ணயம் செய்யக்கூடிய காலம் நெருங்கியிருக்கிறது. அந்த குறைந்தபட்சக் கூலியை 120 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், உட்காருங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** அதுபோலவே இன்றைக்குப் பல வாரியங்கள் அமைத்து மிகப்பெரிய சாதனையை நிகழ்த்திக்கொண்டிருக்கிற நம்முடைய அரசு, பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் இவர்களுடைய நலன்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாமே ஒரு தலைசிறந்த பத்திரிகையாளராக இருப்பவர். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார். *(குறுக்கீடு)* நேரமாகிவிட்டது. உட்காருங்கள். *(குறுக்கீடு)* நேரம் இல்லை. திரு. து. ரவிக்குமார், உட்காருங்கள். உரையை முடியுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** அனைவருக்கும் முன்னோடியான ஓர் எழுத்தாளர். எனவே பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களுடைய நலன்களைக் காக்கும் விதமாக அவர்களுக்கு இன்றைக்கு செயல்படுத்தப்படுகிற திட்டங்களையெல்லாம் ஒருங்கிணைத்து அவர்களுக்காக ஒரு நல வாரியம் ஒன்றையும் உருவாக்கித்தரவேண்டும் என்று கோரிக்கை வைத்து, கூடவே அர்ச்சகர்கள் ஆவதற்கான பயிற்சியிலே பெண்களையும் சேர்த்துக்கொள்வதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

*பிற்பகல் 1-05*

***திரு. பெ.சு. விஜயகுமார்:** 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்புத் தந்த காங்கிரசின் கண்கண்ட தெய்வமாய், கலங்கரை விளக்கமாய், இந்திய மக்களின் இதயத் துடிப்பாய், இந்தியாவை வழி நடத்தும் சாரதியாய், வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்புச் சட்டம் தந்த தங்கத் தலைவியாம், 60 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்து இந்திய விவசாயிகள் வாழ்வில் ஒளி ஏற்றிய தியாகத் தலைவி, பதவி ஆசை இல்லாத பார் போற்றும் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் ராஜீவின் மறு பதிப்பாம் ராகுல் காந்தி, அன்னை இந்திராவின் மறு பதிப்பாம் பிரியங்கா காந்தி அவர்களையும் வணங்குகின்றேன்.

ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலேயும் நம்பிக்கை இருந்தால் அன்பு இருக்கும்; அன்பு இருந்தால் அமைதி இருக்கும்; அமைதி இருந்தால் உண்மை இருக்கும்; உண்மை இருந்தால் உள்ளம் மகிழ்ச்சி இருக்கும்; உள்ளம் மகிழ்ச்சி இருந்தால் கடவுள் இருப்பார், இது ஆன்மீகம்; அல்லது கலைஞர் இருப்பார் இது நாத்திகம். (மேசையைத் தட்டும் ஒலி) காலக் கண்ணாடியாக விளங்கிக் கொண்டிருக்கிற தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களே, நாளைய தமிழகம் தளபதி அவர்களுக்கும், அவையை நடத்துகின்ற அவைத் தலைவர், துணைத் தலைவர் அனைவருக்கும், எனக்கு வாய்ப்புத் தந்த தலைவர் கிருஷ்ணசாமி அய்யா, வாசன், தலைவர் ஈ.வி.கே.எஸ்., மத்திய நிதி அமைச்சர், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் நைனா, அண்ணன் பீட்டர், ஞானசேகரன், அக்கா யசோதா, என் தொகுதி அமைச்சர்கள், ஆற்றல்மிகு ஆற்காட்டார், வீரத்தின் பிறப்பிடமாம் பொதுப் பணித் துறை அமைச்சர் அனைவரையும் வழி நடத்தி அன்போடு அரவணைத்துச் செல்லும் மாவட்ட அமைச்சர்—உணவுத் துறை அமைச்சர், அண்ணன் முன்னாள் அமைச்சர் பிச்சாண்டி, அண்ணன் காந்தி அனைவருக்கும் வணக்கம். அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம். மிகச் சிறந்த பட்ஜெட்டைத் தந்திருக்கும் பேராசிரியருக்கும் வணக்கம்.



தந்தை பெரியார் திருவுருவச் சிலையுடன், அவர் பெயரிலே 75 கோடி ரூபாயில் 95 சமத்துவபுரங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் தமிழகத்திற்குக் கல்விக் கண் தந்த கர்ம வீரர் காமராஜருடைய சிலையை (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா கல்விக் கூடங்களிலும் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கின்றேன்.

அதேபோல, சாத்தனூர் அணைக்கட்டு கட்டிய பெரும் தலைவர் காமராஜர். அவருக்கு அங்கே ஒரு சிலை நிறுவவேண்டும் என்று கடந்த ஆண்டே கேட்டேன். இந்த ஆண்டு கலைஞர் தருவார் என்று எண்ணுகிறேன். அதபோல என்னுடைய தொகுதியிலே செண்பகத்தோப்பு அணைக்கட்டைக் கட்டித் தந்த தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அங்கே ஒரு திருவுருவச் சிலை இருக்கவேண்டும்.

தமிழகத்தினுடைய முதுகெலும்பாக இருக்கிற விவசாயிகளுக்கு இந்த பட்ஜெட்டைப் பொறுத்தமட்டிலே சிறந்த பட்ஜெட்டாக இருந்துகொண்டிருக்கிறது. 7,000 கோடி ரூபாய் தள்ளுபடியிலே இதுவரையிலே 4,454 கோடி ரூபாய் அந்த வங்கிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிய பயிர்க் கடனாக இதுவரையிலே 3,927 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 7 சதவீத வட்டி 5 சதவீதமாக, இந்த ஆண்டு 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது மனமார வரவேற்கிறோம்.

அதேபோல நெல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு விலை 825 ரூபாய் என்று உயர்த்தி இருக்கின்ற கருணையைப் பாராட்டுகிறோம். அதேநேரத்திலே 1,000 ரூபாயாவது நிர்ணயிக்க வேண்டும் என்ற அன்பான கோரிக்கையை வைக்கின்றேன்.

பருவ மழை, வெள்ள பாதிப்பு 3 இலட்சத்து 60 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கிய இழப்பீட்டுத் தொகை 56,000 கோடி ரூபாய். அதேபோல 2.5 இலட்சம் விவசாயிகளுக்கு 50 சதம் அரசே செலுத்துகின்ற விவசாயப் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் வரவேற்கத்தக்கது. அதிலே 40 கோடி ரூபாயை இந்த அரசு செலவழித்து இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் காப்புத் திட்டம் 1 கோடியே 66 இலட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர், வரவேற்கிறோம்.

அதேபோல மத்திய அரசின் தேசிய வேளாண்மைத் திட்டம் மூலமாக நீரின் பயன்பாடு குறைவு, பலன் அதிகம் என்ற அந்தப் பண்ணை முறை விவசாயத்தை விரிவுபடுத்துகின்ற விதத்தை வரவேற்கின்றோம். நெல் நடவு, கரும்பு அறுவடை இயந்திரம் மற்றும் வேளாண் கருவிகளுக்கு 25 சதம் மானியம். வேளாண் வளர்ச்சித் திட்டத்திலே மானியம் கொடுக்கின்ற அந்தக் கருவிகளுக்கு மீதித் தொகை அதிகம் என்ற காரணத்தினாலே அந்த 75 சதவீத பணத்தை விவசாயிகள் வங்கியிலே கடன் பெறுகின்ற அந்தத் திட்டத்தையும் நீங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் 12 மாவட்டங்களிலே பயறு வகைப் பயிர்களுக்கான திட்டத்திலே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவு இணையம் ஆகியன மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையில் பயறு வகைகள் கொள்முதல் செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள்; அதை வரவேற்கிறோம். அதற்கான நடைமுறை வகுக்கப்பட்டிருக்கிறதா என்பதை மட்டும் பணிவோடு கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல தோட்டப் பயிர். தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், 20 மாவட்டங்களிலே செயல்படுத்தப்படுகிறது. 169 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எண்ணெய்ப் பனை உற்பத்தி பெருக்கத்திற்குண்டான அவசியத்தை உணர்ந்து இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. 10 பேர் கொண்ட 10,000 விவசாய சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்காக 10 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. இது முதற்கட்டம் என்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த முதற்கட்டத்



தொகையை முழு மானியமாகவே கொடுக்க வேண்டுமென்ற ஒரு பணிவான கோரிக்கையை வைக்கிறேன்.

நதிகள் இணைப்பு. முல்லைப் பெரியாறு, காவிரி நீர்ப் பங்கீடு, பாலாற்றில் அணை கட்டுதல், ஒகேனக்கல் திட்டம் போன்றவற்றில் உள்ள பல்வேறு இடைஞ்சல்களை மனதிலேகொண்டு, மாநிலத்திலே நதி நீர் இணைப்புத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். கடந்த வரலாற்றைப் பார்க்கின்றபோது, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் இந்தியா முழுமையும் நதிகளைத் தேசியமயமாக்கினால் ஒரு கோடி ரூபாய் தருகிறேன் என்று அறிவித்திருக்கிறார். எனவே இந்த மாநில நதிநீர்த் திட்ட இணைப்புக்கு அப்படிப்பட்ட நல்ல உள்ளங்களையும், தனியார்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். அதேநேரத்திலே இன்றைக்கு உலக அளவிலே சீனா, நதி நீர் இணைப்புத் திட்டத்தை முடித்திருக்கிறது. எனவே, தமிழகத்திலேயிருந்து ஒரு நிபுணர் குழு சென்று, அங்கே எப்படிச் செயல்படுத்தியிருக்கிறார்கள் என்ற விவரத்தை அரசு அறிந்து, அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இங்கே, தமிழ்நாட்டிலே சிறப்பாகச் செயல்படுத்துவீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். தமிழகத்திலே தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் செயல்படுத்துகின்ற இந்தத் திட்டம் இந்தியாவிற்கே முன்னோடியாக இருக்கும் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையைப் பொறுத்தமட்டிலே இப்பொழுது தமிழகம் எங்கும் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இரவு 10-30 மணிக்கு மேலே ஹோட்டல் கடை இருக்கக்கூடாது; டீ கடை இருக்கக் கூடாது என்ற கெடுபிடி அதிகமாக இருக்கிறது. இந்த நடவடிக்கையை மாற்ற வேண்டும். ஏனென்று சொன்னால் இரவிலே பயணிக்கின்ற பயணிகள், அவர்கள் டீ குடிப்பதற்குக்கூட, சிற்றுண்டி உண்பதற்குக்கூட இடைஞ்சலாக இருக்கின்ற காரணத்தால் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற சந்தவாசல் காவல் நிலையம், காவலர் குடியிருப்பு கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது, இன்னும் தொடங்கப்படவில்லை. அதைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல கணியம்பாடி, வேலூரிலேயிருந்து 15 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கக்கூடியது, அங்கே காவல்

நிலையம் இல்லை. அவர்கள் வேலூருக்குச் செல்ல வேண்டும்; தாலுகா காவல் நிலையத்திற்குச் செல்ல வேண்டும். எனவே அங்கே ஒரு காவல் நிலையம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரயில் ஓட இரண்டு தண்டவாளம் வேண்டும். அதேபோல, மத்திய அரசும், மாநில அரசும், அன்னை சோனியா காந்தி அவர்களும், கலைஞர் அவர்களும் இணைந்து செயல்படுகின்ற காரணத்தினாலே இன்றைக்கு கூடங்குளம் அணு மின் நிலையம் வந்தது; சென்னையில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் வந்தது; சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் வந்தது; வாகன சோதனை மையம் வந்தது; விமானிகள் ஓட்டுகின்ற பயிற்சி மையம் வந்தது. இப்படி நல்ல ஒற்றுமை இருக்கின்ற காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. எனவே 'பாராமுகமாக' என்ற வார்த்தை மறைந்துவிடும் என்று நம்புகின்றேன். சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் நிறைவேற தடைகளை உடைப்போம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

100 கோடி ரூபாயிலே சென்னையிலே நூலகம்; 100 பள்ளிகளில் கணித ஆய்வகம்; 100 பள்ளிகளுக்கு ஆய்வகச் சாதனம்; 100 பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள்; 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலக வசதி; 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலக வசதி; 100 கோடி ரூபாயிலே 11 ஆயிரம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் மேம்பாடு; (மணியடிக்கப்பெற்றது) 100 கோடி ஒதுக்கீடு தடுப்பணை திட்டத்திற்கு. இப்படி நூறு, நூறாக அடுக்கிக்கொண்டிருக்கின்ற இந்த பட்ஜெட்டை அறிவித்திருக்கிற தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் நூறாண்டுக்கும் மேல் வாழ வேண்டுமென்று (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த மன்றத்திலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடைசியாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி. (குறுக்கீடு) இல்லை, time இல்லை. No, No, திரு. விஜயகுமார், உட்காருங்கள்.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)



பிற்பகல் 1-15

**திரு. பெ.சு. விஜயகுமார்:** நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் எங்களுடைய இயக்கத்தினுடைய வித்து. அவருக்கு சிலை அமைத்து பெருமை சேர்த்துத் தந்தவர் மாண்புமிகு தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு மணி மண்டபம் கட்ட இடத்தை ஒதுக்கினீர்கள். இன்றைக்கு நடிகர்கள் நாட்டை ஆளலாம் என்று அரசியலுக்கு வந்திருக்கின்ற நடிகர்கள் எல்லாம் பூஜையும் போட்டார்கள். ஆனால் இன்றைக்கு வரைக்கும் மணி மண்டபம் கட்டப்படவில்லை. எனவே அன்புகூர்ந்து தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதைச் செயல்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இலவச எரிவாயு அடுப்பு. மிகவும் ஏழையாக இருக்கின்றவர்கள், சேரிப் புறத்திலே இருக்கின்றவர்கள், கூலி வேலை செய்பவர்கள், அவர்கள் உபயோகிக்கும் சிலிண்டர்களுக்கு மானியம் வழங்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஜயகுமார், (குறுக்கீடு) no, no. no. உட்காருங்கள். திரு. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்திலே பங்குபெறச் செய்து எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய வீரத்தின் விளைநிலைம், விவேகத்தின் இருப்பிடம், அன்பின் திருவுருவம், அறிவின் பிறப்பிடம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஒரே அரசியல் வாரிசு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, இந்தப் பேரவையில் பேசத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் நிதிநிலை அறிக்கையிலே கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படும் என்று சொன்னீர்கள். நீங்கள் அறிவித்ததுபோல கூட்டுறவுத் தேர்தலை நடத்தினீர்கள். ஆனால் வாக்குகள் எண்ணப்படுகின்ற சூழ்நிலையிலே அந்த கூட்டுறவுத் தேர்தலில் பதவியைப் பங்கு போட்டுக்கொள்வதிலே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அந்தத் தேர்தலை நீங்களே இரத்து செய்து விட்டீர்கள். ஆகவே நீங்கள் உங்களுடைய ஆட்சியில் சட்டம் ஒழுங்கை உங்களாலேயே காப்பாற்ற முடியவில்லை என்று நீங்களே எடுத்துக் கொடுத்துக்கொண்ட ஒரு சர்ட்டிபிகேட்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தேர்தலை நிறுத்தியதற்குக் காரணமே, அரசு எடுத்த நடவடிக்கைக்குக் காரணமே, பல இடங்களில் தவறான நடவடிக்கைகள், அதிலே குழப்பங்கள், அதிலே சம்பந்தமில்லாத நிலை வந்ததாலே அதை நிறுத்தி வைத்தோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார் அல்லவா?

**திரு. மா. சந்திரகாசி:** இந்த ஆட்சியில் சாதாரண மக்களுக்குத்தான் பாதுகாப்பு இல்லையென்றால், அரசியல் தலைவர்களுக்குக்கூட பாதுகாப்பு இல்லை என்று, நாங்கள் மட்டும் சொல்லவில்லை. உங்களுக்குத் தோள் கொடுத்துக் கொண்டிருக்கின்ற கூட்டணிக் கட்சித் தலைவர்களே சொல்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்றுவது என்பது அரசாங்கத்தினுடைய கடமை. சட்டமும் ஒழுங்கும் எந்த இடத்திலே தவறுகிறதோ அந்தத் தவறுகிற இடத்தைத் தொடர்ந்து நீடிக்காமல் நிறுத்தி சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காகத்தான் அந்தத் தேர்தல் நிறுத்தப்பட்டது.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நவீன நூலகம் கட்டப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். அதேபோல 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நவீன நூலகம் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆக, போன ஆண்டு ஒதுக்கிய நிதியிலேயிருந்து அந்த நூலகக் கட்டடம் கட்டப் போகிறீர்களா அல்லது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கின்ற ரூ.100 கோடி நிதியிலிருந்து. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைகளைச் சொல்கிறபோது, தாங்கள் சொல்வதற்கு என்ன பொருள் என்று தெரிந்துகொண்டு சொல்ல வேண்டும். ஏனென்றால், ஒரு ஆண்டு நிதி ஒதுக்கினாலும் அப்போது ஒதுக்கிய நிதி அடுத்த ஆண்டு கணக்கிலே வந்து, அது தொடர்ந்து கொண்டே இருக்கும். ஒரு ஆண்டில் ஒதுக்கியது அடுத்த ஆண்டோடு அந்த நிதி, தனியாக கடையிலே போய் வடை வாங்கி வரச் சொல்கிறபோது வடைக்கு ஓர் அணா, காராபூந்திக்கு ஓர் அணா என்று 2 அணாவைக் கொடுத்து அனுப்பியவனை, எந்த அணாவுக்கு வடை, எந்த அணாவுக்கு காராபூந்தி என்று கேட்டதுபோல, கடந்த ஆண்டு ஒதுக்கிய பணத்திலா, இந்த ஆண்டு ஒதுக்கிய பணத்திலா என்று கேட்பது சட்டமன்ற முறை தெரிந்தவர்கள் கேட்கக்கூடியது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 7,979 புதிய ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, நிரப்பப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். அதேபோல, 2008-2009 ஆம் ஆண்டு நிதியாண்டில் காலியாக இருந்த 21,574 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன, மேலும், 7,979 புதிய ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆக, சென்ற ஆண்டும் 7,979 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல இந்த வருடமும் சொல்லியிருக்கிறீர்கள். அதேமாதிரி சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 24,642 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று சொல்லிவிட்டு, இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலே 21,574 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆக, இந்த கருத்து வேறுபாட்டை இந்த நிதிநிலை அறிக்கையிலே சரியான முறையில் விளக்காததால் ஏற்பட்ட குழப்பமே தவிர, இதை நாங்கள் கேட்க வேண்டும், குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-20

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** இல்லை, இல்லை. 7,979 இடங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. நிதிநிலை அறிக்கையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுமட்டுமின்றி, 7,979 புதிய ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, நிரப்பப்பட்டு வருகின்றன. கடந்த நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் அறிவித்திருக்கக்கூடிய அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, வேலைவாய்ப்புப் பதிவகங்கள்மூலமாக—T.R.B.-மூலமாக நாம் எடுக்கவில்லை—வேலைவாய்ப்புப் பதிவகங்களில் 1:1 என்ற விகிதத்தில் எடுக்கப் போகும்போது, நிறைய பேர் ஏற்கெனவே பல இடங்களிலே வேலைவாய்ப்பிலே இருப்பதனால், ஒவ்வொரு முறையும் நமக்கு வரக்கூடிய அந்த list-ஐப் பார்த்தீர்களென்றால், கொஞ்சம் பேர்தான் வருகிறார்கள். 5 ஆயிரம் பேர்தான் முதலிலே வந்து join பண்ணினார்கள். 3 ஆயிரம் பேர், 4 ஆயிரம் பேர் விட்டுப்போயிருந்தார்கள். மீண்டும் அவர்களை call for பண்ணியிருந்தோம். எனவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லும்போது, இப்போது அதை 1:5 என்ற விகிதத்தில் மாற்றிவிட்டு, மேலேயிருக்கிற அந்த ratio—வை அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, 2006-2007-ல் 85 பக்கங்களும், 2007-2008 ஆம் நிதியாண்டில் 85 பக்கங்களும், 2008-2009 ஆம் நிதியாண்டில் 90 பக்கங்களும் கொண்ட நிதிநிலை அறிக்கையில், இந்த மாநிலக் கல்வி, அதாவது பள்ளிக் கல்வித் துறை மட்டும், சரியாக 17-வது பக்கத்தில், சென்ற வருடம் என்ன அச்சடிக்கப்பட்டதோ, அதையே திருப்பி அச்சடிக்கப்பட்டதுபோல, பக்கம்கூட மாறாமல், இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருக்கிறது; இது ஒன்று. இரண்டாவது, முதலாம் ஆண்டும், இரண்டாம் ஆண்டும் வெள்ளை colour-ல் print செய்யப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை, இந்த ஆண்டு மட்டும் மஞ்சள் colour-ல் print செய்யப்பட்டுள்ளது என்பதுதான் வித்தியாசமாகத் தெரிகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு எந்த colour என்றே தெரியவில்லை. அவர் முதலில் கண் சிகிச்சை செய்து கொள்வது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மா. சந்திரகாசி:** நரிக்குறவர்களுக்கு வாரியம் வேண்டுமென நான் கேட்டவுடன், நரிக்குறவர்கள்போல வேடமிட்டு நடித்தவர்கள்கூட செய்யாததைச் செய்துவிட்டதாக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்கள் கூறியிருந்தார்கள். நான் ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நரிக்குறவர் இன மக்களுக்காகவும், அந்தச் சமுதாயத்திற்காகவும் எண்ணற்ற பல சேவைகளையும், பல நலத் திட்டங்களையும் சொல்லியிருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அந்தச் சமுதாயத்தினுடைய மக்கள் இன்றளவும் அவரைத் தெய்வமாக நினைத்து, பாவித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அவர்கள் கொண்டிருந்த கொள்கையை மேலும் கொண்டிருந்து, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை இந்த அவையின் அமைச்சராக ஆக்கி, அழகு பார்த்தார் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை வெறும் அறிவிப்புகளின் தொகுப்பு. வழக்கம்போல இந்த ஆட்சியில் அறிவிப்புகள் மட்டும்தான் வரும். ஆனால், எதுவும் நடக்காது; இந்த ஆட்சியில் நடக்காது. இந்த இடத்தில் எனக்கு ஒரு திரைப்படத்தில் வருகின்ற ஒரு நகைச்சுவை நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. அதாவது, 'வரும், ஆனால் வராது'. அப்படி ஒரு நிகழ்ச்சியைப்போல, இந்த ஆட்சியில், பயிர்க் கடன் வட்டிக் குறைப்பு அறிவிப்பு வரும்; ஆனால், மக்களுக்குச் சென்றடைவதில்லை. அதுபோல, வாரியங்கள் பல அறிவிக்கப்படும்; அது மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால், தெரியவில்லை. மெட்ரோ இரயில் திட்டம் வரும்; ஆனால், அந்த இரயில் வராது. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் வரும்; ஆனால், நீர் வராது. இதுபோன்று பல்வேறு அறிவிப்புகள், வெறும் அறிவிப்புகளாகத்தான் இருக்கின்றனவேயொழிய, இவை மக்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்று பார்த்தால், ஒன்றும் சேரவில்லை.

அண்மையில் பெய்த தொடர் மழையின் காரணமாக, எங்களது வரகூர் தொகுதிக்குட்பட்ட, நன்னை, அகரம், தத்தலாமேடு, மண்டபம், வடக்களூர்...

[2008 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-மீது நாங்கள் அதிகமாக மதிப்பு வைத்திருக்கிறோம்; மரியாதை வைத்திருக்கின்றோம். ஆனால், அவர் செய்யாத ஒன்றைச் செய்ததாக, இந்த அவையிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற ஒருவர், நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்தவர் அல்ல; அவர் சாதாரண ஒரு குறவர் இனத்தைச் சேர்ந்தவர். அவரைத்தான் அமைச்சராக ஆக்கினாரே தவிர, நரிக் குறவர் இனத்தைச் சேர்ந்த ஒருவரை அமைச்சராக ஆக்கவில்லை என்பதை இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய சான்றிதழில் நரிக்குறவர் என்றிருக்கிறது. அதை இங்கே புரிந்துகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. மா. சந்திரகாசி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நரிக்குறவர் இன மக்களுக்கு அவர்களுடைய முன்னாள் முதல்வர் அவர்கள்தான் நலத் திட்ட உதவிகளையெல்லாம் செய்தார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக அவர்கள் எதுவும் செய்யவில்லை. எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான், நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, மதுரை மாவட்டத்திலே, சமயநல்லூர் தொகுதியில், நரிக்குறவர்களுக்கென்று வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குறுக்கீட்டில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2008 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அ.தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, 'வரும்; வராது' என்பதற்குச் சில விளக்கங்களை எல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவர் குறிப்பிட்டதில் ஒன்று; 'கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் வரும்; ஆனால், இந்த ஆட்சியில் வராது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், உங்கள் ஆட்சியில் உருவாக்கப்பட்ட அந்தக் கடல் நீரைக் குடிநீர் ஆக்கக்கூடிய திட்டத்தை கிடப்பிலே நீங்கள் போட்டுவிட்டீர்கள். தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் இப்போது அது முடுக்கி விடப்பட்டு அந்தப் பணிகளெல்லாம் வேகவேகமாக நடைபெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் 4, 5 மாதங்களில் அந்தக் குடிநீர் சென்னைக்கு வரவிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

அதுமட்டுமல்ல. மத்திய அரசு, நீங்கள் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது கடல் நீரைக் குடிநீர் ஆக்கக்கூடிய திட்டத்திற்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கியபோது அதைப்பற்றிக் கவலைப்படாமல், அதற்கான முயற்சியிலே ஈடுபடாமல் இருந்தது உங்களுடைய ஆட்சி. ஆனால், இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசிடம் எடுத்துக்கூறி, அதற்காக இப்போது மத்தியிலே பட்ஜெட்டில் தாக்கல் செய்கிறபோது நிதியமைச்சர் அவர்கள் 300 கோடி ரூபாய் முதல்கட்டமாக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணியும் விரைவிலே தொடங்கப்பட்டு நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்திரகாசி, (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் பேசவேண்டுமா, வேண்டாமா? நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) திரு. சந்திரகாசி, பேசுங்கள். (குறுக்கீடுகள்). No, முடியாது Sir. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முடியாது. திரு. சந்திரகாசி, பேசுங்கள். நீங்கள் பேசுகிறீர்களா? அடுத்த அலுவலுக்குப் போய்விடுவேன். பேசுங்கள், திரு. சந்திரகாசி. (குறுக்கீடுகள்) முடியாது, முடியாது. Not allowed. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) (மணியடிக்கப்பெற்றது)

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகாசி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் பெய்த கன மழையின் காரணமாக எங்கள் தொகுதிக்கு உட்பட்ட கத்தாழமேடு, வடக்களூர், ஒகளூர் அகரம் சீகூர், வயலூர், கைப்பெரம்பலூர், கீழ்முத்தூர், கொளக்காநத்தம் போன்ற பல்வேறு கிராமங்களில் அதிகப்படியான நெல் பயிர்கள் விளைந்து அறுவடை செய்கின்ற சூழ்நிலையில் அவை நாசமாகிவிட்டன. இந்தச் சூழ்நிலையில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய சிறிய மாவட்டமாக இருக்கின்ற எங்கள் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரையில் அந்த பாதிக்கப்பட்ட பகுதி மக்களை நேரில் பார்த்து ஆறுதல் கூறவில்லை என்பதை மிகுந்த வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த கடும் மழையினாலும், தற்சமயம் பெய்த கடும் மழையினாலும் கைத்தறி நெசவாளர்களுடைய தறிக் குழிகளில் மழை நீர் புகுந்து விட்டதால் அந்தத் தறிக் குழிகளை மறுபடியும் அந்த நெசவாளர்கள் பயன்படுத்தாத சூழ்நிலையில், விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதுபோல அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென உங்களை இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகின்ற அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும், அந்த ஊராட்சிக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு வேண்டிய விளையாட்டு மைதானம் செப்பனிடவும், விளையாட்டு மைதானத்திற்கு வேண்டிய உபகரணங்கள் வாங்குவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், எங்கள் வரகூர் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் 2006-2007 ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட அந்த நிதி இன்னும் சரியாகச் செலவிடப்படாததால் அந்தப் பள்ளி மாணவர்கள் இதுவரையில் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. ஆக, இந்த நிதி அந்த மாணவர்களுடைய விளையாட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதா? ஏன் அதைச் சரியாகப் பராமரிக்கவில்லை என்று இந்த மாமன்றத்தின்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.



எங்கள் மாவட்டத்தில் அண்மையில் J.M.C. அதாவது அமர்வு நீதிமன்றம் எங்கள் குன்னம் வட்டத்திற்கு—அது ஒரு வட்டத்திற்குக் கொடுக்க வேண்டிய அந்த அமர்வு நீதிமன்றம். அது பெரம்பலூர் ஆட்சியரின் பெருந்திட்ட வளாகத்தில் அமைக்கப்படுவதாக நான் அறிகிறேன். ஆக, எங்கள் வரகூர் தொகுதிக்கு உட்பட்ட அந்த குன்னம் பகுதியிலேயே அந்த அமர்வு நீதிமன்றத்தை அமைத்து பின்தங்கிய மக்கள் அதிகம் வாழும் குன்னம் பகுதி மக்களுக்கு அந்த நீதிமன்ற வளாகம் பயன்பட வேண்டுமென்று பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாநிலத்திலுள்ள ஆதிதிராவிடர்கள் மிகவும் தாழ்த்தப்பட்டவர்கள், TAHDCO திட்டத்தின்மூலம் 70 கோடி ரூபாய் கடன் பெற்றிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் கணக்கிடும்பொழுது மிகக் குறைவான நிதி. இந்த நிதியை ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்து தமிழகத்தின் ஒட்டுமொத்த ஆதி திராவிட மக்களுக்கும் ஒரு நல்ல காரியத்தைச் செய்துவைக்க வேண்டுமென்று இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அண்மையில், இப்போது பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள், பெரியாருக்கு என்று எந்த (குறுக்கீடுகள்)— பெரியாரைப்பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குத் தெரியாது என்று சொன்னார்கள். தந்தை பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அமல்படுத்தியபோது (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றவர்தான் இன்றைய நமது தமிழக முதல்வர். . .

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. உரையை முடியுங்கள், திரு. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 நிதி ஆண்டில் நபார்டு திட்டத்தின்மூலம் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படும் என அறிவித்திருந்தீர்கள். பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் 6 பள்ளிக்கூடங்களும், என்னுடைய வரகூர் சட்டமன்றத் தொகுதியில்

1 பள்ளிக்கூடமும் ஆக மொத்தம் எங்கள் பெரம்பலூர் மாவட்டத்திற்கு 7 பள்ளிக்கூடங்கள் தேர்வு செய்யப்பட்டன. ஆனால், ஒட்டுமொத்தமாக எனது மாவட்டத்தில் 7 பள்ளிக்கூடங்கள் தேர்வு செய்யப்பட்டும் நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் என்ற ஒரே காரணத்திற்காக என்னுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று தாட்கோ கடன், விவசாயிகள் வாங்கிய அந்தக் கடனை ஐந்தரைக் கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இதற்கு முன்பு ஆட்சி செய்தவர்கள் அதைப்பற்றி என்னவென்றே கவலைப்படாமல் அவர்களுக்கு எந்தவித கடனுதவியும் வழங்காமல், இன்றைக்கு அந்தக் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிற நிலையில், அதைப் பாராட்டாமல், இங்கு அதை ஒரு குறையாக ஒரு குற்றமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தில் 7 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, அதில் வரகூர் தொகுதியில் மட்டும் ஓரேயொரு பள்ளிக்கூடம் (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடங்கள். ஓரேயொரு பள்ளிக்கூடம் மட்டும் தேர்வு செய்திருக்கிறார்கள். அப்படியென்றால் இந்தப் பள்ளிக்கூடங்களைத் தேர்வு செய்யும்போது அரசியல் கட்சிகளுடைய அடிப்படையில் தேர்வு செய்கிறார்களா அல்லது ஏதாவது அளவுகோல் இருக்கிறதா என்பதை பேரவைத் தலைவர்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி தொடங்கப்பட்டது. ஆனால் பணி நடப்பதற்கான முதல் பகுதி பட்டியல் தொகை ரூபாய் இரண்டு இலட்சம் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்டடப் பணியின் காலதாமதத்தினால் பணி இடையிலே நிறுத்தப்பட்டுவிட்டது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. சந்திரகாசி உட்காருங்கள். 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதம் மீண்டும் 31-3-2008 அன்று திங்கட்கிழமை தொடரும். இப்போது இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள அடுத்த அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

## 5. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007-2008, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007-2008 ஆம் ஆண்டின் கூடுதல் மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2007-2008."

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007-2008, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26-3-2008 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**நிறைவேற்றப்பெற்ற 2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 10,19 | — | — |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 1,66,98 | — | — |
| 3. | நீதி நிருவாகம் | 10 | — | — |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 35 | 39,57,05 | — |
| 5. | வேளாண்மைத் துறை | 71 | 11,08,88 | — |
| 6. | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 11 | 6,97,47 | — |
| 7. | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | 8 | 3 | — |
| 8. | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை) | 4,35,82 | — | 3,30,52 |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 23 | 3,21,58 | — |
| 10. | வணிக வரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | 13,67,82 | — | — |
| 11. | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 8,74,28 | — | — |
| 12. | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 11,14,42 | 24,32,24 | 1 |
| 13. | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 30,18 | — | 300,00,00 |
| 14. | எரிசக்தித் துறை | 21,53,95 | 250,00,00 | 4,91,99 |
| 15. | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 9 | 6 | 8,16,00 |
| 16. | நிதித் துறை | 15 | — | 6,43,99 |
| 17. | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 8 | — | — |

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 18. | கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 5,34,00 | 7,50 | — |
| 19. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 82 | — | — |
| 20. | உயர் கல்வித் துறை | 29 | 4,12,31 | — |
| 21. | நெடுஞ்சாலைகள் துறை | 9 | 20 | — |
| 22. | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 47 | 24,71,15 | — |
| 23. | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை– மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3 | — | — |
| 24. | சிறைச்சாலைகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5 | 2,25,75 | — |
| 25. | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 6 | — | — |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 6 | — | 113,40,00 |



| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 27 | தொழில் துறை | 4,69,60 | 165,49,00 | 170,00,38 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 6 | — | 5,22 |
| 29 | சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 5,32,06 | 53,79 | — |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 6 | 73,57 | — |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 9,09,76 | — | — |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 16 | 2,87,95 | — |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 136,29,40 | 3,84,17 | 2 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 1,61,34 | — | — |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 5 | 1 | — |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 2,34,79 | — | — |
| 38 | பொதுத் துறை | 1,30,30 | 2,73,57 | — |

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 11 | 10 | — |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 11 | 23 | — |
| 41 | வருவாய்த் துறை | 54 | 7,37 | — |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 37 | 85,36,68 | — |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 36 | 2 | — |
| 44 | சிறு தொழில்கள் துறை | 3 | 61,99 | 9,82 |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 41 | 6,20,39 | — |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 2,20,45 | — | — |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 1 | — | — |
| 48 | போக்குவரத்துத் துறை | 3 | 2 | 14,14,97 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 3,71,47 | 3,96 | — |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 15,59,33 | — | — |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 406,40,52 | — | — |
| | பெருமொத்தம் | 655,52,73 | 634,87,04 | 620,52,92 |



## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2008-2009, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008-2009 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial Year 2008-2009."

பிற்பகல் 1-35

## 7. முன்பண மானியக் கோரிக்கைகள், 2008-2009, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008-2009 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26-3-2008 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2008-2009 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.







[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### நிறைவேற்றப்பெற்ற 2008-2009 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 5,75,53 | – | – |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 4,65,58 | – | – |
| 3. | நீதி நிருவாகம் | 65,16,86 | – | – |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 174,02,94 | 18,14,74 | – |
| 5. | வேளாண்மைத் துறை | 339,26,78 | 30,33,06 | – |
| 6. | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | 62,60,11 | 8,27 | – |
| 7. | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | 25,13,44 | 5,04,86 | – |
| 8. | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | 8,17,49 | – | 9,03,47 |

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 100,30,58 | 13,22,72 | – |
| 10. | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 52,33,65 | – | – |
| 11. | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 36,99,86 | – | – |
| 12. | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 94,81,76 | 2,56,46,30 | 21,34 |
| 13. | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 867,03,91 | 13,20 | 360,00,00 |
| 14. | எரிசக்தித் துறை | 307,79,01 | 25,00,00 | 1 |
| 15. | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 83,29,04 | 49,56,48 | – |
| 16. | நிதித் துறை | 131,82,71 | – | 6,10,63 |
| 17. | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 143,37,39 | 7,50 | – |



| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 18. | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 15,91,78 | – | – |
| 19. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 646,60,11 | 38,57,73 | – |
| 20. | உயர் கல்வித் துறை | 298,16,08 | 15,33,66 | – |
| 21. | நெடுஞ்சாலைகள் துறை | 498,04,14 | 1,173,58,45 | – |
| 22. | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 551,23,57 | 54,85,82 | 25,00 |
| 23. | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 30,86,60 | 1,44,71 | – |
| 24. | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 22,50,74 | 2,59,75 | – |
| 25. | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 18,54,77 | – | – |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 76,80,54 | 173,86,66 | 27,12,50 |

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 27 | தொழில் துறை | 76,31,61 | 2,71,09 | 50,00,00 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 9,04,23 | 24,25 | – |
| 29 | சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை | 17,56,15 | 6,62,34 | 1 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 18,52,46 | 1,00,02 | – |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 192,71,53 | 2,50,00 | – |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 101,18,25 | 83,22 | – |
| 33 | சட்டத் துறை | 3,52,37 | – | – |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 551,61,30 | 219,11,82 | 54,95,14 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 9,32,91 | 3,75 | – |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 10,90,16 | 3,66,79 | – |



| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை) | 13,46,18 | – | – |
| 38 | பொதுத் துறை | 37,24,59 | 1,25,00 | – |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 60,26,18 | 200,50,54 | – |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 294,29,60 | 380,21,76 | – |
| 41 | வருவாய்த் துறை | 623,71,78 | 17 | – |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 887,90,55 | 261,79,72 | – |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 1,922,58,88 | 40,41,25 | 1,37 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 21,01,01 | 19,94 | – |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 433,27,41 | 20,22 | – |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 6,19,19 | – | – |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 13,67,60 | 40,00 | – |

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 48 | போக்குவரத்துத் துறை | 84,93,24 | 41,29,20 | 41,25,01 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 11,88,91 | 1 | 62,50 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 1,983,03,48 | – | – |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 218,80,51 | – | – |
| | பெருமொத்தம் | 12,264,25,05 | 3,021,35,00 | 549,56,98 |

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2008) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

[2008 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2008), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

@ 28-3-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2008 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2008 மார்ச் 28

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2008), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 28-3-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2008 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 1-40

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2008 மார்ச் 28

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *21-4-2008* திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் *27* – தொழில் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் *31* – தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகியவை *5-5-2008* திங்கட்கிழமையன்றும், *5-5-2008* திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் *45* – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை *21-4-2008* திங்கட்கிழமையன்றும் பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் *31-3-2008* (திங்கட்கிழமை) காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-41* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*14. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*15. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*16. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



2008 மார்ச் 28]

*17. 2005-2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*18. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*19. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*15. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

228103